கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
3.12.2006 ரூ.8.00
80 பக்கங்கள்





இதம் தந்து
ரணம் ஆற்றும்



சைபால்

BEST SKIN OINTMENT

எரிச்சல் தரும் வெட்டுக்காயத்தின் மேல் சைபால் தடவுங்கள். எரிச்சலைப் போக்கி இதம் தரும். காயம் இருந்த சுவடே காணாமல் போகும்.

வெட்டுக்காயம், முகப்பரு, சேத்துப்புண், வேனல்கட்டி, பித்தவெடிப்பு
முதலிய வியாதிகளுக்கு சிறந்தது.

Mfrs.
THE SOUTH INDIAN MFG. CO.,
MADURAI - 20. Ph: 2534108



சைபால்: எல்லோர் வீட்டிலும் இருக்கவேண்டிய ஒன்று











கல்கி 3.12.2006

ஐயப்பனைத் தேடி...

– சினிமாத்தனம் இல்லாத சினிமா முயற்சி



சிம்பொனி ரிக்கார்டிங் கம்பெனி தமது புதிய முயற்சியாக வீடியோ சிடி ஒன்றை வெளியிட்டுள்ளது. 'ஐயப்பனைத் தேடி' என்னும் பெயர் தாங்கி வந்துள்ள இந்த மியூசிக்கல் வீடியோ சிடி படத்தில் சிம்பொனி உரிமையாளர் ஸ்ரீஹரி, 12 வேடங்களை ஏற்றுப் பாடி நடித்துள்ளார். ஐயப்ப பக்தர்களின் உள்ளத்தைத் தன்வசமாக்கப் போகும் இந்த முயற்சியைப் பற்றி ஸ்ரீஹரியிடம் பேசினோம்...



"இது எங்கள் நிறுவனத்தின் புதிய முயற்சி என்பதைவிட, அரிய முயற்சி என்றே சொல்லலாம். பக்தி சிடி-க்களின் பக்கம் தமிழக மக்களைத் திரும்பிப் பார்க்க வைக்க என்ன செய்யலாம் என்று யோசித்த போது இந்த ஐடியா பிறந்தது. பக்திக் கேசட்டுகளை வெளியிட்டு ஏற்கெனவே மக்கள் மனதில் இடம் பெற்றுள்ள சிம்பொனி, சினிமாத்தனம் இல்லாத சினிமா செய்ய எண்ணி எடுத்து வைத்து முதல் அடிதான் இந்த ஐயப்பனைத் தேடி" என்றவர், இதன் கதையைச் சிலிர்ப்போடு சொல்லத் தொடங்கினார்...





"ஜோதிபுரம் ஓர் அழகிய ஆன்மிக கிராமம். அங்குள்ள ஐயப்ப சேவா சங்கத்தின் குருசாமிக்கு ஒரு மனக்குறை. பதி

• பல்வேறு வேடங்களில் ஸ்ரீஹரி...



னேழு வருடங்கள் மலைக்குச் சென்று வந்தவர், ஐயப்பன் சிலை ஒன்றை நிறுவி வழிபட எண்ணுகிறார். குருசாமியும் மற்ற ஐயப்ப பக்தர்களும் இந்த ஏக்கத்துடன் உண்டியலில் பணம் சேர்த்து வருகின்றனர். ஒருநாள் இரவு பக்தர் ஒருவருக்கு 'இப்போது நீ கிழக்குப் பக்கம் கிளம்பிச் சென்றால், நீங்கள் விரும்பிய ஐயப்பன் விக்ரகம் மண்ணிலிருந்து கிடைக்கும்' என்ற அசரீரி வாக்கு ஒலிக்கிறது.

ஐயப்ப பக்தரும் கிழக்கு நோக்கிப் போகிறார். சில ஊர்களைக் கடந்து சென்ற பிறகு, குறிப்பிட்ட இடத்தில் ஐயப்பன் விக்ரகம் இருப்பதை அறிகுறிகளால் உணர்ந்து மண்ணைத் தோண்ட, ஐம் பொன்னாலான ஐயப்பன் சிலை கிடைக்கிறது.

தமிழக மக்களை திரும்பிப் பார்க்க வைக்கும் முயற்சி!

ஆனால், அந்த ஊர்ப் பண்ணையார் இதைப் பார்த்து விடுகிறார். சிலையைப் பிடுங்கிக்கொண்டு பக்தரை அடித்து விரட்டவும் முற்படுகிறார். ஐயப்ப விக்ரகத்தை அந்தப் பக்தர் எப்படி மீட்டு அவர்களிடமிருந்து தப்பி வருகிறார் என்பதே கதை" என்றார் ஸ்ரீஹரி.

'யாத்திரையாம் யாத்திரை' என்ற பாடலோடு ஆரம்பிக்கும் சி.டி எழுபத்திரண்டு நிமிடங்கள் ஓடுகிறது. கதை, ஐயப்பன் பெருமைகளைச் சிறுமைப்படாமல் சொல்கிறது. பாடல்களின்போது பெரிய பாதையின் பகுதிகள் விஸ்தீரணமாகக் காட்டப்படுகின்றன. ஐந்து பாடல்களும் பரவசப்படுத்துகின்றன. ஸ்ரீஹரியின் 12 வேடங்களும் கனகச்சிதமாகப் பொருந்தி உள்ளன. ஐயப்ப பக்தர்களுக்கு 'ஐயப்பனைத் தேடி' நிச்சயம் ஒரு பொக்கிஷம் தான்!

- ஆதித்யா

கல்கி
ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி
தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்
வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

உற்சாகமாக இருக்கிறார் வைகோ. நம்மைச் சந்தித்தபோது, "2007-ல் அரசியலில் அநேக மாற்றங்களைக் காணத் தயாராகுங்கள்" என்றார். தொடர்ந்து நமது கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

உள்ளாட்சித் தேர்தலில் ம.தி.மு.க. தன் வலிமைக்கேற்ப கணிசமான இடங்களைப் பெற்றதாகத் தெரியவில்லையே?

"அப்படியெல்லாம் இல்லை. மூன்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்களைப் பெற்றிருக்கிறோம். ஐந்து இடங்களில் ஒரு வோட்டு வித்தியாசத்தில் தோற்றோம். இருபத்திரண்டு பேரூராட்சித் தலைவர் பொறுப்புகள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. கோவில்பட்டி நகராட்சியில் திருவுளச் சீட்டுப் போட்டதில் எங்களுக்குத் தலைவர் வாய்ப்பு நழுவிப் போயிற்று. மாவட்டப் பஞ்சாயத்தில் தூத்துக்குடியில் துணைத் தலைவர் பொறுப்பு கிடைத்திருக்கிறது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாவட்டப் பஞ்சாயத்தில் கவுன்சிலர்கள் பொறுப்புகளுக்கு எங்கள் கட்சி கணிசமாகவே வெற்றி பெற்றிருக்கிறது.

வேலம்பாளையம் நகராட்சியில் அதிகாரத்தைப் பயன்படுத்தி எங்களுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பை ஆளுங் கட்சி தட்டிப் பறித்தது. இருந்தும், ஆளும் கட்சியின் அராஜகம் மற்றும் குதிரை வியாபாரத்துக்கு அடிபணியாமல் எங்கள் உறுப்பினர்கள் உறுதி குலையாது நிமிர்ந்து நின்றனர். தலைவர்கள் பொறுப்புக்கு நேரடித் தேர்தல் நடைபெற்றிருந்தால், எங்களுக்கு வாய்ப்பு அதிகமாகவே இருந்திருக்கும்!"

எப்படிச் சொல்கிறீர்கள்? ஆரம்பித்து ஒரு வருடமே ஆன தே.மு.தி.க., மூன்றாவது இடத்தைப் பெற்றுவிட்டதே!

"பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் கட்சி துவங்கியபோது எங்களுக்குக் கிடைத்த மக்கள் ஆதரவு இன்னும் குறைந்து போய்விடவில்லை. கட்சி துவங்கிய புதிதில் நடந்த பெருந்துறை சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட நாங்கள் தி.மு.கவை முந்தினோம். 1996-ல் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டுடன் இணைந்து போட்டியிட்டு, ஒன்பது நகராட்சிகள், முப்பத்தாறு பேரூராட்சிகளைப் பெற்றோம். அப்போது நேரடித் தேர்தல் நடைபெற்றது. ஆனால், தற்போது கூட்டணி கட்சிகளைக்கூட கலந்து ஆலோசிக்காமல் மறைமுகத் தேர்வு முறையைக் கொண்டு வந்த கலைஞர், எல்லாம் முடிந்த பிறகு மறு பரிசீலனை செய்யலாம் என்று சொல்வது மக்களை முட்டாளாக்கும் செயல்!"

ஜெயலலிதாவுடன் ஒப்பிடும்போது நீங்கள் மூத்த தலைவர். அப்படியிருக்க, அவருக்கு ஒத்து ஊதுவது போல நடந்து கொள்வதாக உங்கள் மீது விமர்சனம் எழுகிறதே!

"அத்தகைய விமர்சனம் தவறானது. நாங்கள் யாருக்குமே ஜால்ராக்கள் அல்ல! தி.மு.க. எங்களை அவமதித்து, ஏமாற்றியதால் 'அவர்கள் தொடர்பே வேண்டாம்' என்று எங்கள் தொண்டர்கள் முடிவெடுத்தார்கள். இப்போது அ.தி.மு.க. கூட்டணியில் எங்களுக்கு மரியாதை, கௌரவம் எல்லாம் கிடைக்கிறது. உடன்பட வேண்டிய விஷயங்களில் உடன்பட்டாலும், எங்களுக்கென்ற சில தனிப் பிரச்னைகளிலும் நாங்கள் முனைப்புக் காட்டி வருகிறோம்."

திராவிட இயக்கக் கொள்கைகளை உறுதியாகக் கடைபிடிப்பது தி.மு.க.தான் என்று முதல்வர் கூறுகிறாரே...

"ஜெயலலிதா கோயிலுக்குப் போவது எல்லோருக்கும் தெரியும். எம்.ஜி.ஆர். வெளிப்படையாகவே செய்தார். நான் கோயிலுக்குச் செல்வதுமில்லை; செல்பவர்களைத் தடுப்பதுமில்லை. ஆனால் கலைஞர் திரைமறைவில் செய்கிறார். இதை அவர் மறுக்கத் தயாரா? தட்சிணாமூர்த்தி கடவுளுக்கு உரித்தான மஞ்சள் ஆடையைக் கைவிட மாட்டேனென்கிறார். இதுதான் பகுத்தறிவா?"

நீங்கள் மத்தியில் ஐ.மு. கூட்டணியில் நீடிப்பதாகச் சொல்கிறீர்கள். அரசில் பங்கேற்காமல் ஆதரிப்பதோடு நிறுத்திக் கொள்கிறீர்களே...?

"ஐந்து மந்திரிகள், இருபது



எம்.பிக்களுடன் இருந்த த.மா.கா. காங்கிரஸில் அல்லவா கரைந்து போனது! 1967 வரை தி.மு.க. எந்த மந்திரி சபையில் இருந்தது? கட்சி வளர்ந்ததே! இப்போது இடதுசாரிகள் பங்கெடுத்துக் கொள்ள வில்லையே! அந்த இயக்கங்களும் வளர்கின்றனவே... சில தவறான முடிவுகளுக்கு நாங்கள் பொறுப்பாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான், அரசில் பங்கேற்கவில்லை."

ஜெயலலிதா, விஜயகாந்தைத் தாக்கி அறிக்கை விட்டபோது, அந்த சர்ச்சை வளரக்கூடாது என்று அவரை நீங்கள் சமாதானம் செய்தீர்களாமே!

"இரண்டு பேரும் தனிப்பட்ட முறையில் சந்திக்கும்போது, பேசப்படும் பேச்சுகள் மூன்றாவது நபருக்குத் தெரிவதற்கு வாய்ப்பே இல்லை. அந்த வகையில் இதைப் போன்ற செய்திகள் பத்திரிகைகளின் யூகங்களே!"

நல்லுறவு நோக்கில்தானே அண்டை மாநிலத்துடன் முல்லைப் பெரியார் விஷயத்தில் பேச்சு வார்த்தையில் முனைப்பு காட்டுகிறார், முதல்வர். இதைக் கண்டிப்பது எந்த விதத்தில் நியாயம்?

"கேரள முதல்வர் அச்சுதானந்தன் 'அணையை ஒப்படைக்க வேண்டும்' என்று பிரதமரிடம் சொல்கிறார். இது தமிழர்களின் தலையில் நெருப்பைக் கொட்டும் தப்பான கோரிக்கை. இனி பேச்சுவார்த்தை என்றால், அது அணையை 142 அடி உயர்த்துவதற்கான பேச்சாக மட்டுமே இருக்க வேண்டும்!"

தமிழகத்தில் அணி மாற்றம் வருமென்று எப்படிக் கூறுகிறீர்கள்?



"நாங்கள் ஜால்ராக்கள் அல்ல!"

"தி.மு.க. கூட்டணி உடைந்து, தி.மு.க. அரசு கவிழும். மத்தியில் நாடாளு மன்றத்துக்கு தேர்தல் வரும். இது உறுதி!"

- ப்ரியன்

அட்டை மற்றும் படம் : ஸ்ரீஹரி



"பல் பிடுங்கினா வலிக்குமா டாக்டர்?"
"எனக்கு வலிக்கவே வலிக்காது. நீ அதற்காகக் கவலைப்படாதே."
- ஆர். நரசிம்மன்





"என்னது... இந்த டாக்டர் 'டோர் டெலிவரி உண்டு'னு எழுதி வச்சிருக்கார்...?"
"நம்ம வீட்டுக்கே வந்து பிரசவம் பார்ப்பார்..."
- கே.ஆனந்தன்

வலிக்கவே வலிக்காது!

"ஆபரேஷனை எவ்வளவு சீக்கிரம் முடிப்பீங்க டாக்டர்?..."
"எவ்வளவு சீக்கிரம் நீங்க முடியறீங்களோ அவ்வளவு சீக்கிரம்..."
- கே. ஆனந்தன்





"டாக்டர்... என் வீட்டை வித்துத் தான் நான் உங்களுக்கு ஃபீஸ் கொடுத்தேன்."
"சரி... அதுக்கென்ன இப்போ?"
"திடீர்னு டிஸ்சார்ஜ் செய்யறீங்களே, நான் எங்கே போவேன்?"
- ஆர்.தங்கராஜ்



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி நினைவு நாள்

''கண்டேன் இலங்கையை'',
''தியாகபூமி திரைப்படமும் பேனா யுத்தமும்''
- கல்கி எழுதிய இரு நூல்கள் அறிமுகம்

••

தலைமையுரை:
சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
மாண்பமை கே.சந்துரு

••

தொகுப்பாசிரியர் **சுப்ர.பாலன்,**
பதிப்பாளர் **வானதி திருநாவுக்கரசு,**
ஓவியர்கள் **ஹரிஷ்குகன், நிர்மல்நாதன்**
ஆகியோரைச் சிறப்பித்தல்

••

''தமிழ்க் கடவுள்''
- **சொல்லின் செல்வர் சுகி. சிவம்** அவர்களின்
இலக்கியப் பேருரை

••

05.12.2006 செவ்வாய்க்கிழமை,
மாலை 6:00 மணி
ஆஸ்திக சமாஜம் அரங்கம், வீனஸ் காலனி,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018

அனைவரும் வருக!

கடந்த கல்கி இதழில் 'கஸ்தூரி ராஜாவுக்குக் கண்டனக் கணைகள்' கவர் ஸ்டோரியினைப் படித்த வாசகர்களிட மிருந்தும் பொது மக்களிடமிருந்தும் அநேக சமூக ஆர்வலர்களிடமிருந்தும் கல்கியின் முயற்சிக்குப் பாராட்டுக்களும், கஸ்தூரிராஜாவின் படத்துக்குக் கண்ட னங்களும் வந்த வண்ணம் உள்ளன.

இந்த இதழிலும் கண்டனம் தொடர் கின்ற நிலையில், இது குறித்து நம்மிடம் பேசினார் பிரபல செக்ஸாலஜிஸ்ட் டாக்டர் காமராஜ்.

"13 - 15-க்கும் இடைப்பட்ட பருவம் என்பது மிகவும் குழப்பமான மனோநிலை நிலவுகின்ற பருவம். இதில் ஈர்ப்புதான் முன்னிலைப்பட்டு நிற்குமே தவிர, நிதானம், பொறுப்பு, உண்மை தெரிய வாய்ப்புகள் இல்லை. ஏதோ தாங்கள் உணருகின்ற உணர்ச்சிகளுக்கு ஒரு சப்போர்ட் கிடைத்ததுபோல் நினைத்து அவர்கள் தவறு செய்ய, இந்த மாதிரிப் படங்கள் அவர்களைத் தூண்டும்" என்று டாக்டர் காமராஜ் கூற, சென்சார் போர்டின் மண்டல அதிகாரி பாபு ராமசாமியிடம் 'இதுபோன்ற படங்களை ஏன் தடை செய்யக்கூடாது?' என்று கேட்டோம்.

"ஆபாச, வன்முறைக் காட்சிகளோடு வரும் படங்களை சென்சார் போர்டு பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பதில்லை. ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகள், பெற்றோர், முதியவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து உட்கார்ந்து பார்க்க முடியாத அளவுக்கு உள்ள காட்சிகளை discomfort காட்சிகள் என்று தடை செய்துவிடுவோம். நீங்கள் சொல்லும்வித மாய் இந்தப் படம் அமைந்தால் சென்சார் போர்டு தனது கடமையைச் செய்யும்" என்றார் பாபு ராமசாமி.



கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைத்துத் தரப்பின ருமே இந்தப் படம் குறித்து எரிச்சலும், கவலையும்தான் கொள்கிறார்கள் என்பது நமது களப்பணியின்போது தெரிந்தது.

"கஸ்தூரிராஜாவின் 'இது காதல் வரும் பருவம்' பட விளம்பர பேனர், சென்னை போன்ற நகரங்களிலும், பத்திரிகை விளம்பரங்களிலும் ஆபாச கலாசாரத்தை வளர்த்து வருவது வேதனை தருவதாக அமைந்துள்ளது. அப்துல் கலாம் போன்ற மேதைகளின் கனவுகளில் நஞ்சைத் தூவுவதாக இருக்கிறது. இந்திய திருநாட்டில் இளம் விஞ்ஞானிகளை இவர்கள் உருவாக்காவிடினும் கீழ்த்தர மான படங்களை எடுக்காமல் இருக்கலா மல்லவா?" என்று நம்மிடம் ஆக்ரோஷ மாகப் பேசினார், திருவண்ணாமலை டானிஷ் மெட்ரிக் மேனிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் ஆல்ஃபிரட்.

திருச்சியில் அரசுப் பள்ளித் தலை மையாசிரியர் ஒருவர்,

"இப்பத்தான் இது மாதிரி படங் களால் வரும் ஒரு பிரச்னையைத் தீர்த்து வைத்துவிட்டு வருகிறேன். எட்டாவது படிக்கும் பெண்ணும் ஒன்பதாவது படிக்கும் பையனும் காதலிக்கிறார் களாம். எங்கே போய்ச் சொல்வது?

இருவரின் பெற்றோர்களையும் வரவழைத்து பையனுக்கும்,



தொடரும் கண்டனங்கள்...

பெண்ணுக்கும் தனித்தனியே புத்திமதிகள் சொல்லி, நன்றாகப் படித்து, நல்ல நிலைமைக்கு வந்த பின்னர் உங்கள் ஆசைகளைப் பற்றி பேசலாம்ங்கிற மாதிரி தீர்த்து வைத்துவிட்டு வருகிறேன்.

இதுபோன்ற படங்களை எடுக்கிறவர்கள் திருந்தணும். இல்லைன்னா நாம திருத்தணும்" என்றார்.

"மாணவச் சமூகத்துக்குத் தேவையற்ற காட்சிகளையும் கருத்துக்களையும் காசுக்காகவும் கவர்ச்சிக்காகவும் திணித்துவிட்டு, பின்னர் கேள்வி எழும்போது, ஏதோ ஓர் ஊரில், ஒரு மாணவனுக்கும் ஒரு மாணவிக்குமிடையே நடந்த உண்மை நிகழ்ச்சியைத்தான் நாங்கள் திரைப்படமாக்கி இருக்கிறோம் என்று கூறித் தப்பிக்க முயற்சிக்கும் நேர்மையற்ற வியாபாரிகளைத் தமிழக அரசும் தணிக்கைக் குழுவும் முதலில் திருத்தினால், பிறகு மாணவச் சமூகம் தானே திருந்திவிடும்'' என்று குமுறுகிறார், கன்யாகுமரி, புனித அந்தோணியார் மேனிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் ஆனந்தநாதன்.

"நூறு பாட வேளைகளில் கொடுக்கும் நல்லொழுக்கப் பாடத்தை ஒரே காட்சியில் கெடுக்கும் அளவுக்குச் சக்தி வாய்ந்தது திரைக்காட்சி! அந்தச் சக்தி அழிவுச் சக்தியாகலாமா? திரைப்படம் இளையோரைத் திருத்தாவிட்டாலும் பரவாயில்லை, கெடுக்காமலாவது இருக்கலாமே!'' என்கிறார் நாகர்கோவில், தூய வளனார் மேனிலைப் பள்ளியின் ஓய்வு பெற்ற ஆசிரியை மேரி லீலா.

தொடரும் கண்டனக் கணைகள்...

(எதிர்ப்புக் கையெழுத்திட்டுள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் பட்டியல்)



• டாக்டர் காமராஜ்

சென்னை: ஸ்ரீநிவாசன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, ராயப்பேட்டை. செயின்ட் வில்லியம்ஸ் எ.ஐ.ஹெச். பள்ளி, ராயப்பேட்டை. சி.எஸ்.ஐ. நடுநிலைப் பள்ளி, புதுப்பாக்கம். சாவித்திரி அம்மாள் ஓரியன்டல் மேனிலைப் பள்ளி, மயிலாப்பூர். எஸ்.வி.எம். மேனிலைப்பள்ளி, ராயப்பேட்டை. செயின்ட் ஜோசப் பிரைமரி பள்ளி, ராயப்பேட்டை. சுந்தரம் மெட்ரிக் பள்ளி, எம்.ஜி.ஆர்.நகர். ஹரி ஓம் வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கே.கே.நகர். வெஸ்லி மேனிலைப்பள்ளி, ராயப்பேட்டை. கேசரி

மேனிலைப்பள்ளி, மயிலாப்பூர்.

திருவள்ளூர் மாவட்டம்:

ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருவள்ளூர். பாரதிதாசன் மெட்ரிக்குலேஷன் பள்ளி, திருவள்ளூர். ஞான வித்யாலயா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருவள்ளூர். ஜெக்கப் மெட்ரிக் பள்ளி, மணவாள நகர். பாரதி மெட்ரிக்குலேஷன் பள்ளி, பொன்னேரி. செயின்ட் ஜேம்ஸ் மெட்ரிக்குலேஷன் பள்ளி, டி.வி. புரம், பொன்னேரி. யூனிட்டி மெட்ரிக்குலேஷன் பள்ளி, பொன்னேரி.

ஹோலி டிரினிட்டி மெட்ரிக்குலேஷன் பள்ளி, பொன்னேரி.

• பாபு ராமசாமி



கல்கியுடன் கைகோப்பவர்கள் பட்டியல்...

திருவண்ணாமலை மாவட்டம்:

செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருவண்ணாமலை. டேனிஷ் மிஷன் மேனிலைப்பள்ளி, திருவண்ணாமலை. சிஷ்யா மெட்ரிக்குலேஷன் பள்ளி, தீபம் நகர். ஏ.எல்.சி. மேனிலைப்பள்ளி, திருவண்ணாமலை. ஜீவா வேலு மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மாத்தூர். மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, தென்மாத்தூர். எஸ். முருகையன் நினைவு மாடல் மேனிலைப் பள்ளி, கீழ் அணைக்கரை, திருவண்ணாமலை.

கன்யாகுமரி மாவட்டம்:

புனித அந்தோணியார் மேனிலைப் பள்ளி, கன்யாகுமரி. இன்ஃபன்ட் ஜீசஸ் மேனிலைப்பள்ளி, கன்யாகுமரி. கார்மல் மாதா மெட்ரிக்குலேஷன் பள்ளி, கோவளம். செயின்ட் ஜோசப் கான்வென்ட், நாகர்கோவில். சதீஷ் மெட்ரிக் பள்ளி, நாகர்கோவில். எஸ்.எல்.பி. மேனிலைப்பள்ளி, நாகர்கோவில்.

திருச்சி மாவட்டம்:

பெண்கள் மேனிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். கிழக்கு ரெங்கா நடுநிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். தெற்கு ரெங்கா நடுநிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். அய்யனார் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, மேலூர், ஸ்ரீரங்கம். சின்மயா வித்யாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளி, அருணா நகர், ஸ்ரீரங்கம். ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி வித்யாலயா, திருவானைக்கோயில், திருச்சி - 5. ஸ்ரீ வாகீச வித்யாஸ்ரமம், ஸ்ரீரங்கம். ஸ்ரீ வைஜெயந்தி வித்யாலயா மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். விக்னேஷ் ஸ்ரீ ரெங்கா மெட்ரிக்குலேஷன் மேனிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். தூய வளனார் கல்லூரி மேனிலைப்பள்ளி, திருச்சி - 2. பிஷப் ஹீபர் மேனிலைப் பள்ளி, தெப்பக்குளம், திருச்சி - 2. அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, டவுன் ஹால், திருச்சி - 2. ஏ.கே.கே.வி. ஆறுநாடு மெட்ரிக் மேனிலைப்பள்ளி, அண்ணா மலை நகர், திருச்சி - 18. நேரு மெட்ரிக்குலேஷன் பள்ளி, தில்லை நகர், திருச்சி - 18. ஒய்.டபிள்யு.சி.ஏ., மெட்ரிக் மேனிலைப்பள்ளி, தில்லை நகர், திருச்சி - 18. மன்னர் மெமோரியல் மெட்ரிக்குலேஷன் பள்ளி, கண்டோன்மென்ட், திருச்சி - 1. சேவா சங்கம் பெண்கள் மேனிலைப் பள்ளி, திருச்சி - 1. கேம்பியன் ஆங்கிலோ இந்தியன் மேனிலைப் பள்ளி, கண்டோன்மென்ட், திருச்சி-1. ஆல்ஃபா ப்ளஸ் நர்சரி பிரைமரி ஸ்கூல், ரெங்கா நகர், திருச்சி - 21.

- நமது நிருபர்கள்

சவால்

கல்கி 12.11.2006 இதழின் ஜாலியா கண்டுபிடிங்க போட்டியின் சரியான விடை:

அசின் - பாவாடைச் சட்டை
கோபிகா - சுடிதார்
பாவனா - டீ-ஷர்ட்

சரியான விடையுடன் கூடவே கல்கி பற்றிய 'நச்' கமெண்ட் எழுதி தலா ரூ.250 பரிசு பெறும் எட்டு வாசகர்கள்:

* அறிவு வளரும் கல்வி கற்றால்! அறிவு ஒளிரும் கல்கி படித்தால்!
  - தரங்கிணி ஸ்ரீராமன், செகந்திராபாத்

* கடல் நீரை அளக்க முடியாது! கல்கி பற்றி இரண்டு வரியில் கூற முடியாது!
  - ஜி. சுந்தரமூர்த்தி, அரியலூர்

* காலச் சுவடு முதல் கணிணி உலகம் வரை தருவது - கல்கி.
  - ஆர். ஸ்ரீ. திருநெல்வேலி



பரிசு ரூ.2,000

* கல்கி படைப்பவனுக்கும் பெருமை; படிப்பவனுக்கும் பெருமை!
  - தி.சீனிவாஸ் சுதர்சனன், சென்னை - 20

* துணிவுள்ள தூயவன்!
  - என். ரத்தினம், கம்பம் - 16

* பொழுதைப் போக்க அல்ல... பொழுதெல்லாம் நினைத்து ரசிக்க!
  - அகிலா அன்புமணி, ஈரோடு

* கல்கி படிக்க வீட்டுக் குள்ளே போட்டி... ஜாலியா கண்டுபிடிக்க கல்கிக்குள்ளே போட்டி!
  - உமாதேவி, சேலம்

* ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் பரிசு... ஒண்டர்ஃபுல் கல்கி படிச்சா இரண்டாயிரம் பரிசு!
  - ஜெ.கைலாஷ்குமார், சேலம்




இந்த வாரப் போட்டி:

எழுதுங்க போஸ்ட் கார்டு கதைகள். சிறப்பான எட்டுக் கதைகளுக்கு தலா ரூ.250/- பரிசு.

கண்டிப்பாக அஞ்சலட்டையில் மட்டுமே எழுதவும். 'போஸ்ட் கார்டு கதை' என்று குறிப்பிடவும். தெளிவாக இல்லாத கதைகள் நிராகரிக்கப்படும்.

கடைசி தேதி : 4.12.2006

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.



வாரம் ஒரு பாசுரம்!

திருப்பதியில் பிரம்மோற்சவம் நடைபெறுவதையும் தினம் தினம் உற்சவர் யானை வாகனம், கருட வாகனம், சந்திரப்ரபை, முத்துப் பல்லக்கு போன்ற வாகனங்களில் வீதி வலம் வருவதையும் பக்தர்கள் மெய் மறந்து ஆடுவதையும் பாடுவதையும் ஜொலிக்கும் வைர நகைகளையும் அலங்காரத் தங்கக் குடைகளையும் தற்போது தொலைக்காட்சி மூலம் கண்டுகளிக்க முடிகிறது. பெருமாள் பக்கத்திலேயே உட்கார்ந்து பார்ப்பது போலக் காட்டுகிறார்கள்.

வீட்டுக்குள் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு எந்தவித மெய் வருத்தமும் இல்லாமல் பெருமாளைப் பார்க்க முடிகிறது. தரிசிக்க முடியவில்லை!

தரிசனம் என்பதில் கொஞ்சம் நம் உடல் உழைப்பு வேண்டும். அங்கே போக வேண்டும். கூட்டத்தில் இடிபட வேண்டும். நம் தினசரி வேஷங்களை ஒத்திப்போட்டுக் காத்திருக்க வேண்டும். கிட்டத்தில் செல்லத் தடைகள் வேண்டும். பசி, மயக்கம் போன்றவை வேண்டும். அதன் இறுதியில் கிடைக்கும் தரிசனத்தில் அத்தனை சிரமங்களும் மேகத்தை விலக்கிவிட்டு ஜொலிக்கும் சூரியன்போல் சட்டென்று ஏற்படும் ஒரு நிமிடப் பரவசம்தான் தரிசனம்.


வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டு, டெலிபோன் பேசிக் கொண்டு, சேனல் மாற்றத் துடிக்கும் விரல்களுடன் பார்ப்பதல்ல.

குலசேகராழ்வார் இந்த தரிசனத்துக்காக எல்லா சௌகரியங்களையும் துறக்கலாம் என்கிறார்.


'ஆனாத செல்வத்து
அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும்
மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத்
திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன்
ஆவேனே.'

(ஆனாத - அழியாத)

'வானுலகத்தின் அரம்பையர் சூழ்ந்திருக்கும் இந்திரப் பதவியும் பூலோகத்தில் அரச பதவியும் எனக்கு



7



உண்மையான தரிசனம்

வேண்டாம். திருவேங்கடத்தில் சுனையில் மீனாகப் பிறக்கும் விதி கிடைத்தால் போதும்' என்கிறார்.

மற்றொரு பாடலில் 'செடியாய் வல்வினைகள்' என்ற ஓர் அருமையான சொற்றொடரை குலசேகராழ்வார் பயன்படுத்துகிறார். செடிபோலத் திரும்பத் திரும்ப முளைக்கும் கொடிய பாவங்கள் தீர்வதற்கு கோயில் வாசலில் 'படியாய்க் கிடந்து உன் பவள வாய் காணேனே' என்கிறார்.

அந்த அளவுக்கு மிதிபட்டால்தான் தரிசனம் கிடைக்கும்.

(படிக்கலாம்)

சுஜாதா



கல்கி



2006 டிசம்பர் 3
விய கார்த்திகை 17
மலர் : 65
இதழ் : 18

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - *பாரதியார்.*


அபாயகரமான உடன்படிக்கை!


சீனாவுடனான உடன்படிக்கை, எல்லைப் பிரச்னையைத் தவிர மற்ற எல்லா விஷயங்களைக் குறித்தும் பேசுகிறது. ஆனால் இவ்வுடன்படிக்கையின் மறைமுக நோக்கம் எல்லைக்கோடு பிரச்னையைத் தீர்த்து, அதற்கொரு சாதகமான ஒப்பந்தத்தை விளைவிப்பதுதான் என்றும் ஒளிவுமறைவின்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சீனாவுடனான நமது உறவுகள் மகிழ்ச்சிகரமாக இல்லை. திபெத்தை ஆக்கிரமித்தது போதாதென்று, இந்தோ-சீன யுத்தத்தின்போது கணிசமான அளவு இந்திய மண்ணைக் கைப்பற்றி வைத்துள்ள சீனா, தற்போது அருணாசலப் பிரதேசத்துக்கும் உரிமை கொண்டாடுகிறது. பாக் வரைபடத்தில் அந்நாடு காஷ்மீரைத் தனதாகக் காட்டிக்கொள்வதைப்போல, சீனாவும் அருணாசலப் பிரதேசத்தைத் தனது பகுதியாகவே வரைபடத்தில் காட்டி வருகிறது.

இந்நிலையில், பதின்மூன்று அம்சங்களை உள்ளடக்கிய உடன்படிக்கையை சீனாவுடன் செய்துகொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? மேலும், பாதுகாப்புத் துறையில் பரஸ்பர ஒத்துழைப்பு நல்குவதாகவும் அணு சக்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு இணைந்து உழைப்பதாகவும் பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொண்டிருப்பது அபத்தம் மட்டுமல்ல! மிகப்பெரிய அபாயமும்கூட; காரணம், அணு ஆராய்ச்சியில் சீனா இந்தியாவைக் காட்டிலும் முன்னேறி, அணு ஆயுத உற்பத்தியில் முன்னணி நாடாகவே ஆகிவிட்டது.

சீனாவின் அணு ஆயுத உற்பத்திக் கொள்கையை எதிர்க்கத் துணியாத அமெரிக்கா, இந்திய அணு ஆராய்ச்சி - அபிவிருத்திக் கொள்கையில் மட்டும் இடையறாது மூக்கை நுழைத்து, தடை போட்டு வந்திருக்கிறது.





நிலைமை இவ்வாறிருக்க, சீனா நமக்கு அணு ஆராய்ச்சி தொடர்பான ஒத்துழைப்பை அள்ளித் தரப்போகிறது என்று எவ்வாறு எதிர்பார்ப்பது!

இன்னொரு புறத்தில் 2010 ஆண்டுக்குள் 40 பில்லியன் டாலர் அளவுக்கு இரு தரப்பு வர்த்தகம் விரிவடைந்து வளர இலக்கு நிர்ணயித்துள்ளது - இரு நாட்டுத் தலைவர்களின் இந்தச் சந்திப்பு. 'இந்தியா - சீனா இரண்டுமே வளரும் நாடுகள்' என்று ஒப்பந்த வாசகம் வர்ணிக்கிறதென்றாலும் சீனாவின் வளர்ச்சி வேகத்துக்கு இந்தியாவால் ஒரு போதும் ஈடு கொடுக்க முடியாது. அதுவும், கடந்த சில ஆண்டுகளில் இந்தியா பலமாக நுழைந்து நிலைப்படுத்திக் கொண்டுள்ள அனைத்துத் துறைகளிலும் சீனா திட்டமிட்டு நுழைந்து நமது வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது. பட்டு உற்பத்தி, நெசவு, பின்னலாடைகளில் ஆரம்பித்து எலெக்ட்ரானிக் பொருட்கள், மென்பொருள் உற்பத்திவரை அனைத்திலும் சீனா உலகச் சந்தையில் வெகு வேகமாக முன்னேறிவிட்டது.

ஆகவே, சீனா நமக்குப் போட்டி நாடாகத்தான் இருக்கிறது; இனியும் இருக்கும். சீனாவின் மக்கள் தொகையும் அங்கு நிலவும் கம்யூனிஸ ஆட்சிமுறையின் கெடுபிடிகளும் குறைந்த விலையில் சீனப் பொருட்களைச் சந்தைப்படுத்த உதவுகின்றன என்பதால் இப்போட்டியில் இந்தியா திணறிப் போகும்.

இன்று நாம் சீனாவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தமும் நடந்துள்ள பேச்சு வார்த்தைகளும் இந்த விஷயங்களையெல்லாம் மனத்தில் கொண்டு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

உண்மையில், இந்தியாவுக்கு இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுவன ரஷ்யா, அமெரிக்காவுடனான ஒப்பந்தங்கள். அண்டை நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் சீனாவினால் எல்லைக் கோட்டு பிரச்னை, பயங்கரவாதிகள் ஊடுருவல், அகதிகள் ஊடுருவல் என்று பொருளாதாரத்தையும் அமைதியையும் குலைக்கக்கூடிய அபாயங்கள் இந்தியாவில் நிலவுகின்றன. போதாக்குறைக்கு பாகிஸ்தானிடமும் சீனாவிடமும் அணு ஆயுதக் குவிப்பு வேறு! இந்நாடுகளுள் ஒன்றோ அல்லது வேறு நாடோ இந்தியா மீது தாக்குதல் நடத்தினாலோ அல்லது இந்திய மண்ணைக் கைப்பற்ற முயன்றாலோ, அமெரிக்காவும் ரஷ்யாவும் அதை எதிர்க்க உடனடியாக நமக்குக் கைகொடுக்க வேண்டும். இதைச் சாத்தியமாக்கும் வகையில் இந்நாடுகளுடன் நாம் செய்துகொள்ளும் உடன்படிக்கை அமைய வேண்டும். அப்போதுதான் இந்தியாவுக்கு அண்டை நாடுகளிடமிருந்து பாதுகாப்பு கிட்டும். சக்தி வாய்ந்த நிலையில் இருந்தபடி அண்டை நாடுகளுடன் விஞ்ஞான, கலாசார, வர்த்தக ஒத்துழைப்பு குறித்து பேசலாம்; ஒப்பந்தம் போடலாம்.

சீனாவை நம்பி நாம் மோசம்போன வரலாற்றைச் சீக்கிரத்தில் மறந்துவிடலாகாது. ●

வட்டமேஜை



'தினகரனை விற்றது பலி கொடுத்த விஷயம்' என்ற கே.பி. குமரனின் விளக்கம் அழகு.

- கே.வி.ராமன், சென்னை

பிடிவாதத்துக்குப் பிறந்தவன் ஈ என்ற ஜனநாதனின் பேட்டி சிம்ப்ளி சூப்பர்ப்!

- கே. ரெங்கநாதன், திருவாரூர்

மார்கெலன்ஸ் நோய் ஒரு பொய் ஆனாலும், அதற்குக் காரணம் உளவியல் புத்தகங்களா என மனம் சில்லிட்டுப் போனது!

- சாமி, திருவண்ணாமலை

சுதா சேஷய்யனின் 'ஸ்ரீ லலிதா' விளக்கம் அருமை. பாரதியாரின் 'அக்னிக் குஞ்சொன்று கண்டேன்' பாடலுக்கு இப்படியொரு வித்தியாசமான உயரிய அர்த்தம் உண்டென்பதை அறிந்து மகிழ்ந்தேன்.

- ப. சங்கரி ரமேஷ், கோவை.

சரத்குமாரின் அவல நிலையை நெத்தியடியாய்ச் சொன்னது கார்ட்டூன்.

- பிரபா விங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்

காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி தனது பேட்டி மூலம் முதல்வருக்கு ஆறுதல் அளித்துள்ளார்.

- பா. ஜெயபிரகாஷ், சர்கார்பதி

அமரர் கல்கி அன்று சொன்னது இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்

கடைகளுக்கு சீல் வைப்பதுடன் இலஞ்ச ஊழலுக்கும் சீல் வைத்தால் பிரச்னை மீண்டும் தலை தூக்காது என்ற தலையங்க வரிகள் அசத்தல்.

- ஜே. துரைராஜ், சென்னை

பதினாறு வயதிலிருந்து அறுபது வயது வரை உடையோருக்கு மட்டுமல்ல... ஆறு வயதுக் குழந்தைக்கும்கூட கல்கியில் படிக்க ஏராளமான விஷயம் இருக்கிறது.

- கே. கீர்த்தி, சென்னை







ராசிபலன்



நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம் : எதிலும் போராட்டமான வாரம். கவனத்துடன் செயல்படுவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கல்வியில் கவனக்குறைவு ஏற்படலாம். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. சூரிய நமஸ்காரம் செய்து வரவும்.

ரிஷபம் : யோகமான வாரம். எண்ணங்கள் யாவும் ஈடேறும். திருமணக் காரியம் கைகூடும். பணக் கஷ்டம் இருக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். மகப்பேறு கிட்டும். ராகு / கேதுவை வழிபாடு செய்து வரவும்.

நடக்கறதைத்தான் சொல்லுவோம்... சொல்றதுதான் நடக்கும்!

மிதுனம் : தெய்வ பலம் நிறைந்த வாரம். சத்ரு தொல்லை விலகும். கடன் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். உடல்நிலை பாதிக்கப்படாது. கணவன் - மனைவி உறவு நற்பலனைத் தரும். குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கடகம் : மகிழ்ச்சிகரமான வாரம். சுபச் செலவு ஏற்படும். நண்பர்/ உறவினர் ஆதாயம் கிட்டும். ஆடம்பர வஸ்துகள் சேரும். உங்களுடைய புதிய தொழில் முயற்சி கைகொடுக்கும். தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. ராகு / கேது / சனியை வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

சிம்மம் : வெற்றி தரும் வாரம். மனக் குழப்பம் போகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். பணப் பற்றாக்குறை வராது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர,



26.11.2006 முதல் 2.12.2006 வரை

தஞ்சை பரத்வாஜ்

நற்பலனை அடைவீர்கள்.

கன்னி : மன தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் வாரம். முயற்சி செய்யும் காரியத்தில் பலன் உண்டாகும். தூர தேச அழைப்பு கிட்டும். வேலையில் நல்ல முன்னேற்றம். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குருவை வழிபாடு செய்துவர, நலம் தரும்.

துலாம் : தனவிருத்தியான வாரம். கொடுக்கல், வாங்கல் நல்ல பலன் தரும். தனம், கல்வி, வாக்குவன்மை மேலோங்கும். வராத பணம் கைக்கு வந்து சேரும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். வழக்கு, வியாபாரம் முடிவுக்கு வரும். நில புலன்கள் வழியில் ஆதாயம் கிட்டும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

விருச்சிகம் : திடீர் என்று புகழ் வரும் வாரம். சமுதாயத்தில் மதிப்பு, மரியாதை பெருகும். பணச் செல்வாக்கு மிகுந்து காணும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். கல்வி வளம் மேலோங்கும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். உடல் நிலை நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நல்ல மாறுதல் ஏற்படும். ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

தனுசு : சுபச்செலவு ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்பார்த்த தனயோகம் கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்து வரவும்.

மகரம் : லாபம் தரும் வாரம். வேலைப் பளு அதிகரிக்கும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். பூமி மூலமோ தொழில் மூலமோ வருவாய் ஏற்படும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. நெருங்கிய கூட்டாளிகள் விலகிப் போவார்கள். வாகனத்தில் செல்லும்போது உஷார். கொடுக்கல், வாங்கலில் கவனம் செலுத்தவும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம் : வேலையில் நற்பெயர் வரும் வாரம். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. ஊதிய உயர்வு, சுபகாரியம் கைகூடும். தொலைதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வீடு, மனை வாங்க நல்ல தருணம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். ராகு / கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

மீனம் : மேன்மையான வாரம். பெரும் பணம் உதவியாகக் கிடைக்கும். அந்நிய நாட்டு மனிதர்களால் ஆதாயம் ஏற்படும். வெளிநாட்டு வியாபாரம் நன்றாக அமையும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். படிப்பில் மேன்மை பெறும். ஆஞ்சநேயரை வழி பாடு செய்து வரவும். ●

பரத்வாஜ் பதில்கள்...

என் முதல் பெண், நாங்கள் பார்க்கும் மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்வாளா அல்லது அவளது தனிப்பட்ட விருப்பம் போல் திருமணம் நடக்குமா?

- சி.கணேசன், சென்னை - 40

தங்கள் பெண்ணுக்கு அவள் விருப்பப்படி திருமணம் நடக்க வாய்ப்பு இல்லை. குடும்பத்தினர் பார்த்து நிச்சயமான வரன் அமையும். வெளிநாட்டு வரன் அமையும். தோஷம் எதுவும் இல்லை. 2007-ல் திருமணம் முடியும்.

என் மகன் கேட்டரிங் படித்துள்ளான். அவனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்குமா?

- இ.பாலசுப்ரமணியன், பாளையங்கோட்டை

வெளிநாட்டு வேலை நல்ல பலனைத் தரும். முயற்சி செய்தால் பலன் நிச்சயம். மேலும் மனத்துக்குப் பிடித்த துறையில் படிக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.


Rs.

மரீசாதி சூரணம்; மாங்காய் வற்றல் குழம்பு

1. மரீசாதி சூரணம் எனும் ஐங்காயப் பொடி

தேவையான பொருள்கள் :

மிளகு - 1 டீஸ்பூன்
சீரகம் - 2 டீஸ்பூன்
உலர்ந்த வேப்பம்பூ - 1 டேபிள் ஸ்பூன்
சுக்கு - சிறிதளவு
சுண்டை வற்றல் - ½ கப் (20லிருந்து 30 வரை இருக்கலாம்)
பெருங்காயம் - சிறிதளவு
கறிவேப்பிலை - 1/2 கப்
மாங்காய் வற்றலிலுள்ள விதை (மாங்கொட்டையிலுள்ள பருப்பு) - 1 அல்லது 2

செய்முறை :

வெறும் வாணலியில் வேப்பம்பூவைக் கருஞ்சிவப்பாக வறுக்கவும். மற்ற பொருட்களை நல்ல சிவப்பாக வறுக்க வேண்டும் (கறிவேப்பிலை ஈரம் உலர வேண்டும்). சிறிதளவு எண்ணெய் விட்டுப் பெருங் காயத்தைப் பொரித்து எடுக்கவும். கறி வேப்பிலையைச் சிவப்பாக வறுக்கவும். உப்பைப் படபடவென்று வெடித்துச் சற்று வறுபடும் வரை வறுத்தெடுக்கவும். தேவைக்கேற்றவாறு உப்பைப் போட்டு அனைத்தையும் சேர்த்து மிக்ஸியில் பொடித்து வைக்கவும். அதிஸாரம், க்ரஹணி போன்றவற்றுக்குச் சிறந்தது.



2. ஷாடவம் (மாங்காய் வற்றல் குழம்பு போன்றது)

தேவையான பொருள்கள் :

மிளகு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 2 டீஸ்பூன்
சீரகம் - ½ டீஸ்பூன்
கடலைப் பருப்பு - 2 டீஸ்பூன்
வெந்தயம் - சிறிதளவு
பெருங்காயம் - சிறிதளவு
கறிவேப்பிலை - சிறிதளவு
மாங்காய் வற்றல் - தேவையான அளவு
சிறிதளவு புளி.

செய்முறை :

மிளகு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, சீரகம், வெந்தயம் ஆகியவற்றைக் கொஞ்சம் எண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்து எடுக்கவும். கறிவேப்பிலையையும், பெருங்காயத்தையும் பொரித்து எடுத்துக் கொண்டு, அனைத்தையும் நைஸாக அரைத்துக் கொள்ளவும்.

நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மாங்காய் வற்றலை உபயோகிக்கவும். மாங்காய் வற்றலில் புளிப்பு இருக்கும். எனவே புளி சிறிதளவே எடுத்துக் கொள்ளவும். அடுப்பில் பாத்திரத்தை வைத்துச் சிறிதளவு தண்ணீர் விட்டு, மாங்காய் வற்றலை அலசி, அலம்பி சற்று வேகவிடவும் (மாங்கொட்டையில் உள்ள விதையை வறுத்த சாமான்களுடன்



வைத்து அரைத்துக்கொண்டும் குழம்பு செய்யலாம்). மாங்காய் வற்றலில் உள்ள பருப்புக்கு வயிற்றுப் புண்ணைத் தீர்க்கும் சக்தி இருக்கிறது. வற்றல் வெந்த பிறகு அரைத்த விழுதை நன்றாகக் கரைத்துப் பாத்திரத்தில் விட வேண்டும். தேவையான அளவு உப்பு, மஞ்சள் பொடி, காயம் போடவும்.

மேற்கண்ட கரைசல் நன்கு கொதித்ததும் சிறிதளவு மாவைக் கரைத்துவிட்டு நன்கு கொதித்து இறக்க வேண்டும். பிறகு சீரகம், கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை சேர்த்துத் தாளிக்கச் செய்யவும்.

(தொடரும்)

டாக்டர் எல்.மஹாதேவன்

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி-1ல் 'கை வைத்திய'க் குறிப்பு எழுதி, முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசு பெறும்



வாசகர்: **ஏ.மோகனசுவாமி, சென்னை - 99.**

அவர் எழுதியுள்ள குறிப்பு:

நான் தெற்கு இரயில்வேயின் 'கேட்டரிங்' இலாகாவில் 1963 முதல் 1994 வரை உதவி சமையல்காரனாகப் பணி புரியத் தொடங்கி, 'கேட்டரிங் இன்ஸ்பெக்டர்'ஆகப் பதவி உயர்வு பெற்று ஓய்வுபெற்றவன்.

பதினேழு வருடங்கள் சமையல்காரனாக ஓடும் வண்டியில், 'ஃபாண்டிரி காரி'ல் பணிபுரியும் போது, வண்டியின் ஓட்டத்தினாலும் ஆட்டத்தினாலும் கொதிக்கும் எண்ணெயும் சுடுநீரும் கை மற்றும் கால்கள் மீது கொட்டிக்கொள்ளும். அப்போது என் கை மருந்து, உருளைக்கிழங்கை இடித்துக் கூழாக்கி, பாதிக்கப்பட்ட இடத்தில் பூசிவிடுவதுதான். இதனால் கொப்பளம் ஏற்படாது. டெல்லி அல்லது சென்னைக்குப் போன பிறகு மருத்துவரிடம் சிகிச்சை பெறுவேன். ஒரு வாரத்தில் குணமாகிவிடும். இந்தக் கை வைத்தியத்தை பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும் செய்திருக்கிறேன். வீட்டிலும் முதல் உதவியாகச் செய்து, பிறகு மருத்துவரிடம் அழைத்து போவேன்.

இரண்டாவது பரிசாக 'தேவமருந்து' முதல் பாகம் புத்தகம் பரிசு பெறும் வாசகி: **வே. சித்ரா, கும்மிடிப்பூண்டி.**

அவர் எழுதியுள்ள குறிப்பு:

ராத்திரியில் சிலர் வாய்விடாமல் இருமுவாங்க. அவங்களுக்கு ஒரு டேபிள் ஸ்பூன் நெய்யில் பத்து மிளகைப் போட்டு, இளம் சூட்டுல வறுத்து, நெய்யோட சேர்த்து, அஞ்சு மிளகைக் கொடுத்து, கடிச்சு விழுங்கச் சொன்னால் இருமல் குறையும். அடுத்த முறை இருமுறப்போ மிச்சம் இருக்கிற அஞ்சு மிளகையும் சாப்பிட்டுட்டா, இருமல் போயே போய்விடும்.

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 2ல் 'வயிற்றுப் போக்கை நிறுத்த கைவைத்தியக்' குறிப்பு எழுதி, முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசு பெறும் வாசகி: **ஆர். சரஸ்வதி, சென்னை - 600 004.**

அவர் எழுதியுள்ள குறிப்பு:

ஜவ்வரிசியை இலேசாக வறுத்துப் பொடி செய்து, 2 டேபிள் ஸ்பூன் வேக



• மூளைக் கட்டி நோயாளியுடன் டாக்டர் கிருபாசங்கர்...

இந்தியாவிலேயே முதன் முறையாக...

Brain Tumour என்று சொல்லப்படுகிற மூளைக் கட்டி, இன்றுவரை நோயாளியை மட்டு மல்ல, மற்றவர்களையும் அச்சமூட்டும் விஷய மாகவே இருந்து வருகிறது. தலைவலிதான் மூளைக் கட்டியின் ஆரம்ப அறிகுறியாகும். அதிலும் குறிப்பாக காலை நேரங்களில்தான் இந்தத் தலைவலி ஏற்படும். சிலருக்குத் தலை வலியுடன் வாந்தி, சோர்வு போன்றவையும் ஏற்படும்.

அதி நவீன மருத்துவத்தின் காரணமாக - சக்திவாய்ந்த மைக்ராஸ்கோப் துணையுடன் இன்றைய நாட்களில் எப்படிப்பட்ட மூளைக் கட்டி யையும் ஆபரேஷன் மூலம் அகற்றிவிட லாம். அண்மையில் 47 வயதான பெண் மணி ஒருவர், வலிப்பு வந்த காரணத்தால் சென்னை, பள்ளிக்கரணையில் உள்ள காமாட்சி மெமோரியல் மருத்துவமனைக் குக் கொண்டு வரப்பட்டார். அவருக்கு உடனடியாக வென்டிலேட்டர் மூலம் செயற்கை சுவாசம் போன்ற ஆரம்பகட்ட மருத்துவ உதவிகள் செய்யப்பட்டன. அடுத்து சி.டி. ஸ்கேன் மூலம் அவரது மூளைப் பகுதியைப் பரிசோதித்துப் பார்க்க, அவரது மூளையில் 8 சென்டிமீட்டர் அளவுக்கு கட்டி இருப்பது தெரிய வந்தி ருக்கிறது. அப்பெண்மணியைப் பரி சோதித்த நியூரோ சர்ஜன் டாக்டர் கிருபாசங்கர், உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டி யதன் அவசியத்தை வலி யுறுத்தி, ஆபரேஷன் செய்தார். இந்தப் பெண்மணிக்கு இருந்த மூளைக் கட்டியானது Meningioma என்ற வகையாகும். இது பெரும் பாதிப்பைத் தரக்கூடிய வகையில் மூளையின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம் வரை பரவியிருந்தது. கிட்டத்தட்ட 14 மணிநேர அறுவை சிகிச்சைக்குப் பின்னரே நோயாளியை உயிர் பிழைக்க வைக்க முடிந்தது. இதுபோன்ற மூளையின் தடுப்பு உறைப் பகுதியைத் தாண்டி, மூளையின் இரண்டு பக்கமும் ஊடுருவிய 8 செ.மீ. மூளைக் கட்டியை ஆபரேஷன் செய்து அகற்றியது இந்தி அளவில் இதுதான் முதல் முறை.


- சுதர்சனா

வைக்கவும். அத்துடன் எண்ணெய் விடாமல் சீரகம் வறுத்துச் சேர்த்து, புளிக்காத தயிரில் உப்புடன் வேக வைத்த ஜவ்வரிசியைக் கலந்து கூழ் பதத்தில் சாப்பிட, வயிற்றுப்போக்கு கட்டுப்படும். ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் இரண்டு நாள் சாப்பிடலாம். முதல் நாள் ஜவ்வரிசிக் கூழ் மாதிரிச் சாப்பிட்டு, இரண்டாம் நாள் அத்துடன் வெந்து குழைந்த சாதத்தோடு உலர்ந்த நார்த்தங் காயுடன் சாப்பிட, வயிற்றுப்போக்குக் கட்டுப்படுவதுடன் உடம்பும் களைத்துப் போகாமல் இருக்கும்.

இரண்டாவது பரிசாக 'தேவமருந்து முதல் பாகம்' புத்தகம் பரிசு பெறும் வாசகி: ***லக்ஷ்மி மாதவன், சென்னை - 600 033.***

அவர் எழுதியுள்ள குறிப்பு:

பிரண்டையைக் கழுவித் துடைத்து விட்டு அரை அங்குலம் சதுரத் துண்டு களாக நறுக்கி, புளித்த தயிர், இந்துப்புப் பொடி இவற்றில் புரட்டி, இரண்டு அல்லது மூன்று நாட்கள் நிழலில் உலர்த்திய பின் மண் பாண்டம் அல்லது வெறும் இலுப்பச் சட்டியில் பச்சைத் தன்மை போகும்படி கறுப்பாக வறுத்துப் பொடி பண்ணி வைத்துக்கொள்வார் என் மாமியார். இதைப் 'பிரண்டை உப்பு' என்று சொல்வார். எங்கள் வீட்டில் ஒரு முறை என் மகனுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டபோது, இந்தச் சூரணத்தில் ஒரு ஸ்பூன் எடுத்து மோரில் கலக்கிக் (ஒரு விழுங்கு என்போம்) கொடுத்தேன். இரண்டுவேளை இதைக் கொடுத்து விட்டுப் புளிப்பில்லாத மோர் சாதம் கொடுத்ததில் இரண்டாம் நாளே வயிற்றுப்போக்கு நின்றுவிட்டது. அஜீர்ணமாக இருந்தால் அரை டம்ளர் பொறுக்கும் சூட்டில் இதே சூரணத்தை வெந்நீருடன் சேர்த்துக் கொடுத்தால், அஜீர்ணம் சரியாகிவிடும். ●



என் இனிய மனைவி!

மாலா உத்தண்டராமன்

"என்ன மகாராணி... மணி ஏழு அடிச்சா போதுமே... உடனே ஓடிவந்து டீ.வி.யை ஆன் பண்ணிடுவியே... எனக்கு டீ போட்டுத் தர மாட்றியே..." அலுவலகத்திலிருந்து திரும்பிய வாசு எரிச்சலடைந்து கத்தியதோடு, அடிக்கக் கையையும் ஓங்கிவிட்டான்.

வழக்கம்போல கெஞ்சுவது மாதிரி முகத்தைப் பரிதாபமாக்கிக் கொண்டு பார்த்தாள் மனைவி லதா.

"தினமும் ஆளுக்கொரு பக்கம் வேலைக்கு ஓடறோம். அசந்து போய் சாயங்காலம் வீடு திரும்பற நீ, ஒரு மணி நேரம் ஓய்வெடுக்கலாம். அதை விட்டுட்டு இந்த பாழாய்ப்போன டீ.வி. சீரியலே கதின்னு ராத்திரி பத்தரை மணி வரைக்கும் வீணாப் பொழுதை ஓட்டறியே... நானும் தலைப்பாடா அடிச்சுக்கிறேன். காதிலே வாங்காமல் அலட்சியப்படுத்தறே... அங்கே பாரு டென்த் படிக்கற பையனும் டீ.வி. பார்த்து உன்னால கெட்டுப் போறான்..." என்று நீண்ட லெக்சரடித்த வாசு, துணிச்சலை வரவழைத்துக் கொண்டு டீ.வி. ஸ்விட்சை ஆஃப் செய்தான்.

எக்கச்சக்க கோபத்திலிருக்கும் கணவனைப் பார்த்த லதாவுக்குப் பயத்தால் உடம்பு நடுங்கிற்று.

"ஓ.கே.ங்க, என்னை மன்னிச்சுடுங்க. இனி உங்க விருப்பம்தான் என் விருப்பமும்." அசடு வழிந்து கூறிவிட்டுச் சமையலறைக்கு நடந்தாள்.

தன் சதையை ஒரு முறைக்கு இருமுறையாகக் கிள்ளிப் பார்த்துக்கொண்டே, 'ஆஹா! எனக்கு வெற்றி... சொன்ன பேச்சைக் கேட்டுட்டா என் இனிய மனைவி!' ஆச்சரியமடைந்தான் வாசு. அதே சந்தோஷத்தோடு இரவு பத்தரைக்கு மூவரும் உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

பன்னிரண்டு மணியளவில் எதேச்சையாகக் கண்விழித்த வாசு, அருகில் லதா இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான்.

அதிர்ச்சியோடு ஹாலுக்கு ஓட, அங்கே - பேந்தப் பேந்த விழித்தவாறு சாயங்காலம் தவறவிட்ட சீரியல்களின் மறு ஒளிபரப்பை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் லதா.





மாடல் படம் : பொள்ளாச்சி சுந்தரம்

அக்கம் பக்கம்

முந்நூறு தரட்டுமா?

தாராளமயமாக்கலின் பலனாக நாட்டில் தொழிற்சங்கங்கள் பலமிழந்து கொண்டிருக்கும் வேளையில், கொல்கத்தாவிலிருந்து வரும் ஒரு செய்தி, தகவல் தொழில்நுட்பத் துறையினர் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. ''தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிகிறவர்கள் விஷயத்தில் பல நிறுவனங்கள் தொழிலாளர் சட்டங்களைக் கடைபிடிப்பதில்லை; தொழிலாளர்களுக்கான பல உரிமைகள் மறுக்கப்படுகின்றன'' என்று இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கவாதிகள் வாதிடுகின்றனர். 'தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிகிறவர்களுக்கு நிறையச் சம்பளமும், இதர வசதிகளும் தாராளமாகத் தரப்படுகின்றன' என்கின்றனர் தகவல் தொழில்நுட்பத் துறையினர். 'தொழிற்சங்கம் ஆரம்பித்தால், உடனே ஸ்டிரைக் நடக்குமோ' என்று அஞ்சத் தேவை இல்லை என்கிறார்கள் தொழிற்சங்கவாதிகள். இது எங்கே போய் முடியுமோ?



* முரளி தியோரா

டெல்லி அரசாங்கம், மத்தியப் பிரதேச அரசாங்கத்திடம் ''முந்நூறு அனுப்பி வைக்கட்டுமா?'' என்று கேட்டது. ஆனால், ம.பி. அரசோ, ''வேண்டாம்; எங்களிடமே ஏராளமாக இருக்கிறது. தவிரவும் இரண்டு வருடங்களுக்கு முன்னால் நீங்கள் கொடுத்த இருநூறையே இன்னும் சமாளிக்க முடியவில்லை'' என்று சொல்லிவிட்டது. எதைத் தெரியுமா? குரங்குகளைத்தான்! டெல்லியில் குரங்குகள் பெருகிவிட்டதால், அவற்றை மத்தியப் பிரதேச காடுகளுக்கு அனுப்ப முடிவு செய்தது டெல்லி அரசு. அதைத்தான் ம.பி. அரசு மறுத்துவிட்டது.

அண்மையில் மத்திய பெட்ரோலிய அமைச்சர் முரளி தியோரா, நீண்ட இடைவெளிக்குப் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். தம்மிடம் ஒளிவுமறைவு எதுவுமில்லை; பத்திரிகை நிருபர்கள் எப்போது வேண்டுமானாலும் தம்மைச் சந்திக்கலாம்; என்ன தகவல் வேண்டுமோ கேட்டுப் பெறலாம் என்றார். ஆனால், 'பெட்ரோல் விலையைக் குறைக்கும் எண்ணம் உண்டா?' என்று ஒரு நிருபர் கேட்டபோது, அமைச்சரது பதில் மௌனம்தான். ஆனால், அர்த்தம் பொதிந்த மௌனம்!

- எஸ்.சி.எம்







"நான் யாருக்கும் பயப்பட மாட்டேன்!"

'இளையராஜா விலகிவிட்டார்.. தங்கர் பச்சான் ஒளிப்பதிவு செய்ய மறுத்துவிட்டார்... அடுத்து என்னென்ன நிகழுமோ' என்கிற திகிலில் நாளொரு ரோலும் பொழுதொரு ரீலுமாக நடந்து வருகிறது 'பெரியார்' படத்தின் படப்பிடிப்பு. ஆனால் எது எப்படி நடந்தாலும் 'நான் மணியம்மை சுதா பாத்திரத்தில் நடித்தே தீருவேன்' என்று விடாப்பிடியாகச் சாதித்து வரும் குஷ்புவைச் சந்தித்தபோது சூடும் சுவையும் குன்றாமல் பேசினார்...

அடிக்கடி ஏதாவது சர்ச்சைகளில் சிக்கிக்கொள்கிறீர்களே.. ஏன்?

"இதற்கு நான் எப்போதும் காரணமாக இருந்ததில்லை. நீங்கள் கேட்க வேண்டியது என்னை சர்ச்சைகளில் சிக்கவைத்துக் குளிர்காய்கிறவர்களைத்தான். அவர்கள் அரசியலில் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளவே அப்படிச் செய்கிறார்கள். பொதுவாக நான் யாரைக் கண்டும் பயப்படமாட்டேன்; அவர்களைக் கண்டும் பயமில்லை."

மணியம்மையைப் பற்றி உங்களுக்கு என்னதான் தெரியும்?

"மணியம்மையைப் பற்றி எனக்குத் தெரியாததென்று எதுவுமே இல்லை. இன்டர்நெட்டில் அவரைப் பற்றிய தகவல்கள் ஏராளமாகக் கொட்டிக் கிடக்கின்றன. அவர் தியாகத்தின் சொரூபம். கி.வீரமணி அவர்களிடம் பேசி, அவரைப் பற்றிப் பல விஷயங்களை அறிந்துகொண்டேன். என் ஆர்வத்தைப் பார்த்து வியந்த வீரமணி அவர்களே 'மணியம்மை பாத்திரத்தில் நடிக்க மிகப் பொருத்தமானவர் நீங்கள்தான்' என்று பாராட்டிச் சென்றார். இதைவிட வேற என்ன சான்றிதழ் வேண்டும்?"

'பாரதியாராக நடித்த ஷாயாஜி ஷிண்டே' என்பதைப்போல் அல்லாமல் 'குஷ்பு மணியம்மையாக நடிக்கிறார்', 'சத்யராஜ் பெரியாராக நடிக்கிறார்' என்றுதானே பேசுகிறார்கள்...

"படம் வெளியான பிறகு இப்படிப் பேச மாட்டார்கள். ஒருவேளை என்னைக்கூடச் சொல்லலாம். ஆனால் சத்யராஜை அப்படிச் சொல்ல முடியாது. அவருடைய உழைப்பை நேரில் பார்த்த பெண்ணாகச் சொல்கிறேன், பெரியாராகவே இந்தப் படத்தில் அவர் வாழ்ந்திருக்கிறார்."

தொடர்ந்து அரசியல்வாதிகள் உங்களை எதிர்க்கிறார்கள் அல்லது அவர்களை நீங்கள் எதிர்க்கிறீர்கள்... எல்லாவற்றுக்கும் பதிலடி கொடுக்கவாவது அரசியல் பக்கம் ஒதுங்குவீர்களா?

"எந்த அரசியல்வாதியுடனும் எனக்குப் பகையில்லை. யாரும் என்னைப் பகையாகவும் நினைக்கப் போவதில்லை. சில வேண்டாத நிகழ்வுகள் அவ்வப்போது வரும், போகும் : மேகம் மாதிரி. இதற்காகவெல்லாம் நான் அரசியலுக்கு வந்துவிடுவேன் என்று கூறுவது அர்த்தமற்றது. இந்த நிமிடம் வரை அப்படியோர் எண்ணமில்லை. ஒரு நடிகையாக, குடும்பத் தலைவியாக, தயாரிப்பாளராக என் பணிகளைச் சிறப்பாகச் செய்தாலே போதும்."

- மனோ. சௌந்தர்

மும்பை வீதிகளில் பூ விற்றார்கள்; உணவகம் நடத்தினார்கள்; சிறு பொருள்களை வாங்கி வியாபாரம் செய்து வயிறு கழுவினார்கள் தாகர் சகோதரர்கள். அத்தனைக்கிடையிலும் அவர்களுக்குள் கனன்ற இசை வேட்கை மட்டும் தொலையவில்லை. அரசவைக் கலைஞர்கள் என்ற அந்தஸ்தை இழந்தபின் சுதந்திர இந்தியாவில் அலைந்து திரிந்து இறுதியில் மும்பையில் தங்களை மீண்டும் கலைஞர்களாக நிலைநிறுத்திக் கொண்டார்கள்.



• விஜய் சிவா



• பார்வையாளர்களாக சீனியர்கள்

தமது முன்னோர்களைப் பற்றிய இக்கதையை விவரித்த பஹாவுத்தின் தாகர், "அத்தனை தொல்லைகளுக்கிடையேயும் கவனம் சிதறாது ஆர்வத்தை அவர்கள் அடைகாத்து இக்கலையை எனக்கு அளித்திருக்கிறார்கள். இன்றைக்குப் பல சௌகரியங்களுக்கிடையே இசைக் கலைஞனாக வாழும் நான் 'கவனம் சிதறுகிறது' என்று சொல்வது எவ்வளவு அபத்தம்!" என்றார் உணர்ச்சி மேலிட.

எனினும், இன்றைய வாழ்க்கையில் கவன மாற்றத்தை ஏற்படுத்தும் விஷயங்கள் ஏராளம் என்பதையும் ஒப்புக்கொண்டார் இந்த ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்.

இசைக் கலைஞர்கள் இந்தக் கவன மாற்றுச் சூழலில் தங்களை நிலைப்படுத்திக்கொண்டு உள்முகமாகச் சென்று வளர்ச்சி காண முடிகிறதா, எப்படிச் சமாளிக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்வதற்கென்றே ஒரு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தது 'தி ஹிந்து' நாளிதழ். சென்னையில் நவம்பர் 14 அன்று நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேசத்தான் வடக்கேயிருந்து வந்திருந்தார் தாகர்.

இக்கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்த மற்றொரு வட இந்தியக் கலைஞர் சுருதி ஷடோலிகர், தமது தந்தை இசைப் பயிற்சியினூடே கவனச் சிதறலுக்குத் தடை போடும் வழிமுறைகளை பின்னிப் பிணைத்ததை விளக்கினார். பயிற்சியும் கடுமை; கட்டுப்பாடுகளும் கடுமையானவை!

தங்கச்

"கிரிக்கெட்டும் சினிமாவும் கவனத்தைச் சிதறடிப்பவைதான். ஆனால் அவற்றையே எங்களுக்கு ஊக்கப் பரிசுகளாக்கினார் எங்கள் தந்தை" என்றார் வயலின் சகோதரர்களுள் ஒருவரான கணேஷ் (கணேஷ் - குமரேஷ்). 'நான்கு மணிக்கு எழுந்து சாதகம் செய்தால் டீ.வி.யில் கிரிக்கெட் பார்க்கலாம்; நன்றாக வாசித்தால் ஹோட்டலில் விருந்து' என்று 'பரிசளிப்பாராம்' தந்தை. 'இதைப்போன்ற கவனச் சிதறல்கள் அவசியமே. அவற்றின் பாதிப்பால் இசையில் சுவாரஸ்யமான வேறுபாடுகள் மலரும்' என்றார் கணேஷ்.

"கவன ஈர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். அவற்றால் கவனச் சிதறல்கள் தொடர்ந்தால், கவனச் சிதைவில்போய்



முடியும். இதைத் தவிர்க்கவும் ஜெயிக்கவும் வேண்டுமானால் கலைஞனுக்கு ஏகாக்ர சித்தம் வேண்டும் - அதுமட்டுமே அவனைக் காத்து வளர்க்க முடியும்" என்று சித்ரவீணை ரவிகிரண் தீர்மானமாகக் கூற, ரஞ்சனி - காயத்ரி சகோதரிகளோ, உள்முகமாகத் திரும்புவது இன்னமும் சவாலாகவே இருப்பதை ஒப்புக்கொண்டனர் எளிமையாக. "கச்சேரிகளுக்கு ஆயத்தம் செய்வதில் வெற்றி காண முடிகிறது. ஆனால் கலைஞராக முதிர்வதற்குப் பல

• காயத்ரி - ரஞ்சனி



சாவி தீர்வு!

தடைகள்" என்றார் காயத்ரி.

தடைகளை வெல்ல ஐந்தம்ச இட்டம் தந்து, ஒரு 'தங்கச் சாவி' தீர்வும் சொன்னார் விஜய் சிவா :

உடல் ஆரோக்கியம் பேணுதல், மன வளம் பெருக்குதல், குரல் வளத்துக்கும் சிந்தனை ஒருமுகப்படவும் பிரத்யேகப் பயிற்சிகள் மேற்கொள்ளுதல் தேர்ந்தெடுத்த, சிறந்த கலைஞர்களின் இசையைத் தொடர்ந்து கேட்டல், இசையைப் பிறருக்குப் பயிற்றுவித்தல். கற்றுத் தரும் போது ஒரு கலைஞன் தனது இசையைக் குறித்தும் அணுகுமுறையைக் குறித்தும் சிந்திக்க ஆரம்பிக்கிறான்.

இவற்றுக்கெல்லாம் மேலான தங்கச் சாவி தீர்வு : ஸத்சங்கம் - அதாவது ஹரி கதை, உபன்யாஸம் போன்ற நிகழ்ச்சிகள். கலைஞன் கர்னாடக சங்கீதத்தின் நெளிவு சுளிவுகளைப் புரிந்துகொண்டு மேலும் சிறப்பாகப் பாட / வாசிக்க அது உதவுகிறது என்பதுடன் மனத்தை ஒடுக்கி, பக்குவப் படுத்தி, அகந்தை, அலட்சியம் போன்றவற்றிலிருந்து காக்கிறது; உள்முகமாக நோக்கவும் தூண்டுகிறது.


ஆதிசங்கரரிடம் துவங்கி டைம் மேனேஜ்மெண்ட்டில் முடிந்த இவருடைய உரை கைதட்டலை அள்ளிச் சென்றது!

- தே.வி.

படங்கள் : **ஸ்ரீஹரி**



• சுருதி ஷடோலிகர்



• பஹாவுத்தின் தாகர்



• வயலின் கணேஷ்



• ரவிகிரண்

மக்களின் நம்பிக்கை!

இன்றைய தேதியில் இருநூற்றுத் தொண்ணூற்று ஐந்து ரூபாயை வைத்துக் கொண்டு என்ன பண்ண முடியும்? 1892-ஆம் ஆண்டில், இந்தச் சிறு தொகையினை முதலீடாக வைத்துத்தான் கொல்கத்தாவில் ஒரு பிஸ்கட் தயாரிப்புத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. அது மின்சாரம் இல்லாத காலகட்டம். எனவே ஒரு பழைய கால வீட்டில், விறகு அடுப்பினைப் பயன்படுத்தித்தான் பிஸ்கட்டுகள் தயாரிக்கப்பட்டன. ஆனால், அந்த பிஸ்கட்டுகளிலிருந்த சுவை, அனைவரையும் கவர்ந்தது. இன்று பிஸ்கட் உலகில் முடிசூடா மன்னனாகத் திகழும் பிரிட்டானியாவின் ஆரம்பம் இதுதான்!

சில ஆண்டுகளில், குப்தா சகோதரர்கள் என்ற வியாபாரிகள் அந்த பிஸ்கட் பேக்கரியை வாங்கி, வி.எஸ்.பிரதர்ஸ் என்ற பெயரில் நடத்தினார்கள். 1910-ஆம் ஆண்டில் மின்சார வசதி வந்தவுடன், பிஸ்கட் தயாரிப்பு சூடுபிடித்தது. 1918-ல், கொல்கத்தாவைச் சேர்ந்த ஹோம்ஸ் என்ற ஆங்கிலேயர் அவர்களுடன் கூட்டாளியாகச் சேர்ந்தார். இதனையடுத்து, பிஸ்கட் பேக்கரியின் பெயரும் பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி என்று மாற்றம் செய்யப்பட்டது.


அடுத்த இரண்டாண்டுகளில், மின் சாரத்தில் இயங்கும் இயந்திரங்களும், கேஸ் பயன்படுத்தி பிஸ்கட் தயாரிக்கும் 'oven'களும் பிரிட்டனிலிருந்து வந்து இறங்கின. ஆசியா கண்டத்திலேயே, கேஸ் பயன்படுத்தி பிஸ்கட் தயாரிக்கும் இடம் கொல்கத்தாதான் என்ற சிறப்பும் கிடைத்தது. பிஸ்கட் மற்றும் பேக்கரி ஐட்டங்களைச் சாப்பிடுவது, இந்திய மக்களின் கலாசாரத்துக்குள் அடியெடுத்து வைத்தது.

பிரிட்டானியா பிஸ்கட் நிறுவனம் ஒரு தொழிற்சாலையாக உருமாறியது. அடுத்த சில ஆண்டுகளில் மும்பையிலும் ஒரு தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இந்தியாவில் பிரிட்டானியா நிறுவனம் அடைந்து வரும் சீரான வளர்ச்சியினைக் கண்ட பிரிட்டனின் பீக் ஃபெரன் நிறுவனம், பிரிட்டானியாவில் கணிசமாக முதலீடு செய்து, தன் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டது.

இரண்டாம் உலகப் போரின்போது, பிரிட்டிஷ் அரசாங்க இராணுவ வீரர்கள் சாப்பிடுவதற்கு கொல்கத்தா மற்றும் மும்பை தொழிற்சாலைகளில் பிஸ்கட்டுகளைத் தயாரித்து பிரிட்டானியா அனுப்பியது. இதன் பலனாக 1940-ஆம் ஆண்டில் பதினாறு லட்சம் ரூபாயாக இருந்த பிரிட்டானியா பிஸ்கட்களின் விற்பனை, அடுத்த ஐந்தாண்டுகளில் சுமார் எட்டு மடங்கு உயர்ந்து, பிரிட்டானியா அபார வளர்ச்சி கண்டது.




பிரிட்டானியா பிஸ்கட்டுகளுக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்த போதிலும், பிரிட்டானியா பிஸ்கட் வினியோகத்தை



Parry's நிறுவனம்தான் கவனித்துக் கொண்டது. இந்த ஏற்பாடு 1975 வரை நீடித்தது. அதன்பின் பிரிட்டானியாவே தம் தயாரிப்புகளின் வினியோகம் மற்றும் விற்பனையையும் ஏற்றுக் கொண்டது.

வளர்ச்சியடைந்த பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனிக்கு 'பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1983-ல் பிரிட்டானியாவின் ஆண்டு விற்பனை நூறு கோடியைத் தொட்டது.

1992-ல் இந்தியாவில் பவழ விழா



கண்ட பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ், தற்போது நம் நாட்டின் முன்னணித் தொழில் குழுமங்களில் ஒன்றான வாடியா குழுமத்தில் இருக்கிறது. வாடியா குழுமமும், உலகளாவிய முன்னணி பால் மற்றும் பானங்கள் தயாரிப்பு நிறுவனங்களை நடத்தும் டானோன் குழுமமும் இந்திய பிரிட்டானியாவின் சரிசமமான பங்குதாரர்கள். இன்று உலகம் முழுவதிலுமாக பிரிட்டானியா பிஸ்கட் மற்றும் இதர பொருட்களைத் தயாரிக்க 46 தொழிற்சாலைகள் இருக்கின்றன.

பிரிட்டானியாவின் விற்பனை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவதன் ரகசியம் என்ன? இந்திய மக்கள் தொகையில் தொண்ணூறு கோடிப் பேர், பிஸ்கட் சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான்.

பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட்டுகள் முதல் தெருமுனைப் பெட்டிக் கடைகள் வரையிலான இருபது லட்சம் கடைகள் மூலம் இந்தியா முழுவதும் பிரிட்டானியா தயாரிப்புகள் விற்பனையாகின்றன. 'உடலுக்கு நலம்; நாவுக்குச் சுவை; தயாரிப்பில் தரம்; விலையில் நயம்' – இதுதான் பிரிட்டானியாவின் சக்ஸஸ் ஃபார்முலா.

மக்களின் டேஸ்ட் வயதுக்கேற்ப மாறுபடுகிறது. குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவது வயது வந்தவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கும். அவர்களுக்குப் பிடித்த ருசி, பெரியவர்களுக்குப் பிடிக்காமல் போகக் கூடும். இதை நன்றாகப் புரிந்து கொண்ட பிரிட்டானியா, குழந்தைகளுக்கென்றே தயாரித்து விற்பனை செய்வது மில்க் பிக்கிஸ். ஏழு முதல் பதினான்கு வயது

எஸ். சந்திரமௌலி

"நோய்ல இருக்கற என் லவ்வர், டாக்டரான என் அப்பாகிட்டயே ஆபரேஷன் செஞ்சுக்க ஒத்துக்கிட்டார்டி..."

"இவ்வளவு நாளா உனக்கு உயிரைக் கொடுக்கத் தயாரா இருந்தவர், இப்போ உன்னோட அப்பாவுக்குக் கொடுக்கத் தயாராயிட்டாருன்னு சொல்லு..."

- கே. ஆனந்தன்



வரையிலான குழந்தைகளை இலக்காகக் கொண்டு தயாரித்து விற்கப்படுவது பிரிட்டானியா டைகர் பிஸ்கட்.

டீன் ஏஜ் வயதினரை மனதில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இன்னொரு பிஸ்கட் வகைதான் லிட்டில் ஹார்ட்ஸ். இதுவும் சூப்பர் டூப்பர் ஹிட்! இனிப்பா? உப்பா? என்று பட்டிமன்ற ஸ்டைலில், ஒரு விவாதம் மூலமாக விளம்பரப்படுத்தப்பட்ட 50 - 50- பிஸ்கட், வயது வரம்புகளைக் கடந்து வரவேற்பைப் பெற்றது. டீ சாப்பிடும் போது உடன் சாப்பிடும் பிஸ்கட் ரகம், மேரி கோல்ட்.

இந்திய மக்களின் கிரிக்கெட் மோகத்தை அடிப்படையாக வைத்து பிரிட்டானியா, 1999-ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது 'பிரிட்டானியா சாப்பிடுங்கள்; உலகக் கோப்பைக்குப் போங்கள்' என்று ஒரு போட்டியினை நடத்திப் பெரும் பரபரப்பூட்டியது. இந்தப் போட்டியின்படி, பிரிட்டானியா பிஸ்கட் வாங்குபவர்கள், அதன் உள்ளே இருக்கும் அதிர்ஷ்ட அட்டையினை உரசிப் பார்த்து, அதிர்ஷ்டம் இருந்தால் இலவசமாக இங்கிலாந்துக்குச் சென்று, உலகக் கோப்பை போட்டியினைக் காண முடியும். இதன் பலனாகவும், பிரிட்டானியா பிஸ்கட்களின் விற்பனை 37 சதவிகிதம் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து 2002 - 2003-ல் தென்னாப்பிரிக்காவில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் போதும் இதே அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம் நடத்தப்பட்டது.

“ நல்ல விளம்பர யுத்தி, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற எந்த நிறுவனமும் வெற்றி பெறும் ”

'லகான்' இந்திப் படம் வெளியாகி, கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியர்களையும் கவர்ந்தவுடன், பிரிட்டானியா நூதனமான ஒரு விளம்பர யுக்தியினைக் கையாண்டது. 'லகான்' படத்தில் நடித்த நட்சத்திரங்களைச் சந்திக்கவும், அவர்களுடன் கிரிக்கெட் மேட்ச் ஆடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கிரிக்கெட் மேட்சைப் பார்க்க நாற்பதாயிரம் ரசிகர்கள் திரண்டது ஒரு சரித்திரம்.

நல்ல விளம்பர யுத்தி, மக்களின் நம்பிக்கை... இரண்டையும் பெற்றுவிட்ட எந்த நிறுவனமும் வெற்றி மேல் வெற்றி குவிப்பதில் வியப்பேதுமில்லை!

பிரிட்டானியா - சில தெரியாத தகவல்கள் :

- பிரிட்டனில், பிரிட்டானியாவின் அதிநவீன தொழிற்சாலை டீசைட் என்ற இடத்தில் இருக்கிறது.
- பிஸ்கெட் தயாரிப்பு மற்றும் அது தொடர்பான தொழில்களுக்காக கன்சல்டன்சி பணியிலும் பிரிட்டானியா ஈடுபட்டுள்ளது.
- பிரிட்டானியா டைகர் பிஸ்கட் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அந்தப் பெயரில் பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தக லேபில்கள், ஸ்டிக்கர்கள், ஸ்கேல் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டன.
- ஆண்டு முழுவதும் விற்பனையாகும் பிரிட்டானியா பிஸ்கட்டுகளை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கி வைத்தால் எவரெஸ்ட் சிகரத்தைவிட பத்து மடங்கு உயரத்துக்குப் போகும்.
- பிரிட்டானியாவின் இணையதளம்: www.britannia.co.in

மாலதியக்கா

வாழ்க்கை மிகவும் விசித்திரமானது. சத்துணவு சோற்றுக்காகத் தட்டைத் தூக்கிக்கொண்டு ஓடிய என்னை, நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்க வைத்திருக்கிறது. நூறு பவுன் போட்டுத் திருமணம் செய்து வைத்த பக்கத்து வீட்டு மாலதியக்காவை, என் ஆபீஸ் கேன்டீனில் உள்பாவாடை விற்க வைத்திருக்கிறது.

மாலை நான்கு மணிக்கு மேல், காபிக்காக கேன்டீனுக்கு வந்தபொழுதுதான் மாலதியக்காவைப் பார்த்தேன்.

ஒரு மேஜையைச் சுற்றிப் பெண்கள் கூட்டம். கும்பலுக்கு நடுவிலிருந்து, "நல்ல குவாலிட்டியான இன்ஸ்கர்ட் மே'டம்'' என்று கேட்ட குரல், மிகவும் பரிச்சய மானதாக இருந்தது.

வேகமாகச் சென்று பார்த்தேன். ஒரு பெரிய நீல நிறப் பையிலிருந்து உள் பாவாடைகளை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தது... மாலதியக்கா... அதிர்ச்சியில் எனக்குக் கால்கள் நடுங்கின.

"இந்தப் பிங்க் கலரப் பாருங்க மேடம்" என்று நிமிர்ந்த மாலதியக்கா என்னைப் பார்த்துவிட்டாள். அவளுக்கும் இது எதிர்பாராத அதிர்ச்சியாகத்தான் இருக்கும். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு, அவளுக்கென்றே பிரத்யேகமான அந்தச் சிரிப்பை உதிர்த்தாள். எந்தச் சூழ்நிலையிலும் மாலதியக்காவால் மட்டும்தான் இப்படிச் சிரிக்க முடியும்.

சட்டென்று திரும்பி, வியாபாரத்தைக் கவனித்தாள். கும்பல் போனவுடன், "நீ எப்ப சேகரு மெட்ராஸ் வந்த? இந்த ஆபீஸ்லதான் வேலை செய்றியா?'' என்றாள்.

நான் மாலதியக்காவின் கேள்விக்குப் பதில் சொல்லாமல், "என்னக்கா... இதெல்லாம்..." என்றேன் குரல் தழுதழுக்க.

"இன்ஸ்கர்ட். நீ நாலு பாவாடை வாங்கிக்கோ, சேகரு..." என்று அக்கா விளையாட்டாகக் கூறியவுடன், என் கண்கள் கலங்கிவிட்டன.

"கண்ணு கலங்கல்லாம் நேரமில்ல சேகரு... லேடீஸெல்லாம் வர்றாங்க... வியாபாரத்த முடிச்சுட்டுப் பேசிக்கலாம். வாங்க மேட்டம்... இன்ஸ்கர்ட், நைட்டி..." என்று தன் வியாபாரத்தில் ஆழ்ந்தாள். கேன்டீனுக்கு வெளியே வானம் இருண்டு கிடந்தது.

மாலதியக்காவின் கழுத்தில், ஒரு வெளுத்துப் போன மஞ்சள் கயிற்றைத் தவிர வேறொன்றுமில்ல. கைகளில் கவரிங் வளையல்; உடம்பில் ஒரு பழைய சேலை. "கடவுளே..." என்று வேதனையுடன் நகர்ந்தேன். மாலதியக்கா வாழ்ந்த வாழ்க்கையை எந்தச் சூறைக்காற்று அடித்துக் கொண்டு போனது?



அப்போது நாங்கள் திருச்சியில் இருந்தோம். அப்பா டெய்லர். முப்பது ரூபாய் வாடகைக்கு, முதலியார் சந்தில் குடியேறியபோதுதான், முதன்முதலாக மாலதியக்காவைப் பார்த்தேன்.


நான் ஆறாவது படித்துக் கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டு முத்து ஒரு நாள் என்னிடம், "மலைக்கோட்டைக்கு கார்ல போகலாமா?" என்றான்.

"கார்லயா? யாரு காரு?" என்றேன் ஆச்சர்யத்துடன்.

"எதிர்த்தாப்ல ஒரு பச்சை கலர் பங்களா வீடு இருக்குல்ல... அங்க ஒரு அக்கா இருக்கு. சின்னப்புள்ளைங்கன்னா உசுரு. தெருப் பசங்களுக்குக் காசில்லாம ட்யூஷன் எடுக்கும். அடிக்கடி எங்களை கார்ல வெளிய அழைச்சுட்டுப் போகும். நீயும் வா..." என்று முத்து என்னையும் இழுத்துக் கொண்டு சென்றான்.

அந்த பங்களாவின் கேட்டைத் திறந்தவுடன், பெரிய தோட்டம். தோட்டத்தைக் கடந்தவுடன், பிரமாண்டமான பங்களா. வாசலில் இரண்டு கார்கள் நின்று கொண்டிருந்தன.

காரைத் தாண்டி வீட்டினுள் நுழைந்தோம். ஹாலில் நாலைந்து குட்டீஸ்களுக்கு நடுவில் பாவாடை, தாவணி அணிந்துகொண்டு அந்தப் பெண் அமர்ந்திருந்தாள். "அக்கா... இவனையும் மலைக்கோட்டைக்கு அழைச்சுட்டுப் போலாமா?" என்று முத்து கூறியவுடன், அந்தப் பெண் திரும்பி என்னைப்





• மாடல் படம்: பொள்ளாச்சி சுந்தரம்

ஜி.ஆர்.சுரேந்தர்நாத்

பார்த்தான். "இவங்கதான் மாலதியக்கா" என்றான் முத்து.

மாலதியக்கா, "சார் பேரு என்ன?" என்றாள். "சந்திரசேகர். எங்க ஸ்கூல்தான். ஆறாம் கிளாஸ் படிக்கிறான். எப்பவும் ஃபர்ஸ்ட் ரேங்க்தான் எடுப்பான்" என்று முத்து கூறியவுடன், மாலதியக்காவின் முகமெங்கும் பொங்கி வழிந்த அந்தச் சிரிப்பில், பிறந்தது முதலே பழகியது போன்றதொரு உணர்வு எனக்கு ஏற்பட்டு விட்டது.

நான் ஒன்பதாவது படிக்கும்போது மாலதியக்காவுக்குத் திருமணமானது. நூறு பவுன் போட்டு, உள்ளூரிலேயே ஒரு பணக்கார வியாபாரிக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். என் வாழ்நாளில் அந்த மாதிரியொரு பிரம்மாண்டமான கல்யாணத்தை நான் பார்த்ததே இல்லை. கல்யாணம் முடிந்து மாலதியக்கா புகுந்த வீட்டுக்குப் புறப்பட்டபோது, நாங்கள் அழுத அழுகையைப் பார்த்து, தெருவே அசந்துவிட்டது.

மாலதியக்கா திருமணமாகிச் சென்று விட்டாலும், வாரத்துக்கொரு முறை பிறந்த வீட்டுக்கு வரும்போது, எங்களைப் பார்க்காமல் செல்ல மாட்டாள்.

கல்லூரிப் படிப்பு முடித்துவிட்டு, இரண்டாண்டு காலம் வரை வேலையேதும் கிடைக்காமல், நான் மிகவும் துவண்டு போயிருந்த காலமது. ஒரு முறை ஏதோ ஒரு சண்டையில், அப்பா என்னைத் 'தண்டச்சோறு' என்று திட்டிவிட, நான் மூட்டைப் பூச்சி மருந்தைக் குடித்து விட்டேன். வீட்டில் பெரியாஸ்பத்திரியில் சேர்த்துக் காப்பாற்றிவிட்டார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்த என்னைப் பார்க்க வந்தாள் மாலதியக்கா. எனது படுக்கையருகில் வந்தவுடனேயே என் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தாள். எனக்குப் பொறி கலங்கியது.

"ஆம்பளையாடா நீ... ஆம்பளையான்னு கேக்குறேன். கோழைப் பய... வேலை கிடைக்கலயாம். மருந்த குடிச்சுட்டானாம்."

"இல்லக்கா..."

"ச்சீ... பேசாதடா. முயற்சியா தேடணும். திருச்சியிலேயே குதிர ஓட்டுனா கிடைச்சுடுமா? மெட்ராஸ்... அங்க, இங்கன்னு போய்த் தேடணும்."

ரீமிக்ஸ் ராஜா!

இசைஞானி இளையராஜாவின் காலத்தால் அழியாத கானங்களைத் தேர்ந்தெடுத்து, 'பைரோ மொபைல்' நிறுவனத்துக்காக, புதிய முறையில் ரீமிக்ஸ் செய்திருக்கிறார் கார்த்திக் ராஜா.

கிட்டத்தட்ட 80 பாடல்களை வைத்துப் பணிபுரிந்து கொண்டிருக்கும் கார்த்திக் ராஜா, முதல் பத்துப் பாடல்களுக்கு கமல் ஹாசன், ஷ்ரேயா கோஷல், கார்த்திக், சுஜாதா, விஜய் ஜேசுதாஸ் போன்ற

"எல்லாம் போய்ட்டு வந்தான்ம்மா. கம்ப்யூட்டர் தெரியுமான்னு கேக்குறாங்களாம்" என்றாள் அம்மா.

"கத்துக்க... பேசமா ஒரு வருஷம் பிஜிடிசிஏ படிக்கலாம்ல..."

நாங்கள் யாரும் வாயைத் திறக்கவில்லை. பிஜிடிசிஏ படிக்க ஐயாயிரம் ரூபாய் செலவாகும். அவ்வளவு பணத்துக்கு நாங்கள் எங்கு போவது? மாலதியக்கா புரிந்துகொண்டாள்.

அவள் கொடுத்த பணத்தில்தான் பிஜிடிசிஏ படித்தேன். டெல்லியில் வேலை கிடைத்து, அம்மா, அப்பாவை என்னோடு அழைத்துக் கொண்டு சென்று விட்டேன். சிறிது காலம் மாலதியக்காவோடு கடிதத் தொடர்பு இருந்தது. பிறகு அவளிடமிருந்து பதில் வருவது நின்று போக... தொடர்பு அறுந்து போனது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு எங்கள் சென்னை கிளைக்கு வந்த பிறகுதான் திருச்சி சென்றேன். அங்கு எனக்கு நிறைய அதிர்ச்சிகள் காத்திருந்தன. முத்துதான் எல்லா விஷயங்களையும் கூறினான். "மாலதியக்கா புருஷனுக்குத் திடீர்னு வியாபாரத்துல பயங்கர நஷ்டம். கடன் பெருத்து, வட்டிகூட கட்ட முடியல. கடன்காரங்க ரொம்ப நெருக்கிட்டாங்க. நடுவுல மாலதி அக்காவோட அப்பாவும் இறந்துட்டாரு. கூடப் பொறந்தவங்களும் சரியா உதவல. கடன்காரங்க ரோட்டுல நின்னு சத்தம் போட ஆரம்பிச்சுட்டாங்க. பாவம் மாலதியக்கா... ரொம்பக் கலங்கிடுச்சு. கடை, வீடு,

முன்னணிப் பாடகர்களை வைத்து ரீமிக்ஸ் செய்துள்ளார். 'சிவப்பு ரோஜா' படத்தின் 'நினைவோ ஒரு பறவை', 'பகவதிபுரம் ரயில்வே கேட்'டின் 'காலைநேரக் காற்றே...', 'பன்னீர் புஷ்பம்' படத்தின் 'கோடைகாலக் காற்றே', 'கீதாஞ்சலி' படத்தின் 'துள்ளி எழுந்தது' போன்ற அம்சமான பாடல்கள் அடங்கியுள்ள இத்தொகுப்பு, பிரமாத வரவேற்பினைப் பெற்றிருக்கிறது.

இனி இவை செல்போன்களில் சிணுங்கப் போகின்றன.

"அப்பாவின் அந்தக் காலப் பாடல்களை இந்தக் கால இளசுகளுக்கு ஏற்றவாறு மாற்றிப் புதுமையாக இசை அமைத்திருக்கிறேன். இதைக் கேசட்டாகவோ, சி.டி.யாகவோ வெளியிடாமல், மொபைல் போனில் கேட்டு மகிழும் விதமாக, 'பைரோ' நிறுவனம் மொபைலில் மட்டுமே வெளியிடும் புதுமையைச் செய்திருக்கிறது" என்கிறார் கார்த்திக் ராஜா.

ஏர்செல்லில் 66 66 எண்ணை டயல் செய்தால், இளையராஜாவின் பாடல்களைக் கேட்டு மகிழலாம்.

- ஷைலஜா



நகைங்க... அத்தனையும் வித்தும் முழுசா கடன அடைக்க முடியல. நெருக்கடி தாங்க முடியல. கௌரவமா வளர்ந்த பொண்ணு. ஒருநாள் ராத்திரி யாருகிட்டயும் சொல்லிக்காம குடும்பத்தோட எங்கயோ போய்ட்டாங்க."

"கடவுளே..." என்று துக்கத்துடன் முகத்தைப் பொத்திக்கொண்டேன்.

அதன் பிறகு நான் திருச்சிக்குச் செல்வதே இல்லை. மாலதியக்கா இல்லாத திருச்சியில் எனக்கு என்ன இருக்கிறது?

ஆனால் இந்தக் கோலத்தில் சந்திப்பேன் என்று சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

வியாபாரத்தை முடித்துக்கொண்டு, மாலதியக்கா என்னை நோக்கி வந்தாள். "உன்னை மெட்ராஸ்ல பார்ப்பேன்னு கனவுலகூட நினைக்கல. எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?" என்றாள் முகமெங்கும் சிரிப்புடன். இந்தச் சூழ்நிலையில் என்னைப் பார்க்க நேர்ந்ததைக் குறித்த எந்த ஒரு வருத்தமும் அந்தச் சிரிப்பில் இல்லை.

"நீ எப்ப மெட்ராஸ் வந்த?" என்றாள் என்னிடம்.

"ரெண்டு வருஷமாகுது. நீங்க?"

"அது ஆயிடுச்சு... மூணு வருஷம். கல்யாணமாயிடுச்சா உனக்கு?"

"இல்லக்கா; இப்பத்தான் பார்த்துக்கிட்டிருக்காங்க."

"சீக்கிரம் பாரு." என்று சில வினாடிகள் அமைதியாக இருந்துவிட்டு, "திருச்சி போயிருந்தியா? விஷயமெல்லாம் கேள்விப்பட்டியா?" என்றாள்.

"ம்..." என்றவன்,

"அக்கா... என்னால உங்களுக்கு உதவி செய்ய முடியும்" என்றேன் தயங்கித் தயங்கி. தயக்கத்துக்குக் காரணமிருந்தது.

இறைவனிடமே, 'ஏதேனும் வரம் வேண்டுமா?' என்று கேட்பது போலிருந்தது.

"அதெல்லாம் வேணாம், சேகரு."

"இல்லக்கா. இந்தப் படிப்பு, வேலை... எல்லாம் நீங்க கொடுத்ததுக்கா."

"சீ... வாயைக் கழுவு. நீ திறமையா படிச்ச... வேலைக்குப் போன. வேற ஏதாச்சும் பேசு" என்றாள் கண்டிப்பாக.

ஜன்னலுக்கு வெளியே பெய்ய ஆரம்பித்த மழையைச் சிறிது நேரம் நோக்கிவிட்டு, "ஆமாம்... திருச்சிக்கு அப்பப்ப போறியா?" என்றாள்.

"இல்லக்கா."

"நாச்சியார் கோயில் திருவிழாக்காச்சும் போலாம்ல."

"நீங்க இல்லாத திருச்சிக்குப் போகவே பிடிக்கலக்கா."

"கவலப்படாத விடு... அடுத்த வருஷம் நாச்சியார் கோயில் திருவிழாவுக்கு நாம ஒண்ணாப் போயிடலாம்" என்ற மாலதியக்காவைக் கேள்வியுடன் நோக்கினேன்.

"பிஸினஸ் நல்லாப் போகுது, சேகரு. அவரு கடைல முதலாளியா உட்கார்ந்திருந்த மனுஷன், நாலு ஆபீசுக்குப் போய் விக்க யோசிச்சாரு. சரி... நீங்க வீட்டுல உக்காந்து தைச்சுக் கொடுங்க. நான் வெளி



• வருணா



• சுப்புலட்சுமி



• அக்ஷரா

வருணாவின் வண்ண மழை

வருணா என்று பெயர் வைத்ததால் தானோ என்னவோ, அந்த ஐந்து வயதுச் சிறுமியின் ஓவியக் கண்காட்சிக்கு 'வண்ண மழை' என்று பெயர் சூட்டியிருந்தார்கள். அண்மையில் சென்னையில் நடந்த வருணாவின் ஓவியக் கண்காட்சியினைக் குத்து விளக்கேற்றித் துவக்கி வைத்தவர்கள் இரண்டு சிறுமிகள். ஒருவர் கமலின் மகள் அக்ஷரா. இன்னொருவர் கௌதமியின் மகள் சுப்புலட்சுமி. வழக்கமான பாணியில் நிஜமான குத்து விளக்கினை ஏற்றாமல், ஒரு குத்துவிளக்கு ஓவியத்துக்கு எரியும் திரியினைத் தூரிகையால் வரைந்தது புதுமையாக இருந்தது. 'அபூர்வ சகோதரர்கள் அப்பு' கமலையும், தமிழக கவர்னர் பர்னாலாவையும் கோட்டுச் சித்திரமாக வரைந்து, அவர்களிடமே ஆட்டோகிராஃப் வாங்கி, அவற்றையும் பார்வைக்கு வைத்திருந்தார்கள்.

கண்காட்சித் துவக்கத்தின்போது யூகிசேது 'இங்கே இத்தனை படம் இருக்கு. ஆனால் ஆங்கிலத்தில் 'கலர் ரெயின்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தமிழில் தலைப்பு வைத்திருந்தால் அரசாங்கத்தின் வரிச் சலுகை கிடைத்திருக்குமே!' என்று ஜோக் அ(க)டித்தார்.

''கவர்னர் ஆட்டோகிராஃப் போடும்போது என்ன சொன்னாராம்?'' ''படம் ரொம்ப நல்லா இருக்கே! நான் அவ்வளவு நல்லா இருக்கேனா?'' என்று கேட்டுவிட்டுத் தன் தாடிக்குள் ரகசியமாகச் சிரித்தாராம்.

• மானஸா

படம் : ஸ்ரீஹரி

வியாபாரத்தைப் பார்த்துக்கிறேன்னு கிளம்பிட்டேன். செகரட்டேரியட், சேப்பாக்கம், டி.எம்.எஸ்.ன்னு எந்த ஆபீஸ் கேம்பஸையும் விடறதுல்ல. மொத ஒரு வருஷம் கஷ்டப்பட்டோம். இப்ப தேறியாச்சு. தி.நகர்ல கொஞ்சம் கடைங்களுக்குக்கூட மொத்தமா போட ஆரம்பிச்சுட்டேன். மாசம் பத்தாயிரத்துக்குக் குறையாம வரும். மூவாயிரத்த மட்டும் குடும்பச் செலவுக்கு வச்சுக்கிட்டு, மிச்சத்தை பேங்க்ல போட்டுடுவேன். ஏன் தெரியுமா?''

''ஏன்க்கா?''

''ஏதோ நேரம் சரியில்ல, ஓடி வந்துட்டோம். முக்காவாசி கடனை அடைச்சுட்டுதான் வந்தோம். ஆனா முதலியாருக்குத்தான் ஒரு ரெண்டு லட்சம் தரமுடியாமப் போயிடுச்சு. நம்பிக் கடன் கொடுத்த மனுஷன ஏமாத்தலாமா சேகரு? அதான்... சிக்கனமா குடும்பம் நடத்துறேன். குடிசை மாற்று வாரிய வீட்டுல தான் இருக்கோம். பிள்ளைங்கள கார்ப்பரேஷன் ஸ்கூல்லதான் சேத்து விட்டுருக்கேன். அடுத்த வருஷத்துக்குள்ள ரெண்டு லட்சம் சேர்ந்துடும். சேர்ந்தவுடனே திருச்சி போறோம்... கடன அடைச்சுட்டு, ஊருல தலை நிமிர்ந்து நடக்குறோம்'' என்ற மாலதியக்கா, கிடுகிடுவென வளர்ந்து, வான் வரை உயர்ந்து விட்டதைப் போல் தோன்றியது.

வெளியே மழை... மாலதியக்காவின் பொருட்டு, எல்லோர்க்கும் ஆக்ரோஷமாகப் பெய்துகொண்டிருந்தது. ●

சின்னத்திரை

"நான் கோடியில் ஒருத்தி!"

"குயிலின்னு யாருக்காவது பேரு கேள்விப்பட்டிருக்கீங்களா? நூறுல ஒருத்தருக்கோ, ஆயிரத்துல ஒருத்தருக்கோ இல்ல... கோடியில ஒருத்தருக்குத்தான் இப்படிப் பேரு வைப்பாங்க... நான் கோடியில ஒருத்தி!" என்று எடுத்த எடுப்பிலேயே டாப் கியரில் பேச ஆரம்பிக்கிறார் 'பூவிலங்கு' குயிலி.

"என்னைப் பார்க்கற பல பேரும் 'சீரியல்ல உங்களால எப்படி நடிக்க முடியுது... சதா அழறது அலுப்பா இல்லையா?'ன்னு கேக்கறாங்க. நடிப்புன்னு வந்தப்புறம் அழறது, சிரிக்கறதெல்லாம் பார்க்கக் கூடாது, பார்க்க முடியாது. மெஜாரிட்டிக்குத்தான் இங்க மதிப்பு. ஆடியன்ஸ் கேக்கறாங்க; நாங்க அழறோம் இல்ல சிரிக்கறோம்."

'நடிக்கறவங்ககூட பிரச்னை, கால்ஷீட் ப்ராப்ளம்னா உடனே போட்டோ காட்டி மாலை போடுறது, இல்ல இவருக்குப் பதில் இவர்னு சொல்றது சமீப காலமா சீரியல்கள்ல அதிகரிச்சிட்டு வர்றது நல்லதா?' என்றால், ரொம்ப எச்சரிக்கையாக வருகின்றன குயிலியிடமிருந்து வார்த்தைகள்.

"இந்தச் சந்தர்ப்பத்தை உருவாக்குறது அந்த மனுஷன்தான். இது நிர்வாகத்துக்கும் சம்பந்தப்பட்ட நபருக்குமான பிரச்னை. யார் மேல தப்புன்னு நாம எப்படிச் சொல்ல முடியும்? எனக்குக் கொடுத்த வேலையை நான் எப்பவும் கரெக்டாத்தான் செய்யறேன்"

'ஒரு சீரியலுக்கு மூணு டைரக்டர் மாறினா நல்ல அவுட்புட் கிடைக்குமா?'

"ஏன் கிடைக்காது? ஈடுபடுற எந்த டைரக்டருமே கதையை நல்லா ஷேப் பண்ணத்தான் நினைப்பாங்க. ஒண்ணுக்கு மூணு பேர் பண்ணும்போது மெருகேறி, மெருகேறி ஃபைனல் அவுட்புட் டச்சிங்கா இருக்கும். இதைக் கண்ணால பார்த்தவ நான்."

'பிறந்து வளர்ந்து நடிச்சுட்டீங்க. சாதிச்சுட்டீங்களா?'

"எதுவுமே இங்கே சாசுவதமில்ல. இதுல சாதிச்சுட்டதா நான் எதையும் நினைக்கறதில்ல. இருக்குற வரை நாம சந்தோஷமா இருக்கோமா, பிறருக்கு சந்தோஷத்தைத் தர்றோமான்னுதான் நினைப்பேன். சாகுற வரை நடிச்சிக்கிட்டே இருக்கணும் - இதுதான் என் ஆசை!"

- ஆ.முத்துராமலிங்கம்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்



மனைவியை அடித்தால்...

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஓர் அரசியல் பிரசங்கி, தமது வீராவேசமான சுதந்திர முழக்கத்தினிடையே கூறிய ஒரு விஷயத்தை என்றும் நான் மறக்க முடியாது. "பாருங்கள், சகோதரர்களே! இந்த பிரிட்டிஷ் அதிகார வர்க்க ஆட்சியின் கீழ் நமக்கு என்ன சுதந்திரம் இருக்கிறது? பேச்சு சுதந்திரம் உண்டா? எழுத்துச் சுதந்திரம் உண்டா? நம் சொத்துக்களில் நமக்குச் சுதந்திரம் உண்டா? இந்த ஆட்சியின் கீழ் நம் பெண்டாட்டியை நாம் அடித்தால் போலீஸ்காரன் வந்து 'ஏன் அடித்தாய்?' என்று கேட்கிறான். காலம் அவ்வளவு கெட்டுப் போய்விட்டது" என்றார் அந்தப் பெரும் சொற்கொண்டல்!

பிரிட்டிஷ் ஆட்சியினால் உண்மையாக மேற்படி பலன் விளைந்திருப்பது உண்மையானால், அந்த அளவுக்கு அந்த ஆட்சியைப் போற்றவே வேண்டும். பெண்டாட்டியை அடிக்கும் 'சுதந்திரம்' நாளடைவில் மறைந்து விடுமென்று எதிர்பார்ப்போம். சுதந்திர உணர்ச்சி - முக்கியமாக, பெண் விடுதலை இயக்கம் - வலுப்பெற்று வரும் இந்நாளில், இந்த அநீதி வெகு காலம் நடக்காது. இதற்குச் சட்டத்திலோ, விதியிலோ மாறுதல் அவசியமில்லை.

ஒருவன் மனைவியைத் தள்ளிவிட்டு இன்னொருத்தியைக் கல்யாணம் செய்துகொள்ள இடமிருப்பதும், முதல் மனைவிக்கு எவ்விதக் கதிமோக்ஷத்துக்கும் வழி இல்லாமலிருப்பதும் எந்த நியாயத்துக்கு ஒக்கும்? ஒருவன் எத்தனை மனைவி வேண்டுமானாலும் கல்யாணம் செய்துகொள்ளலாம். ஆனால் ஸ்திரீ மட்டும் தெரிந்தோ தெரியாமலோ சொந்த விருப்பத்தினாலோ, பிறர் வலுக்கட்டாயத்தினாலோ ஒருவனை மணந்துவிட்டால், அவனால் புறக்கணிக்கப்பட்டாலும் கொடூரமாக நடத்தப்பட்டாலும் அவனே கதி என்று இருக்க வேண்டும் என்பது நியாயமான ஏற்பாடாகுமா?

> "தம்பதியரை சட்டத்தின் பலத்தினால் பிணைத்து வைப்பது தீமையே பயக்கும்"

மேற்கூறிய பாரபட்சத்தை இரண்டு வழிகளில் நிவர்த்தி செய்யலாம். (1) புருஷனுக்கு மனைவியைத் தள்ளி வைக்கவோ அல்லது ஒரு மனைவி இருக்கையில் இன்னொருத்தியைக் கல்யாணம் செய்துகொள்ளவோ உரிமை கிடையாது என்று சட்டம் செய்யலாம். அல்லது (2) விவாகப் பிரிவினைச் சட்டம் செய்து, புருஷன் மனைவி



இருவருக்கும் இவ்விஷயத்தில் சமமான உரிமை அளிக்கலாம்.

முதல் வழியைக் காட்டிலும் இரண்டாவது வழி உசிதமானதென்றே நான் நினைக்கிறேன். இரண்டு சிநேகிதர்களுக்குள்ளாகட்டும், சதிபதிகளுக்குள்ளாகட்டும் எக்காரணத்தினாலோ



மனங் கசந்து போய்விட்டால், அப்புறம் அவர்களைச் சட்டத்தின் பலத்தினால் பிணைத்து வைப்பது தீமையே பயக்கும். நாளுக்கு நாள் துவேஷமே அதிகமாகும். இதனால் அவர்களுக்கும் தீமை, சமூகத்துக்கும் தீமைதான்.

மேலும், புருஷன் விஷயத்தில், மேற்படி பலவந்தம் அவ்வளவு பயன் தராது. இரண்டாவது கல்யாணத்தை வேண்டுமானால் தடுக்கலாம்; தாஸி வீட்டிற்குப் போவதைத் தடுக்க முடியுமா? உலகத்தில் பொதுவுடைமை தர்மம் ஏற்படுகிற வரையில் பணத்துக்காக உடலை விற்கும் துர்பாக்கிய ஸ்திரீகள் சிலர் இருப்பார்கள்.

எனவே, இரண்டாவது வழிதான் சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. மனத்தில் அன்பில்லாதவர்களைப் பலவந்தமாகப் பிணைத்து வைப்பதனால் புண்ணியமுமில்லை; புருஷார்த்தமுமில்லை. புருஷன், மனைவி இருவரும் சம்மதித்து விவாகப் பிரிவினை செய்துகொள்ள விரும்பினால் சட்டம் அதற்கு இடங்கொடுக்க வேண்டும். இருவரில் ஒருவர் மட்டும் விவாகப் பிரிவினை விரும்பினால் அதற்கு அவர் தக்க காரணம் சொல்லிக் கேட்க வேண்டும்.

- 'அதிர்ஷ்டக் கவசம்' நூலிலிருந்து... வானதி பதிப்பகம்





* அறுவரின்
திறமைகள்...



தூரிகைத் திருவிழா!

பிடரியில் வழியும் முடி, விஜய் பாணித் தொப்பி, மூக்கு நுனியில் கண்ணாடி, அட்டாக் கட்டிங், பிரெஞ்ச் பியர்டு என்று இளம் பருவத்துக்கே ஏற்ற கெட்டப்பில் இருந்தாலும், வழக்கம்போலவே மாம்ஸ், மச்சி சில்மிஷங்கள் தொனித்தாலும், அவர்களை நாம் சராசரிகளின் கணக்கில் சேர்த்துவிட முடியாது.

மகேஷ், தினா, சதீஷ், சபரீஷ், தெய்வா, கௌதம் அறுவரும் சென்னை ஓவியக் கல்லூரி மூன்றாமாண்டு மாணவர்கள். கடந்த நவம்பர் 11 - 20







• அந்த டீம்...

தேதிகளில், நாரதகான சபாவில் ஓவியக் கண்காட்சியை நடத்தி முடித்த களைப்பில்... மன்னிக்கவும், திளைப்பில் இருந்தவர்கள், தங்களது குழுவை 'டெட்போல்ஸ்' என்ற பெயரில் விளம்பரப்படுத்தியுள்ளார்கள்.

'அதென்ன டெட்போல்ஸ்?' என்றால், "அதாங்க தவளையின் முதல் நிலையான தலைப்பிரட்டைப் பருவம். நாங்களும் ஓவியம்கிற பிரமாண்டமான விஷயத்துக்கு முன்னாடி குட்டிக் குட்டிப் பசங்கதானே! அதனாலதான் இந்தப் பெயரைத் தேர்வு செய்தோம்" என்கிறார்கள்.

'இந்த குரூப்பை ஃபிக்ஸ் பண்ணியது உங்க கல்லூரியா?'

"நோ... எங்க சொந்த ஆர்வத்தில் பண்ணியிருக்கோம். ஓவியக் கல்லூரிக்கு வருவதற்காக கோச்சிங் போனப்பவே நாங்க ஆறுபேரும் ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டோம். இதோ... மூணு வருடம் முடியப் போகுது. இப்பவும் நாங்க நல்ல ஃப்ரெண்ட்ஸ், நல்ல டீம்" என்றவர்களைக் கலாய்ப்பதற்காக...

'வழக்கமா ஸ்டூடண்ட்ஸ் ஒண்ணு சேர்ந்தா அந்த இடமே...' என்றோம்.

"ஹலோ... நாங்க அந்த மாதிரி பசங்க கிடையாது. ஓவியம்ங்கிற பொறுப்பான விஷயம் எங்க கவனத்துல இருக்கிறதுனால எல்லா நேரமும் வரையத்தான் சரியாயிருக்கு. அப்படி இல்லாத டயத்தில்கூட பெயின்டிங்கைப் பத்தி டிஸ்கஷன்தான். ச்சோ ஸ்வீட் பாய்ஸ் நாங்க."

'இந்த காலத்துப் பசங்க டாக்டர் ஆவதை, இன்ஜினியர் ஆவதை, யு.எஸ்., லண்டனுக்குப் பறப்பதைத்தான் விரும்புவாங்க. ஆனா நீங்க கலைத்துறையை ஏன் தேர்ந்தெடுத்தீங்க?'

"பணம் சம்பாதிக்கிறதுக்கு ஆயிரம் வழிகள் இருக்கு. ஆனா, மனதுக்கு நிறைவான ஓவியத்தை வரையறதுல கிடைக்கிற சந்தோஷமே தனி. நீங்க சொல்ற விஷயங்களைப் பண்ணி டாக்டராகலாம், இன்ஜினியர் ஆகலாம். பெயரும் பணமும் பார்க்கலாம். ஆனால் கலைஞராக முடியுமா? நாங்க கலைஞர்கள் பாஸ்" என்று பஞ்ச் டயலாக் பேசுபவர்கள், கண்காட்சிக்குப் பலரும் வந்து பாராட்டியதைப் பெருமையாக நினைவு கூறுகிறார்கள். டைரக்டர் சசியின் பாராட்டு மழை அப்படி ஒரு மகிழ்ச்சியைத் தந்ததாம். ஹேட்ஸ் ஆஃப் பாய்ஸ்!

- அருணாஸ்

படங்கள் : ஸ்ரீஹரி

அருள்வாக்கு



படிப்பு ஜாஸ்தியாக ஆக நூதன நூதனமாக ஏமாற்று வித்தைகள் செய்கிற ஸாமர்த்யங்களும் வளர்கின்றன. தொழில்கள் நடத்துகிறவர்களும் அரசியல்வாதிகளும் செய்கிற பேற்று மாற்று, எங்கே போனாலும் ரஹஸ்யத்தில் நடக்கும் லஞ்சம் முதலான அநேக குற்றங்கள் இந்த ஸாமர்த்யத்தில் கோர்ட் வரை வராமலே போகின்றன. முக்கால்வாசிக் குற்றங்கள் நீதி ஸ்தலத்துக்கும், போலீஸுக்கும் வராமலே போயிருக்கும்! படிப்பினால் புத்தி ஸாமர்த்யம் அதிகரிப்பதில் ஸிவில் குற்றங்கள் மாத்ரம்தான் அதிகரித்திருக்கின்றன என்றில்லை. பெரிதான பாங்குக் கொள்ளை, ஒரு மந்த்ரி ஸபையையே கட்டுக் கொன்றுவிடுவது, கோஷ்டி கோஷ்டியாகத் தகாத கார்யத்துக்காகப் பெண்களைக் கடத்திப்போவது மாதிரி க்ரிமினல் குற்றங்களும், படிப்பு ஸாமர்த்யத்தாலேயே நன்றாக ஜோடித்துத் திட்டம் போட்டு நடத்தப்படுகின்றன.

அப்படியானால் கல்வி வேண்டாமா? ரொம்பப் பெரியவர்கள் கல்வி ரொம்ப

படிப்பும் குற்றமும்...

அவசியம், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று கல்வியை ஏகமாக ச்லாகிக்கிறார்கள். ஏன் இப்படி முரண்பாடாக இருக்கிறது?

ஆழ்ந்து அலசிப் பார்த்தால் முரண் எதுவும் இல்லை என்று தெரியும். அந்தப் பெரியவர்கள் சொன்ன கல்வி வேறாகவும், இன்று அமலாகிற கல்வி வேறாகவும் இருக்கின்றன. இதுதான் முரண்பாட்டுக்குக் காரணம். அவர்கள் சொன்னபடி கல்வி இருந்தால் குற்றம் வளராது; குறைந்து மறைந்தே போய்விடும். அவர்கள் புத்தி வளர்ச்சி தருகிற கல்வியை மட்டும் சொல்லவில்லை. பக்தி வளர்ச்சி அளிப்பதாகவும் உள்ள கல்வியையே சொன்னார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



ஓர் உயிரை இரண்டு உடல்கள் இணைந்து உருவாக்குவதைப் போல ஒரு பெயரை உருவாக்க முடியாது. பெயரை, உருவாகி உலவிக் கொண்டிருக்கும் ஓர் உயிரை அழைக்கப் பயன்படும் ஒலி வடிவம் என்பதாகப் புரிந்து வைத்திருக்கிறோம். உண்மையில், பெயர்கள் உயிர் போன பிறகும் ஜீவிக்கும் சக்தியுடையன. காரல் மார்க்ஸ், பெரியார், புத்தர், காந்தி என்கிற பெயர்கள் யாவும் சுமந்திருந்த உயிரின் ஒலி வடிவம் மட்டுமே அன்று. அந்தப் பெயர்களுக்குப் பின்னால் யாராலும் போக்க முடியாத, எதனாலும் வீழ்த்த முடியாத சரித்திரங்கள் உள்ளன. நம்முடைய பழுப்பு நிறம் படிந்த பழைய தஸ்தாவேஜுகளில் காணப்படும் மூதாதையரின் பெயர்கள் நமக்கு உணர்த்தும் உண்மைகள் பெயர்களால் ஆனவை அல்ல. அதேபோல, நம்முடைய கல்வெட்டு வாக்கியங்களில் காணப்படும் அல்லது இடம்பெற்றிருக்கும் அரச மரபினரின் பெயர்கள் நமக்குக் கொண்டு

16 மகிழம்பூ மாயவன்!

யுகபாரதி

வந்து தரும் செய்தியும் பெயர்களுக்குப் பின்னும் வாழும் சாதனையைக் குறிப்பதேயாகும். அப்படியான பெயர்களில் ஒன்று 'மாயவநாதன்.'

இயற்பெயர், புனைபெயர், பட்டப் பெயர் என்பனபோல தமிழ்த்திரை உலகில் எனக்கு மிகப்பிடித்த செல்லப் பெயர்களில் ஒன்று 'மாயவநாதன்.' மாயவநாதனின் தமிழ், இசை அரிதாரம் பூசியிருக்கிறதே தவிர, அவருடைய அசல் முகம் அதன் தனித்த வசீகரமும் சௌந்தர்ய குணாம்சமும் உடையது.

'தண்ணிலவு தேனிறைக்க
தாழைமரம் நீர் தெளிக்க
கன்னிமகள் நடைபயின்று
வந்தாள் - இளம்
காதலனைக் கண்டு நாணி
நின்றாள்!

– 'படித்தால் மட்டும் போதுமா' என்னும் திரைப்படத்தில் வெளிவந்த இப்பாடலே மாயவனாரின் முதல் திரைப் பாடல் என்கிறார்கள். ஆண்டு 1962.

தண்ணிலவுப் பாடல், காட்சிகளை மட்டுமல்ல; திரைத் தமிழையும் பெருமிதம் கொள்ளவைக்கும் இயல்புடையது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பூலாங்குளம் எனும் ஊரைச் சேர்ந்த மாயவநாதன், நாடகங்களை இயற்றிக் கொண்டிருந்த மின்துறைப் பணியாளர்.

சித்தர்கள் மீது ஈடுபாடுடையவராக விளங்கிய மாயவநாதன், தேவரின் விருப்பத்துக்கு இணங்கி மருதமலை கோயிலில் கல்வெட்டாகப் பொறிக்கச் சில செய்யுளை எழுதிக் கொடுத்தவர். தொடக்கத்தில் சூலமங்கலம் சகோதரிகளில் மூத்தவரான ஜெயலட்சுமியின் கணவர் வி.டி. அரசுவின் அன்புக்குப் பாத்திரமான மாயவநாதன், அரசு தயாரித்த பல படங்களுக்கு பாடல் எழுதப் பணிக்கப்பட்டார். 1962-ல் வெளிவந்த 'பந்தபாசம்' படத்தில்,

'நித்தம் நித்தம் மாறுகின்றது
எத்தனையோ - நெஞ்சில்
நினைத்தாலே நடந்ததுதான்
எத்தனையோ

கோடு போட்டு வாழ்ந்தவர்கள்



எத்தனையோ - கொண்ட
குறியும் தவறிப் போனவர்கள்
எத்தனையோ'

என்று எழுதியிருப்பார். கோடு போட்டு வாழ முடியாதவர்கள், குறி தவறிப்போவது உண்டு என்றாலும் பாட்டுச் சாலையில் பக்குவ நடை புரிந்தவர் மாயவநாதன். கண்ணதாசன் மூன்று ஆண்டுகள் சர்வாதிகாரம் செலுத்திய போது, அதை முதலில் உடைத்தவர் மாயவநாதன் என்பார் நா.காமராசன். மாயவநாதனின் பாடல்கள் சந்தைக்காக உற்பத்தியானவை அல்ல; சபைக்காக சமைக்கப்பட்டவை.

'நித்தம் நித்தம்' பாடலின் இறுதி வரிகள்,

'இதற்கிதுதான்
என்னு முன்பு
யார் நினைத்து - வழி
இங்குவந்து
முடியுமென்றால்
யார் தடுப்பது?'

நான் உனக்கு
சிவாஜியைத்
தந்திருக்கேன்.
நீ எனக்கு
நல்ல ஒரு
கதை கொடு
போதும்!



சவால்!

"நீண்ட இடைவெளிக்குப் பிறகு அருண்விஜய்க்கு தமது நடிப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக ஒரு படம் அமைந்துள்ளது. அது வேதா" என்கிறார் டைரக்டர் நித்தியகுமார். நிரன் கிரியேஷன்ஸ் இன்டர்நேஷனல் சார்பில் கே.நிரஞ்சன், வாசு பாஸ்கர் இருவரும் இணைந்து தயாரிக்கும் படம் வேதா.

"விட்டுக்கொடுத்துப் போனால் உலகத்தில் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். அதேசமயம் எதை விட்டுக் கொடுக்க வேண்டுமோ அதைத்தான் விட்டுக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்துவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகள் எப்படி இருக்கும்? இதற்கான பதில்தான் இப்படம்" என்கிறார் டைரக்டர் நித்தியகுமார்.

"இளம் தொழிலதிபராக இப்படத்தில் நடிக்கிறேன். 'சேது' வெளியானபோது விக்ரம் சார் எப்படிப் பேசப்பட்டாரோ, அதுபோல் நானும் பேசப்படுவேன் என்பதில் எனக்கு அதிக நம்பிக்கை உண்டு" - புது மலர்ச்சி தவழ்கிறது அருண்விஜயின் முகத்தில். நாயகியாக

வாழ்க்கை தன் பாரத்தை தத்துவச் சும்மாட்டில் எத்தனை எளிதாக ஏந்திக் கொள்கிறது என்பதே மாயவநாதனின் மேதமை.

'மகிழம் பூ' திரைப்படத்தில் 'தனக்கு தனக்கு' என்ற பாடலில்,

'அடுத்தவன் மதிக்க
கொடுப்பது எல்லாம்
கொடையினில் சேராது
அளந்து கொடுக்கிறவன்
இருக்கிற வரைக்கும்
தருமம் வளராது'

என்று எழுதியிருப்பார். தனக்கு மிஞ்சிதான் தானம் என்ற பழமொழியின் பிற்போக்கு முலாமை யதார்த்த நகத்தால் சுரண்டியெடுத்திருப்பார். 'தாயும் மகனும் ஆனாலும் வாயும் வயிறும்' வேறென்ற இன்னொரு பழமொழியை, 'தனக்கு மிஞ்சியே தானம்' என்கிற பழமொழி எவ்விதம் விஞ்சுகின்றது என்பதே 'மகிழம்பூ' படத்தின் பாடல் சொல்ல வருவது. இருப்பதை இருக்கிறதே என இறைப்பதும், இல்லாதபோது இல்லையே எனத் தவிப்பதும் பாடலின் ஊடாக பரிமாறப்படும் செய்தி. கொடுப்பதற்கு எதையாவது வைத்திருக்காத கைகளை வறுமை பிணைத்துக்கொள்கிறது. 'தொழிலாளி' படத்தில் உள்ள 'என்ன கொடுப்பாய்' பாடலில் காதலன் காதலியிடம் கேட்கிறான்.

ஆண்: 'மின்னலது பின்னிவாழும்
உன்னழகு
கண் மலரில் என் மனது
இன்பமுற...

பெண்: தென்னவர்கள் காவியத்தில்
தேடுகின்ற காதலினை
என்னழகுப் பூவிழியாள்
பின்னிக் கொடுப்பேன்.'

- காதலுற்ற இருவர் எதையெதைக் கொடுத்துக்கொள்வது என்று பட்டியலிட்டுச் சிநேகிக்கும் அன்பை எழுதிக் காட்டும் மாயவநாதன், தமது இறுதிக் காலத்தில் பசியால் மயங்கித் தெருவோரத்தில் விழுந்து மரித்துப் போனதாகச் சொல்கிறார்கள். கொடுக்க ஆளில்லாத ஒருவர், தம்மிடமிருந்த தமிழைக் கொட்டிக் கொட்டிக் கொடுத்திருக்கிறார். பிறரிடமிருந்து தாம் பெறப்போகும் பிரதிபலனை எதிர்பாராத கலைஞனாக அவர் இருந்திருக்கிறார் என்பதற்கு வேறென்ன சாட்சி தேவை?

கால தேவதை தம் அகன்ற கைகளால் தண்ணீரைச் சலிப்பதே மழை யென்றொரு உவமையை எங்கேயோ படித்த ஞாபகம். பொட்டுப் பொட்டுத் துளிகளாக பூமியில் வந்து விழும் நீர், வெண்ணிற நெல் மணி போலக் காட்சியளிப்பதும் அந்நெல்மணியை பூமியென்கிற பச்சை நிறக் கோணிகள் ஏந்திக் கொள்வதும் நல்ல கற்பனை. அந்தக் கற்பனையை திரைப்பாடலில் மாயவநாதன் எழுதுகையில்,

'அந்தி வெயில்
பட்டு உடல்
பொன்னாகட்டும் - கண்டு
ஆடவர் உள்ளம்
சல்லடைக்
கண்ணாகட்டும்!'

என்று 'பூம்புகாரில்' விவரிக்கிறார் கண்கள் சல்லடையாகட்டும் என்பதை



• 'வேதா' படத்திலிருந்து...

ஷீலா. தெலுங்கில் முன்னணியாக இருப்பவர் இப்படம் வந்ததும் தமிழிலும் பிஸியாகி விடுவாராம். இன்னொரு ஹீரோவும் உண்டு. ஜெரோவதன். நல்ல பர்சனாலிட்டி.

"நானே இந்தப் படத்தை டைரக்டர் செய்ய நினைத்தேன். அனுபவமில்லாததால் என் கதையை நன்கு புரிந்த நித்யாவிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறேன். படம் எப்படி வரப்போகிறது பாருங்கள்" என்று சவால் விடுகிறார் தயாரிப்பாளர் வாசு பாஸ்கர். சாதிக்கட்டும்!

- ரேவதி

விட அத்தனை கண்களும் உன் அழகைக் காண வேண்டும் என்ற பிரமிப்பு புதிய பார்வையைத் தருகிறது.

'நித்தம் நித்தம் மாறுகின்றது எத்தனையோ' பாடலைப் போலவே 'பந்த பாசம்' திரைப்படத்தில் இன்னொரு பாடல் 'கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு, காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு.' அதில்,

'சுட்டதும் தங்கத்தின்
நிறம் போமோ
தொட்டதும் மலர்களின்
மணம் போமோ
கற்றவன் கலங்குதல்
அழகாமோ
சட்டமும் கற்பனைக்
கதையாமோ'

என்று எழுதுகிறார். மாயவநாதனின் இவ்வரிகளை நீட்சியாகவோ, சாட்சியாகவோ உணர நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ஏதேனும் சம்பவங்கள் கூடியிருக்க வேண்டும். பாவேந்தர் தமது 'புரட்சிக்கவி' பாயிரத்தில் எழுதியிருப்பதைப் போல,

'காரிருளால் சூரியன்தான்
மறைவதுண்டோ
கறை சேற்றால் தாமரையின்
வாசம் போமோ
பேரெதிர்பால் உண்மைதான்
இன்மையாமோ'

என்ற வரிகள், மாயவநாதனின் வரிகளோடு எங்ஙனம் ஒத்திசைவாக அமைந்திருக்கின்றனவோ? தமிழ்க் கவிதை உலகம் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக ஒரே சூழல், வெவ்வேறு மணிகள், வெவ்வேறு கைகளால் கோக்கப்பட்ட அதிசயத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை. தமிழ் என் மொழி என்பதால் கொள்ளும் பெருமிதத்தைப் போல வேறு மொழிகளிலும் இதே மாதிரியான அணுகுமுறை இருக்குமென்றுதான் எண்ணுகிறேன். கவி மனது என்பது வெவ்வேறு அலமாரிகளில் அடுக்கப்பட்டிருக்கும் நூல் தொகுப்பு. ஒரே புத்தகம் இரண்டு அடுக்குகளிலும் இருக்கும் சாத்தியம் நிச்சயமுண்டு. மாயவநாதன் வாழ்க்கை, சராசரி மனிதனின் அவஸ்தைகள் நிறைந்த வாழ்க்கையைப் போலவே அமைந்திருக்கிறது. எனவேதான்,


'இனியொரு தாய் வயிற்றில்
பிறக்கக் கூடாது - இந்த
எலும்புக் கூட்டைச் சுமக்கும் வேலை
இருக்கக் கூடாது'

என்று அசோகனின் நாடகம் ஒன்றுக்குப் பாட்டெழுதியிருக்கிறார். மீண்டும் வாழ ஆசை யாருக்கு வரும்? எலும்பும் சதையும் மட்டுமே கொண்டு உலவும் மனிதர்கள் தமது இதயத்தைத் தொலைத்த சமூகத்தில் – அதுவும், மாயவநாதன் போன்ற எழுத்துக் கலைஞனால் சகல அநியாயங்களையும் பொறுத்துக் கொண்டு புழுவைப்போல வாழ்வது இயலுமா என்ன? அவரே எழுதியது போல,

வந்ததில் எல்லாம் பொருளுண்டு, வருவதில் வெற்றியும் நமக்குண்டு. நிச்சயம் இரவுக்குப் பகலுண்டு, நீதியின் கண்களில் ஒளியுண்டு. மாயவநாதன் பகல். அந்தப் பகலில் நம் கண்களைக் கழுவிக் கொள்வது திரைப்பாடலின் திசை முகமாகும்; இசை ஸ்தலமாகும்.

(காற்று வீசும்)

உலகம்



தொடரும் தலைவலி...



ஜி.எஸ்.எஸ்.

மீண்டும் செய்திகளில் இடம்பெறத் தொடங்கியிருக்கிறது லெபனான். இந்த முறை இஸ்ரேல் அதற்குக் காரணம் அல்ல, ஹிஸ்புல்லா.

1983ல் பெய்ரூட்டில் தற்கொலைப் படையினரால் வீசப்பட்ட வெடிகுண்டுகளின் பின்னணியில் இருந்த இயக்கம் ஹிஸ்புல்லா. இந்நிலையிலும் லெபனான் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஹிஸ்புல்லா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 14 பேர் இருக்கிறார்கள்.

சமீபகாலமாக ஆட்சியில் உள்ள கூட்டணியிடம் 'எங்களுக்கு அரசில் அதிக அதிகாரம் வேண்டும்' என்று அடம்பிடிக்கிறது ஹிஸ்புல்லா. ஆளும்கட்சிக் கூட்டணி இதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே மந்திரி சபையிலுள்ள ஹிஸ்புல்லா அமைச்சர்களும் பிற ஷியா பிரிவினரும் ராஜினாமா செய்துவிட்டனர்.

அப்படியும் ஆளும்கட்சிக் கூட்டணிக்கு சந்தேகமில்லாத மெஜாரிட்டி இருக்கிறது. ஆனாலும் பயனில்லை. அந்த நாட்டுச் சட்டப்படி அவர்களால் இப்போது ஒரு முழுமையான அரசாங்கத்தை நடத்த முடியாது. அதென்ன அப்படி ஒரு சட்டம்?

உள்நாட்டுக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டுவர 1989ல் டாயிஃப் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது அன்றைய லெபனான் அரசு. இதன்படி நாட்டில் எல்லா முக்கிய பிரிவினரும் அரசில் பங்கு வகித்தே ஆகவேண்டும். இல்லையென்றால் முக்கிய முடிவுகளை எடுக்க முடியாது. இதைத்தான் ஹிஸ்புல்லா எதிர்பார்க்கிறது.

முன்னாள் லெபனான் பிரதமர் ரஃபீக் ஹராரி படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை கமிஷன் ஒன்றை வைக்க முனைந்துள்ளது ஐ.நா. சபை. லெபனானில் அந்த விசாரணையை எப்படி நடத்தலாம் என்பதற்கான 'மாதிரி'யை அரசுக்கு அளித்திருக்கிறது. இந்த விசாரணையில் லெபனான் பங்கு கொள்ளக் கூடாது என்பது ஹிஸ்புல்லாவின் தீர்மானம். ஹிஸ்புல்லாவின் கூட்டணியைச் சேர்ந்த ஒரு முக்கிய கட்சியான 'ஃப்ரீ பேட்ரியாடிக் இயக்கத்'தைத் தம் வசம் இழுக்க முனைந்து வருகிறது அரசு.

இவை லெபனானின் உள்நாட்டு விவகாரங்கள் அல்ல. அரசையும் எதிர்க்கட்சியையும் இயக்குவதில் வெளிச் சக்திகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதுதான் பிரச்னையின் முக்கிய வேர். அரசை அமெரிக்காவும், ஹிஸ்புல்லாவை ஈரான் மற்றும் சிரியாவும் ஆதரிக்கின்றன. சிரியாவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு லெபனானின் முன்னாள் பிரதமரின் கொலையில் பங்கு உண்டு என்று பரவலாகக் கூறப்படுகிறது.

இப்படிப் பல கோணங்களில் சென்று கொண்டிருக்கும் லெபனான் அரசியலில் விரைவில் பெரும் மாறுதல் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


5

ஐன்ஸ்டீன் உணர்ந்த உண்மை!

- சுவாமி சுத்தானந்தா

படைப்பில், இப்போது உள்ளதுடன் துவக்க காலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், அப்போது அவ்வளவாக அறிவு கிடையாது. இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றிக்கூட மக்களுக்குத் தெரியாது. தங்கள் கிராமத்தைத் தாண்டி ஒரு நகரமும், அந்த நகரத்துக்கப்பால் ஒரு நாடும் இருக்கிறது, பூமி என்கிற கோள் ஒன்று உண்டு, சூரிய மண்டலம் - நட்சத்திர மண்டலம் - பால்வீதி - பிரபஞ்சம் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் அறிந்திருக்கவில்லை. இத்தகைய பரிமாணங்களெல்லாம் அவர்களுக்குப் பரிச்சயமில்லாதவை. அப்போது மனிதன் நிராதரவாக இருந்தான். கடவுளிடம் அவன் பிரார்த்தனை செய்தது, அவரிடமுள்ள நம்பிக்கையினால் அல்ல; தனது நிராதரவான நிலைமையில் உதவிக்கு எவரையாவது அணுக வேண்டுமே என்பதால்தான்.

ஒருமுறை புயல் வீசியது. தன்னையும் தன் குடும்பத்தையும் எப்படிக் காப்பதென்று மனிதனுக்குத் தெரியவில்லை. நான் கூட எனது கிராமத்தில் பார்த்திருக்கிறேன்... கடவுளின் அருளைப் பெற்றுப் புயலைத் துரத்திவிடலாம் என்பதற்காக மக்கள் ஜால்ராக்களையும் இசைக் கருவிகளையும் அவசரமாக எடுத்துக்கொண்டு, ஆவேசமாகப் பிரார்த்தனை செய்தபடி பாடத் துவங்குவார்கள். அதிகச் சேதத்தை ஏற்படுத்தாமல் புயல் நீங்கிவிட்டால், கடவுளிடம் நன்றியோடு இருப்பார்கள். புயல் அதிகச் சேதத்தை ஏற்படுத்தினாலும் அவர்களால் கடவுளிடம் ஏதும் வாதாட முடியாது. பெரும் அழிவு ஏற்பட்டாலும்கூட அதை ஏற்கத்தான் வேண்டும்... வேறு வழியில்லை. காலம் செல்லச் செல்ல, நமக்குப் படிப்பறிவு ஏற்பட்டு, இயற்கை



தமிழ் வடிவம் : சிவசங்கரி

மாற்றங்களைக் கணிக்கும் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தி, வரவிருப்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்கிறோம். புயல் உருவாவதற்குப் பல மாதங்கள் முன்பே அதைக் கண்டுபிடித்து, பெயரும் இட்டுக் கண்காணிக்கிறோம். அதன் வேகம் எவ்வளவு, அது கரையைக் கடக்கும் சரியான இடம் எது என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு, அந்தப் பகுதியை விட்டு விலகிப்போய் விடுகிறோம். மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துப் போகப்படுகிறார்கள். புயலும் கடந்துவிடுகிறது; அழிவு அதிகமில்லை. புயல் கடந்த பிறகு மறுபடி ஊருக்குத் திரும்புகிறார்கள்.

இத்தகைய தலைமுறைக்கு - திடீரென்று கடவுள் நம்பிக்கை போய்விடுகிறது. ஏனென்றால், 'தங்களைக் காப்பாற்றியது கடவுள் அல்ல; புயலைக் கண்காணிக்கும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பான செயற்கைக்கோள்தான்' என்று நம்பத் துவங்கிவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நபர்கள், கடவுள் என்று யாருமில்லை என்றே எண்ணுகின்றனர். ஆனால், தலைசிறந்த விஞ்ஞானிகளுள் சிலர், மனோதிடத்தின் காரணமாக, கடவுளை நம்பத்தான் செய்கிறார்கள். 'எல்லாவற்றையும் படைத்தது யார்?' என்ற கேள்வி இன்னமும் வியாபித்திருப்பதே இதற்குக் காரணம்.

ஐன்ஸ்டீனின் பிரபலமான சொற்றொடர் நினைவிருக்கிறதா? அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டதைக் கௌரவிக்கும் வகையில் விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எல்லோரும் சந்தோஷமாக இருக்கையில், ஐன்ஸ்டீன் மட்டும் ஒரு மூலையில் ஆழ்ந்த சிந்தனையுடன் அமர்ந்திருந்தாராம். "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? இந்தக் கொண்டாட்டமே உங்களுக்காகத் தானே! நீங்கள் எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஒரு விருந்தினர் கேட்க, "நான் விதிகளைக் கண்டுபிடித்தது உண்மை... ஆனால், அவற்றை அங்கு வைத்தது யார்?" என்று ஐன்ஸ்டீனிடமிருந்து பதில் வந்ததாம்! அவர் பிரமாதமான அறிவு கொண்ட தலைசிறந்த விஞ்ஞானியாக இருந்தும், எதுவுமே தானாக நடப்பதில்லை என்பதை உணர்ந்திருந்தார்.

மிகுந்த இணக்கமும் ஒழுங்கு முறையும் கொண்டு, கோணலற்ற, சீரான பிரபஞ்சவெளியை உடைய இப்படைப்பு, எதிர்பாராத விபத்தைப் போன்றதன்று.

'இலட்சக்கணக்கான அச்செழுத்துகளைக் கொண்ட அச்சுக் கூடத்தில் குண்டு வெடித்து எழுத்துகள் சிதறியதால், திடீரென்று ஷேக்ஸ்பியர் அல்லது காளிதாசரின் படைப்புகள் தோன்றின' என்று சொல்வதைப் போலத்தான் இது! அப்படி நிகழவே முடியாது. எழுத்துகளை புத்திசாலித்தனத்துடன் கோத்துச் சொற்களாக்கி, அச்சொற்களை அடுக்கி அர்த்தமுள்ள வாக்கியங்களாக அமைத்து, அந்த வாக்கியங்களை ஒருசேரப்



• ஆல்பம் ரெடி!

குருவுக்காக...

"நான் இன்னைக்கு ஒரு பாடகனா ஆனதற்குக் காரணம் என் குரு, இசையமைப்பாளர் கே.எம்.லட்சுமி நாராயணன் அவர்கள்தான். அவருக்கு ஒரு கஷ்டம் வந்தா, அது எனக்கு வந்த மாதிரி" என்று உருகிய பாடகர் திப்பு, பேச்சோடு நிறுத்தாமல்

பொருத்தித்தான் நாடகமோ, கதையோ, கவிதையோ உருவாக்க முடியும். படைப்புக்கும் இதே விதிதான்... அது வெறும் விபத்தன்று.

கடவுளை நம்புகிறவர்களில் இரு வகை உண்டு. வெறும் நிராதரவான நிலைமையினால் நம்புபவர்கள் ஒரு வகை. மற்றொன்று, இவையெல்லாம் எப்படி நிகழ்கின்றன என்பதை திடத்துடன் கண்டறிய முயல்பவர்கள்.

முன்பெல்லாம் நோய்வாய்ப்பட்டால், கடவுளைப் பிரார்த்தித்தாலும் உயிரிழப்பைத் தடுக்க முடியாது. இப்போதோ, இருதய அறுவை சிகிச்சை செய்து, மேலும் இருபது வருடங்களுக்கு ஆயுள் நீட்டிக்கப்பட்டு புது வாழ்வு கிட்டுகிறது! முன்பு, இளம் வயதிலேயே கண்ணில் புரை உண்டானால், நாற்பது வயதுக்குள் கண் பார்வையே போய்விடும். தாங்கள் செய்த பாவத்துக்குத்தான் இப்படி தண்டனை கிடைத்திருக்கிறது என்றும், யாரோ சாபமிட்டு விட்டதாகவும் கூறுவார்கள். ஆனால் இன்று ஒரே நொடியில் லேசர் முறையில் சிகிச்சை செய்யப்பட்டு, இளமையில் இருந்ததைப் போன்ற கூர்மையான கண் பார்வை கிடைத்து விடுகிறது. அற்புதமான கண்டுபிடிப்புகள்!


ஆனாலும் நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், நண்பர்களே... இந்தக் கண்டுபிடிப்புகளுக்கான சாத்தியக்கூறுகள் ஏற்கெனவே இருந்திருக்கின்றன; புத்திசாலி மனிதர்களான நாம் அந்தச் சாத்தியக்கூறுகளைச் சரிவரப் பயன்படுத்தியுள்ளோம்... அவ்வளவே! அதுசரி, அந்தச் சாத்தியக் கூறுகளை அங்கே வைத்தது யார்? இங்குதான், கடவுள் இருக்கிறார் என்கிற அந்த இன்னொரு பரிமாணத்தைப் புத்திசாலித்தனமாக அங்கீகரிப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

(தொடரும்)

சுவாமி சுத்தானந்தா ஆசிரமம்,
சம்வித் சாகர்,
கிழக்குக் கடற்கரைச் சாலை,
உத்தண்டி,
சென்னை - 600 119

''தலைவருக்கு ஐந்து நட்சத்திர ஓட்டல்ல ரூம் போட்டிருக்கக் கூடாது...''
''ஏன்? என்னாச்சு?''
''அந்த ஐந்து நட்சத்திரத்தைப் பார்த்தே ஆகணும்னு அடம் பிடிக்கிறாரு!''

- மதுரை முருகேசன்



அதனைச் செயலிலும் காட்டினார். குருவுக்குத் திடீர் கஷ்டம். ஒரு ஆல்பம் கூட போட முடியாத அளவுக்குப் பணமுடை. கேள்விப்பட்ட திப்பு, 'என் ஐயப்பன்' என்ற இசை ஆல்பத்தை குருவுக்காக அண்மையில் வெளியிட்டிருக்கிறார்.

''எஸ்.பி.பி., உன்னிகிருஷ்ணன், ஸ்ரீனிவாஸ், கார்த்திக், மது பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் சென்று, 'ஆல்பம் போட உதவுங்கள்' என்று கேட்டுக்கொண்ட உடனேயே அனைவரும் இலவசமாக பாடித் தருவதாக ஒப்புக்கொண்டது தெய்வ அருள். எல்லாம் அந்த ஐயப்பனின் புண்ணியம்தான்'' என்று கைகூப்புகிறார் திப்பு.

வெளியிடப்படுவதற்கு முன்பே இந்த ஆல்பம் பதினைந்தாயிரத்துக்கும் மேல் விற்பனையானதை பெருமையோடு குறிப்பிடும் திப்பு, பாடல்கள் எழுதியுள்ள ஜெகதீசனை 'என்றைக்கும் மறக்க முடியாது' என்கிறார்.

- சௌந்தர்யா

பயங்கரம்

அந்த மூன்று நட்சத்திர ஹோட்டல் அறையில் இருந்த சின்ன ரெஃப்ரிஜிரேட்டரைத் திறந்து குளிர்பானமும், சிறிய விஸ்கி பாட்டிலும் எடுத்தான் ஆகாஷ்.

கஜா கிளாஸ் டம்ளரை எடுத்து நீட்ட, விஸ்கியை ஊற்றிக் குளிர்பானத்தைக் கலந்து மடக் மடக்கென்று குடித்துவிட்டு வைத்தான்.

"கஜா..."

"சொல்லுங்க சார்."

"அந்த மஞ்சரியை மும்பைக்கு அனுப்பற வேலை எல்லாம் வேணாம்."

"பின்னே?"

"கடத்தறோம். நம்ம பாதுகாப்புல வைக்கிறோம். குமரன்கிட்ட பேரம் பேசறோம். கண்டிப்பா கட்டுப்படுவான். மானப் பிரச்னை. இது ஒரு க்ளியர் ப்ளாக் மெயில்! என்ன சொல்றே?"

"கொஞ்சம் யோசிக்கணும், சார்."

"இதுல என்ன யோசிக்கிறதுக்கு இருக்கு?"

"கடத்தின பொண்ணைக் காசு வாங்கிட்டு மறுபடி விட்டுட்டா, அவ நம்மளைக் காட்டிக் கொடுத்துட மாட்டாளா? காசை வாங்கிட்டு மறுநாளே கம்பி எண்ணணுமா?"

"ஏன் இப்படி அபத்தமா பேசறே? அவ நம்மைக் காட்டிக் கொடுக்க முடியாதபடி புத்திசாலித்தனமா ப்ளான் போடணும் கஜா."



"எப்படி?"

"ஆகாஷ்னு என் சொந்தப் பேர்ல நான் குமரனை மிரட்டப் போறதில்லை. மஞ்சரி முன்னாடி நீயும் சரி, நானும் சரி நம்ம உண்மையான அடையாளங்களோட இருக்கப் போறதில்லை. ஹோட்டல்லேர்ந்து அவளைக் கடத்தி நம்மகிட்ட ஒப்படைக்கப்போற உன் ஆளு விஷ்வாவும் தன்னை அடையாளம் காட்டிக்காமதான் செய்யணும். புரிஞ்சுதா?"

"சார்... உங்க அளவுக்கு நான் படிக்கலை சார். உங்க நாக்குக்கு வராது. நீங்க அழகா ப்ளான் போட்டுக் கொடுங்க, கொஞ்சம்கூட மீறாம நானும், விஷ்வாவும் செஞ்சி முடிக்கிறோம்."

"அதான் வேணும் எனக்கு... இதோ பாரு."

ஆகாஷ் தான் கொண்டு வந்திருந்த ஒரு பெரிய பேகைத் தூக்கிக் கட்டில் மேல் வைத்து, அதன் ஜிப்புகளை இழுத்தான்.

உள்ளிருந்து பலவிதமான ஒட்டுத் தாடிகள், தலை விக்குகள் மற்றும் மேக்கப் சாதனங்களை எடுத்து வெளியே வைத்தான்.

"இப்போ நானும் அடையாளம் மாறப் போறேன்; நீயும் அடையாளம் மாறப் போறே."

"சுவாரஸ்யமா இருக்கு சார்" என்று சிரித்தான் கஜா.

"ரொம்ப அழகா இருக்கீங்க மஞ்சரி" என்று பார்த்ததுமே சொன்ன பூஜா, உரிமையோடு அவள் கன்னத்தைக் கிள்ளி தன் உதட்டில் வைத்துக்கொள்ள... மஞ்சரி அநியாயத்துக்கு வெட்கப்பட்டாள்.

"நீங்களும்தான் அழகா இருக்கீங்க" என்றாள். அதோடு நிறுத்தாமல் குமரனைப் பார்த்து, "இவங்கதானே என்னை விட அழகு? நீங்களே சொல்லுங்க" என்றாள்.

சிரித்த குமரன், இரண்டு கைகளையும் தூக்கியபடி, "இந்த ஆட்டத்துக்கு நான் வரலைப்பா" என்றான்.

தள்ளி அமர்ந்திருந்த அம்சா சிரித்

18

தான்.

"ஆமாம், என் மச்சான் எங்கே?" என்றான் குமரன்.

"நாளைக்குக் கல்யாணத்தப்போ எங்க சைடுலேர்ந்து பழம், பாத்திரம்னு சீர் தட்டுகள் வைக்கணும். பட்டியல் போட்டுக்கிட்டு சாமான் எல்லாம் வாங்கப் போயிருக்காரு" என்றாள் அம்சா.

"அதான் ஒரு குண்டூசிகூட நீங்க எடுத்துட்டு வரக்கூடாதுன்னு எங்கப்பா சொன்னாரேக்கா..."

"அதுசரி... எங்களுக்குன்னு ஒரு முறை இல்லையா? செய்ய வேண்டிய சில சம்பிரதாயமான விஷயங்களையாச்சும் செஞ்சித் தானே ஆகணும்?"

மஞ்சரியின் கையை எடுத்துப் பார்த்து, "அட! என்னங்க இது... கல்யாணப் பொண்ணு... கைல மெகந்தி போட்டுக்காம இருக்கீங்க?" என்றாள் பூஜா.

"நைட்டு படுக்கறப்ப மருதாணி வெச்சி விடறேன்னு அண்ணி சொன்னாங்க. அரைச்சி எடுத்துட்டு வந்திருக்கோம்."

"மருதாணியில டிசைன் போட முடியாதே மஞ்சரி. நான் மெகந்தி அழகா போடுவேன். உங்களுக்குப் போட்டு விடறேனே...ப்ளீஸ்..."

"சரி..."

"குமரன், வாங்க... மெகந்தி



பட்டுக்கோட்டை பிரபாகர்

"வாங்கிட்டு வரலாம்" என்று எழுந்தாள் பூஜா. அவளோடு குமரன் வெளியேறி, லிஃப்ட்டில் கேட்டான், "பூஜா, உனக்குச் சங்கடமா இல்லையா?"

"என்ன சங்கடம்?"

"மஞ்சரி எனக்கு மனைவியாகப் போறது. அவளைப் பார்த்ததும் நேச்சுரலா ஒரு கோபம் வரலையா?"

"இல்லை. அதிர்ஷ்டம் செஞ்சவன்னு ஒரு சின்ன பொறாமை வருது; கோபம் இல்லை. அந்தச் சின்ன பொறாமைகூட மனசுல வரலைன்னா... நான் பொய் சொல்றேன்னு அர்த்தம்."

"பூஜா... இந்தக் கல்யாணத்தை நிறுத்த நான் தயாராத்தான் இருந்தேன்... நீதான்..."

"வேணாம்... இதைப் பத்திப் பேச வேணாம். மஞ்சரி கண்ல என்ன ஒரு கனவு தெரியுமா? பாவம்! அவ எதுக்குப் பாதிக்கப்படணும்? நான் தெளிவா இருக்கேன், குமரன். உங்க தோழிங்கற ஸ்தானமாச்சும் எனக்குக் கிடைச்சுதே... அது போதும்!"

கடையில் மெகந்தி வாங்கிக்கொண்டு மீண்டும் ஹோட்டல் வாசலுக்கு வந்ததும், "பூஜா... நீ போ, எனக்கு வீட்ல வேலை இருக்கு. அப்புறமா போன் பண்றேன்" என்று சொல்லிவிட்டு, தன் காரில் புறப்பட்டுச் சென்றான் குமரன்.

மஞ்சரியின் அறைக்கு வந்த பூஜா, அவளை சோப்பு போட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டு வரச் சொல்லி அழகான டிசைனில் மெகந்தி போடத் தொடங்கினாள்.

பட்டறையில் நிறுத்தியிருந்த கல்யாணி நர்சிங்ஹோமின் ஆம்புலன்ஸ் வண்டியை ஸ்டார்ட் செய்து இன்ஜினை செக் செய்தான் பாண்டி.

விஷ்வா ஸ்டிக்கர் கடையிலிருந்து வெட்டி வாங்கி வந்த 'கஸ்தூரி' என்ற பெயரை 'கல்யாணி'க்கு மேல் ஒட்டி, அந்த ஆம்புலன்சை கஸ்தூரி நர்சிங்ஹோமுக்குச் சொந்தமானதாக மாற்றினான்.

அதேபோல முன்புறம், பின்புறம் வண்டியின் பதிவு எண்களுக்குப் போலி எண்கள் கொண்ட ஸ்டிக்கர்களை ஒட்டினான்.

"என்ன பாண்டி, இன்ஜின் எப்படி இருக்கு?"

"சூப்பரா இருக்கு."

"போய் டீசல் நிரப்பிட்டு வந்துடு."

"சரி" என்று ஸ்டார்ட் செய்தவனைத் தடுத்தான்.

"என்ன?"

"தப்பு பண்றே பார்த்தியா? இந்தக் கடத்தல்ல உன் அடையாளம் தெரியக் கூடாதுன்னு கஜா கண்டிஷனா போன்ல சொன்னான்ல? இப்படியே போனா எப்படி? தாடியை சவரம் பண்ணி, ஃப்ரெஞ்ச் தாடி மாதிரி மாத்து. கழுத்துல ஸ்கார்ப் கட்டு. தலைல குல்லா போடு. கூலிங் கிளாஸ் மாட்டு. உன்னைப் பாத்தா பாண்டியா தெரியக்கூடாது. யாராச்சும் சட்டுன்னு கேட்டா மனோஜ்ன்னு பேர் சொல்லு."

"ரைட். நீ?"



• வெளியீட்டு விழாவில்...

புதியவை மூன்று!

திருவிளக்கு, திவ்ய தரிசனம், சிவ யோகம் போன்ற வெற்றிபெற்ற பக்திப் பாடல்களை தயாரித்த விஷ்ணு கிரியேஷன்ஸ் நிறுவனம், தமது அடுத்த படைப்புகளாக 'நெய் தீபம்', 'சபரி கீதம்', 'ஞான கணபதி' ஆகிய இசைத் தட்டுகளை வெளியிட்டுள்ளது.

'நெய்தீபம்' பாடல்கள் அனைத்தும் ஐயப்பன் புகழ் பாடுபவை. பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகர் உன்னிமேனனால் பாடப் பெற்றவை. 'டான் சேரா' படம் மூலம் திரையுலகில் அறிமுகமாயிருக்கும் பிரின்ஸ், இதற்கு இசையமைத்து உள்ளார்.

சபரிகீதம் - இதுவும் அந்த பந்தள ராஜ

"செபாஸ்டின். கழுத்துல கிராஸ் தட்டிக்கப் போறேன். சில்வர் பெயிண்ட் தடவினா இருபது வயசு ஏறிடும். காலை விந்தி விந்தி நடக்கப் போறேன்."

பதினைந்து நிமிடங்களில் விஷ்வாவும் பாண்டியும், செபாஸ்டின் மற்றும் மனோ வாக மாறி, கஸ்தூரி நர்சிங்ஹோமின் ஆம்புலன்ஸ் வண்டியில் பெட்ரோல் பங்குக்குப் புறப்பட்டார்கள்.

கிழக்குக் கடற்கரைச் சாலை.

னைப் பற்றிப் பாடுபவையே. உன்னி மேனனே அத்தனை பாடல்களையும் பாடி யுள்ளார். பக்திப் பாடல் இசையில் பிரபல மாய் இருக்கும் அரவிந்தன், இதற்கு இசை அமைத்திருக்கிறார். கவிஞர் சபரிநாதன் பாடல்களை எழுதியுள்ளார். ஞான கணபதி - விநாயகர் குறித்த பாடல்கள். 'தஞ்சாவூர் மண்ணு எடுத்து....' பாடல் புகழ் கிருஷ்ண ராஜ், தெய்வீக மணத்தோடு பாடியிருக் கிறார். "குறைந்தது 1000 இசை ஆல் பங்களாவது வெளியிட வேண்டும் என்பதுதான் விஷ்ணு கிரியேஷன்ஸின் லட்சியம்" என்கிறார் இந்நிறுவன உரி மையாளர் சிங்காரவேலன். ஐயப்பன் அருளட்டும்!

- கல்பனா

அருகில் அலைகள் தவழும் அந்தத் தனியான, அழகான கெஸ்ட் ஹவுஸில் தட்டில் சோறு தின்னும் தன் நாயின் கழுத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டி ருந்தான் வாட்ச்மேன் மாணிக்கம். வெளிச் சம் விழுந்து இருட்டு பரவிக் கொண்டி ருந்தது.

அவனது செல்போன் ஒலித்தது.

எண் பார்த்து மரியாதையாகி, "அய்யா... சொல்லுங்க" என்றான்.

"மாணிக்கம், கெஸ்ட் ஹவுஸ் புக் பண்ணிருக்காங்க. அங்க வந்துக்கிட்டிருக் காங்க. எல்லாம் துடைச்சி, பெட்ஷீட் மாத்தி க்ளீனா இருக்கில்லியா? கேக்கற வேலையை செஞ்சிக் கொடுத்துடு."

"சரிங்கய்யா" என்று மாணிக்கம் போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக்கொண்டு சொன்ன வேலை களைச் செய்வதற்காக கெஸ்ட் ஹவுசின் கதவைத் திறந்து உள்ளே போக... அவனைத் தொடர்ந்து வாலாட்டிக் கொண்டு பாய்ந்த நாயை அதட்டி னான்.

"ஜீவா! போடா! கெஸ்ட்டுங்க வர்றாங்க. போய் வெளில இரு!"

ஜீவா சர்க்கஸ் நாய் மாதிரி உடனே உத்தரவுக்குப் பணிந்து வெளியே சென்று தன் தட்டில் மிச்சமிருந்த சோற்றைத் தின்னத் தொடங்கியது.

கொஞ்ச நேரத்தில் ஒரு கார் அந்த கெஸ்ட் ஹவுஸ் முன்பாக இரட்டை வெளிச்சம் பாய்ச்சியபடி வர, மாணிக்கம் ஓடி வந்து கேட்டைத் திறந்தான்.

போர்டிகோவில் வண்டி நின்றதும் காரை ஓட்டி வந்த அமர்நாத் இறங்கிக் கதவைத் திறந்து விட்டதும் பின்புறத்தி லிருந்து இறங்கினார் தொழிலதிபர் கோத் தாரி.

மாணிக்கம் அமர்நாத்திடம், "நீங்க..." என்றான்.

"சார் பேர் கோத்தாரி. நான் அவர் பி.ஏ. அமர்நாத். டெல்லியிலேர்ந்து வந்தி ருக்கோம். ரெண்டு நாளைக்கு இந்த கெஸ்ட் ஹவுசை புக் செஞ்சோம்."

"போன் வந்திச்சுங்க. ரெடியா வெச்சி ருக்கேன். உள்ளே போங்க சார். லக்கேஜ் நான் எடுத்துட்டு வர்றேன்."

உள்ளே வந்து சோபாவில் அமர்ந்த கோத்தாரி, தன் கோல்டு ஃப்ரேம் கண் ணாடியைக் கழற்றித் துடைத்துப் போட்டுக்கொண்டு, தன் பைப் எடுத்து பற்ற வைத்துக் கொண்டார்.

அமர்நாத் மேற்பார்வையில் லக்கேஜ் எல்லாம் படுக்கையறையில் வைக்கப்பட் டன.

"ராத்திரி சாப்பாட்டுக்கு..." என்றான் மாணிக்கம்.

"எல்லாம் வாங்கிட்டு வந்துட்டோம்."

"நான் வெளியேதான் இருப்பேன். மாணிக்கம்னு கூப்பிட்டா ஓடி வந்துடு வேன். நாய் இருக்குக் காவலுக்கு. ஒரு பயமும் இல்ல. நீங்க ரெஸ்ட் எடுங்க சார்."

மாணிக்கம் வெளியே போனதும், கதவை மூடிவிட்டு வந்த அமர்நாத்தை, "டேய் கஜா, இந்த மாணிக்கத்தையும், நாயையும் முதல்ல இங்கேர்ந்து அப்புறப் படுத்தியாகணும். எப்படி செய்யப் போறே?" என்றான் கோத்தாரியாக மாறி யிருந்த ஆகாஷ்.

(தொடரும்)

புகை பகையான



உடல் நலம் பேணுவதைவிட, இருக்கும் ஆரோக்கியத்தைக் கெட்டழிக்காமல் இருப்பதுதான் எனக்கு முக்கியமாய்ப் படுகிறது. அப்படி எனக்கு வாய்த்த ஒரு விஷயத்தையும், அதிலிருந்து நான் மீண்டது பற்றியுமே பேசப் போகிறேன்.

பள்ளிப் பருவத்தில் நான் மிகுந்த ஆரோக்கியமுடையவனாகவும், ஹாக்கி ப்ளேயராகவும் இருந்தேன். அந்த வயதில் இடையறாத பதற்றம் இருந்து வந்தது. எளிதில் உணர்ச்சிவசப்பட்டேன். என் பதற்றத்தைக் கண்டு எனக்கே சிலசமயங்களில் பயமாகவும் இருக்கும். இதைக் குறைப்பதற்கு நல்ல வழி எதுவென்று யோசிக்க, சிகரெட் பிடிக்க சில நண்பர்கள் அறிவுறுத்த, சட்டென்று அப்பழக்கம் என்னைத் தொற்றிக்கொண்டது.

கூடாரத்தில் மூக்கை நுழைத்த ஒட்டகம், மெள்ள மெள்ள முழுவதுமாய் ஆக்ரமித்துக்கொண்டது. ஒரு நாளைக்கு பன்னிரண்டு பாக்கெட்டுகள், அதாவது நூற்றியிருபது சிகரெட்டுகள் பிடிக்கத் துவங்கினேன்.

பத்தொன்பது வயதில் ஆரம்பித்த அந்தப் பழக்கம், என் ஐம்பதாவது வயதுவரை தொடர்ந்தது. ஒருநாள் இரவு 'இப்படி சிகரெட் பிடிக்கிறோமே... காசும் நஷ்டம், உடல் ஆரோக்கியமும் குறைகிறதே' என்று யோசித்து என் குருநாதர் யோகி ராம் சுரத்குமாரை நினைத்தபடி 'இதுதான் கடைசி பாக்கெட். இதற்குமேல் நான் சிகரெட் பிடிக்க மாட்டேன்' என்று வேண்டிக்கொண்டு கடைசி பாக்கெட்டைப் பிடித்து முடிக்க, மறுநாள் காலையிலிருந்து நான் சிகரெட் பிடிக்கவில்லை. இது இன்னமும் எனக்கு ஆச்சரியமான விஷயம்.


நான் தூக்கிப் போட்ட சிகரெட்டை அதன்பிறகு திரும்பிப் பார்க்கக் கூட முயற்சி செய்யவில்லை. ஆனாலும், உள்ளே நுழைந்த மிருகம் சும்மாயிருக்குமா? மூன்றே மாதத்தில் அந்த மிருகம் எழுந்து நின்று ஓங்கி அறைந்தது. எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இன்னும் சில நிமிடங்களே உயிரோடு இருப்பேன் என்ற நிலையில் நான் ஆஸ்பத்திரிக்குப் போக, டாக்டர்கள் ஆஞ்சியோ பிளாஸ்டி செய்து என் உயிரைக் காப்பாற்றினார்கள்.

நீங்கள் பிடித்த சிகரெட்தான் இத்தனை வேதனைக்கும் காரணம் என்று சொன்னார்கள். சிகரெட்டை விட்டுவிட்டால் மட்டும் உடல் ஆரோக்கியம் மீண்டு விடுவதில்லை. சிகரெட்டை நிறுத்தியதால் பசி அதிகமாகியது. பசி அதிகமாகியதால் உணவு உட்கொள்வது அதிகமாகியது. அரிசிச் சோறு வயிறு புடைக்கத் தின்பது என்பது இன்னொரு விஷயமாயிற்று. அரிசிச் சோறும், குழம்பு ரசம் மோரும் என்னைப் பெருக்க வைத்தன. நடப்பதும், மாடிப்படி ஏறுவதும் கடினமாயின. ஓடுவதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. வாக்கிங் போக வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால், எப்போதாவதுதான் முடிந்தது.

ஒரு வருடம் கழித்து மறுபடியும் ஒரு பயங்கரத் தாக்குதல் ஏற்பட்டது. 'வேறு வழியில்லை, பைபாஸ் செய்துதான் ஆக வேண்டும்' என்று இந்த முறை டாக்டர்கள் உறுதிபடக் கூறினார்கள். இரண்டு அடைப்புகள் இருப்பதைக் காட்டினார்கள்.

புகைப்பது ஓர் அபத்தம். அது சென்ற நூற்றாண்டில் பூமிக்குள் நுழைந்த மிருகம்; மனித குலத்துக்கு எதிரே தோன்றிய ஆலகாலம். இதனால் இருதய நோய் நிச்

சயம். பைபாஸுக்குப் பிறகு மனபீதி ஏற்படுவது வழக்கம். மரணத்தை நெருங்கிப் பார்த்துவிட்டு வந்ததால் வாழ்க்கை பற்றிய ஒரு வெறுப்பும், திகைப்பும் அவர்களுக்கு ஏற்படும் என்றெல்லாம் சொன்னார்கள். என்னை அவை நெருங்காத வண்ணம் பார்த்துக் கொண்டேன். நடமாடத் துவங்கியதும் எந்த வித சாக்குப் போக்கையும் சொல்லாமல் தினமும் காலையிலும், மாலையிலும் நடக்கத் துவங்கினேன். இந்த ஓர் உடற்பயிற்சியை, நடத்தலைச் சரியாகச் செய்துவிட்டால் நோய்களில் பெரும் பகுதி அண்டாமலேயே போய்விடுகிறது.



என்னுடைய யோகா மாஸ்டர் சொல்லிக் கொடுத்ததைப்போல யோகாசனங்களைக் காலையில் எழுந்து பல் தேய்த்ததும் செய்யத் துவங்கி விடுவேன். மூச்சுப் பயிற்சி, கைகால் அசைப்பு, வயிற்றுக்குண்டான பயிற்சி, கழுத்துக்குண்டான பயிற்சி என்று வெகு நிதானமாய் அந்த அங்கங்களின் அசைவை அனுபவித்துச் செய்வேன். மனம் வேறெங்கோ லயித்திருக்க, யோகாசனம் செய்வதும் ஒன்றுதான்; செய்யாதிருத்தலும் ஒன்றுதான். உடம்பு ஆரோக்கியமாக இருந்தால்தான் மனம் ஆரோக்கியமாக இருக்கும்; மனம் ஆரோக்கியமாக இருந்தால் உடம்பு ஆரோக்கியம் சிதைந்தபோதும் வாழ்க்கை தாளகதி மாறாமல் இருக்கும்.

எந்த முயற்சியுமின்றி உடல் நலத்தைத் தொடர்ந்து அழித்துக் கொண்டிருக்கிறபோது நம் வாழ்க்கையும் நம்மைச் சுற்றியுள்ளோர் வாழ்க்கையும் பாழாகின்றன. ஆரோக்கியமாக இருப்பது ஒரு சமூகத் தொண்டு; இல்லாதிருப்பது துரோகம்.

கதை!



பாலகுமாரன்

சந்திப்பு: **சுகந்தி ஜி. பாரதி**
படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

சிவக்கொல்லை கிராமத்தின் சிறுவர்களைக் கேட்டால்கூட அந்த இடத்துக்குச் சரியான வழி காட்டுகிறார்கள். பசுமை சூழ்ந்த வயல்கள் மற்றும் காடுகள் மத்தியில் இருக்கிறது எம்.கே.ஆர். இயற்கை பால் பண்ணை. இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன் இரண்டே இரண்டு சிந்திப் பசுக்களுடன் துவங்கப்பட்டதென்றால் நம்ப முடியவில்லை.

"செயற்கைக் கருவூட்டல் மூலமாக மேல்நாட்டுப் பசுக்களையே பண்ணையில் வளர்த்து வந்தேன்.

"இந்தியாவின் பால் தேவையை ஐம்பத்தைந்து சதவிகிதம் எருமைகளும், நாற்பத்தைந்து சதவிகிதம் பசுக்களுமே பூர்த்தி செய்கின்றன. வட இந்தியாவில் எருமைப் பால் உற்பத்தியும், தென்னிந்தியாவில் பசும் பால் உற்பத்தியும் அதிகம். எருமைகளுக்குத் தீவனச் செலவு குறைவு. அதன் பால் விலை அதிகம். பசுக்களுக்குத் தீவனச் செலவு அதிகம். அதன் பால் விலை குறைவு" என்று புள்ளி விவரங்களுடன் பேசினார் பதினைந்து வருடங்களாக இதே பால் பண்ணையில் மேய்ச்சல் மற்றும் பால் கறவையாளர்களில் ஒருவராக வேலை பார்த்து வரும் குமார்.



• குடும்பத்துடன் வெங்கட்ராமன்...

அவை நம் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. மேல்நாட்டுப் பசுக்கள், பிறந்த பத்து மாதத்தில்கூட சினைப் பருவத்துக்கு வந்துவிடுகின்றன. அதுசமயம் இனம்புரியாத வியாதிகள் பலவும் அவற்றைத் தாக்குகின்றன. கன்று ஈன்ற பிறகு, அவற்றின் கறவை காலங்களில் தாய்ப் பசுக்கள் சில இறந்தும் போகின்றன. இதனால் நம்முடைய பாரம்பரிய இந்திய வம்சாவளிப் பசுக்களே நமக்கு உகந்தது என்கிற முடிவுக்கு வந்து, கடந்த இரண்டாண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக நாட்டுப் பசுக்கள் உற்பத்திக்கு மாறி வருகிறோம்!" என்கிறார் இப்பால் பண்ணை உரிமையாளர் வெங்கட்ராமன்.

"மாட்டுத் தீவனத்துக்காக ஐந்து ஏக்கரில் இயற்கை உர சாகுபடி மூலம் தீவனப் புல் வளர்க்கப்படுகிறது. எருமைப் புல் ஒரு ஏக்கர்; கோ த்ரீ, கினியா கிராஃப் எனப்படும் மாட்டுத் தீவனப் பசும் புல் நான்கு ஏக்கர். மாடுகள் அனைத்தும் தினசரி மேய்ச்சலுக்கும் ஓட்டிக் கொண்டு போய் வரப்படுகின்றன. மாடுகள் ஆரோக்கியமாக இருப்பதற்கு இயற்கையான மேய்ச்சல் நல்லதெனக் கூறப்படுகிறது. காலாற நடந்து, வாயாற மேய்ந்து வருகின்ற கால்நடைகளில் இருந்து கறக்கப்படு



கிற பாலே இயற்கையான பால்'' என்கிறார் வெங்கட்ராமன்.

ஜெர்சி இனப் பசுக்கள் பதினைந்து, ஹெச்.எஃப் இனப் பசுக்கள் பதினைந்து, நாட்டுப் பசுக் கன்றுகள் எட்டு, எருமைக் கறவை மாடுகள் இருபது, எருமைக் கன்றுக் குட்டிகள் பதினைந்து, இயற்கை உழவுக்காக இரண்டு காளை மாடுகள்... எல்லாம் சேர்ந்து சராசரியாக ஒரு நாளைக்குப் பசும் பால் நூற்றைம்பது லிட்டர், எருமைப் பால் நூறு லிட்டர் கறவை ஆகி வருகிறது இங்கு.

அவற்றை எந்தப் பால் வியாபாரிகளுக்கும் இவர்கள் விற்பதில்லை. நியாயமான விலையில் ஆங்காங்கே சென்று, இவர்களே நேரடியாக கிராமப் பொதுமக்களுக்கு வினியோகித்து வருகிறார்கள். வீடுகளுக்குப் பசும் பால். கிராமப்புறங்களின் சாதாரண டீக் கடைகளுக்கு எருமைப் பால். பண்ணை மாடுகளின் கழிவுகளான மாட்டுச் சாணம், கோமியம் போன்றவற்றைப் பயன்படுத்தி பஞ்சகவ்யம், அமிர்த கரைசல், பூச்சி விரட்டி முதலிய இயற்கை உரங்களை பண்ணையில் வைத்துத் தயாரித்து, இயற்கை விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதன் மூலமாகவும் ஆண்டுதோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

''கலப்படமில்லாத, ஆரோக்கியமான, குளிரூட்டப்படாத, இயற்கை சார்ந்த கறந்த பாலினை அந்தந்த நேரங்களில் இந்தப் பகுதி மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

இதைப் போன்ற இயற்கை வழிப் பால் பண்ணைகள் தமிழ்நாடெங்கிலும் உருவாக வேண்டும். குறைந்த முதலீட்டில் பெரிய லாபம் காணலாம். வேலை வேலை என்று அலையாமல் எப்படியாவது ஒரு பிசினஸைத் தொடங்கி, நன்றாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தினால் வாழ்வில் உயரலாம் என்பதற்கு நானே ஒரு சிறந்த உதாரணம்'' என்கிறார் வெங்கட்ராமன்.

லாபம் கொழிக்கும் பால் பண்ணைத் தொழில்!



• பண்ணையில்...

செய்திச் சித்திரம் :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

புதுமலர் ஐந்தும் கரும்பும்

சுதா சேஷய்யன்

11

காமம் என்று சொல்லும்போது அது மன்மதனைக் குறிக்கக் கூடியது. மன்மதனுடைய வில் கரும்பு வில்; மன்மதனிடத்தில் இருக்கக்கூடிய அம்புகள் மலர் அம்புகள்.

இதைத்தான் ஆதிசங்கரர் கேட்கிறார் - "என்ன ஆச்சர்யம்!" என்று. ஒருவன் சண்டைக்கு வருகிறான். அவனிடத்தில் இருக்கக் கூடிய ஆயுதங்கள் கூர்மையான ஆயுதங்களாக இருந்தால் அவன் வெற்றி பெறுவான் என்று சொல்லலாம். ஒருவன் புறப்பட்டான் சண்டைக்கு - அவன் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டான் என்று சொன்னார்களே யொழிய அவன் எங்கிருக்கிறான் என்பதே கண்ணுக்குத் தெரியவில்லை! சாதாரணமாகச் சண்டைக்கு வரக்கூடிய வீரன் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்போம்..? நல்ல ஆஜானுபாகுவாக, ஆகிருதியாக, பார்த்தவுடனே போர் வீரன் என்று சொல்லும்படியாக இருந்தால், அவனால் ஜெயிக்க முடியும் என்று சொல்லலாம். நோஞ்சானாக இருந்தால் அவனால் எப்படி ஜெயிக்க முடியும்?

இங்கே வரக்கூடியவனோ நோஞ்சானா என்பதேகூடத் தெரியவில்லை. ஏனென்றால் அவனுக்கு உருவமே இல்லை!

சண்டைக்குப் புறப்பட்டான்; அவனுக்குத்தான் உருவமில்லை... அவன் வரக்கூடிய தேருக்காவது பெரிய உருவம் உண்டா என்று பார்த்தால் அதுவும் இல்லை!

இராவணன் மிகப்பெரிய தேரில் வந்ததால் அவன் வருவதைப் பார்த்தவுடனேயே எல்லோருக்கும் பயமாக இருந்ததாம். திடீரென்று ஆழ்வார்பேட்டை சாலையில் ஒரு விஜயந்தா டாங்க் வந்தால் பயமாக இருக்குமா இராதா! அந்த மாதிரி போர்ச் சாதனமாவது மிரட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால், இங்கே அம்பு தொடுக்கப் புறப்பட்டு வரும் வில்லாளியோ தென்றலை - மலையமாருதத்தை - வாகனமாகக் கொண்டு வருகிறான்!


மன்மதனுக்கு அனுக்ரஹம்

அவனும் எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை; தேரும் கண்ணுக்குத் தெரியவில்லை. கையிலுள்ள ஆயுதங்களோ புஷ்ப பாணங்கள்! புஷ்பத்தைத் தூக்கிப் போட்டால் கொஞ்சம் தூரம் கூடப் போகாது. 'பொத்'தென்று அந்த இடத்திலேயே விழும். கூர்மையே கிடையாது. இப்படிப்பட்ட ஆயுதங்களுடன் இவன் எப்படி வெற்றிவாகை சூடப் போகிறான்?

"அம்பிகை பரமேசுவரியே! இவன் - இந்த மன்மதன்- வெற்றிவாகை சூடுகிறான். இதற்கு என்ன காரணம் தெரியுமா? உன்னுடைய அருள்தான் காரணம்" என்கிறார் ஆதிசங்கரர்.

"நீ அனுக்ரஹம் செய்கிறாய்; அதனால் அனங்கனாக இருக்கக்கூடிய அந்த மன்மதனுக்கு, எந்தத் தேசத்துக்குப் போனாலும் வெற்றி!" என்கிறார்.

அதே ஆயுதங்களை அம்பிகை தன் கரத்திலேயும் தாங்கிக் கொண்டிருக்கிறாளே - மலர் அம்புகளையும் இக்ஷு கோதண்டத்தையும் வைத்துக் கொண்டிருக்கிறாளே, என்ன


திருவிடைமருதூர்
ஸ்ரீ பிருஹத்குசாம்பிகை





பொருள்?

அந்தப் பொருளை விளக்குவதற்காகத் தான் **மனோரூபேக்ஷு கோதண்டா, பஞ்சதன் மாத்ரஸாயகா** என்ற நாமங்கள்.

ஞான இந்த்ரியங்கள்

மனிதர்களுக்கு இருக்கக்கூடிய இந்த்ரியங்களை வகைப்படுத்தும்போது கர்மேந்த்ரியங்கள், ஞானேந்த்ரியங்கள் என்று சொல்வ துண்டு. நமக்கு இங்கே ரொம்ப முக்கியம் கர்மேந்த்ரியங்கள்கூட அல்ல; ஞானேந்த்ரியங்கள்தான். காரணமென்னவென்றால் கர்மேந்த்ரியங்களைச் செயல்படுத்தக் கூடியதே இந்த ஞானேந்த்ரியங்கள்தான்.

ஞானேந்த்ரியங்கள் என்பவை, நமக்கு ஞானத்தைப் பெற்றுத் தரக்கூடிய இந்த்ரியங்கள்.

'ஞானத்தைப் பெற்றுத் தரக்கூடிய' என்றால், நமக்கு அறிவைப் பெற்றுத் தரக்கூடிய இந்த்ரியங்கள். இன்றைய 'ஸ்டைலில்' சொல்ல வேண்டுமானால் எந்தப் புலன்கள் நமக்கு 'இன்புட்ஸ்' பெற்றுத் தருகின்றனவோ, அவையே ஞானேந்த்ரியங்கள்!

உதாரணமாக, ஒரு பொருளைக் கண் பார்க்கிறது. அதன் விழியில் பதிவாகும் பிரதி பிம்பத்தை மூளைக்கு அனுப்புகிறது. மூளையிலிருப்பதாகச் சொல்லப்படும் சில்லுகள் அல்லது நமது மனது - அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும் - அங்கே உடனே ஒரு செயல்முறை ஆரம்பமாகி நடக்கிறது - ப்ராஸஸிங் - 'இந்தப் பொருளை எங்கேயோ முன்னே பார்த்திருக்கிறோம். இதற்குப் பக்கத்தில் போய் நின்று குரலை எழுப்பினால் இது ஒலியைப் பெருக்கும். இதற்கு 'மைக்' என்று பெயர்...' இப்படி ஒரு தொடர் சிந்தனை 'உள்ளே' நிகழ்கிறது.

இது உள்ளே நடக்க வேண்டுமானால், கண் முதலில் பிம்பத்தை உள்ளே எடுத்துக் கொண்டு போகவேண்டும். இவ்வாறு ஞானத்தை எடுத்துக் கொண்டு போகிற இந்த்ரியம் அல்லது புலனுக்கு ஞானேந்த்ரியம் என்று பெயர் - தேவையான தகவலை எடுத்துக் கொண்டு போகிற இந்த்ரியம். கண்ணும், மூக்கும், காதும், நாவும் மேனியுமாகிய இந்த ஐந்து புலன்களும் தேவையான தகவல்களைத் திரட்டிக் கொண்டு போவதனாலே இவை ஞானேந்த்ரியங்கள்.

கர்ம இந்த்ரியங்கள்

இவற்றுக்கு அப்புறம் வருபவை கர்மேந்த்ரியங்கள். ஞானேந்த்ரியங்கள் உள்ளே எடுத்துச் செல்லும் தகவலின் அடிப்படையில் ஒரு பெரிய ப்ராசஸிங் நடந்து, 'கை இதைச் செய்ய வேண்டும்' 'கால் அப்படி நடக்க வேண்டும்' என்றெல்லாம் நடைபெற்றால், கையும் காலும் தொழிலைச் செயல்படுத்துபவை - ஆகையால் அவற்றுக்குக் கர்மேந்த்ரியங்கள் என்று பெயர்.

நாக்கு இரண்டு செய்கைகளுக்கும் வரும் - சுவையை உணர்ந்து அறிவுக்குத் தெரிவிக்கும்போது ஞானேந்த்ரியமாக இருக்கும். பேசுகிறபோது கர்மேந்த்ரியமாக மாறிவிடும். நாக்குக்கு மட்டும்தான் இரண்டு இந்த்ரியங்களாகவும் இயங்குகிற சிறப்பு உண்டு!

கர்மேந்த்ரியங்களைக் காட்டிலும்

இயல்புகள் இயல்புகள்தான் என்று ஏற்றுக்கொண்டு, அதற்கு என்ன செய்வது என்று பார்க்கலாமேயொழிய இயற்கைக்கு மாறாக விஷயங்களை நம்மால் மாற்ற முடியாது.

ஞானேந்த்ரியங்கள் முக்கியமானவை. அவை செய்திகளைத் திரட்டிக்கொண்டு போகவேண்டும்.

காந்தி காட்டிய குரங்குகள்

மகாத்மா காந்தி மூன்று குரங்கு பொம்மைகளைக் காட்டி ரொம்பச் சுலபமாகக் கூறிவிட்டார்: "கண்ணை மூடிக்கொள்; காதை மூடிக்கொள், வாயை மூடிக் கொள்" என்று! கண்களைக் கைகளால் மூடிக்கொள்ள வேண்டும் என்று எதற்காகச் சொன்னார்? கைகளால் மறைக்காமலே கண்களை வெறுமே மூடிக்கொள்ள முடியுமல்லவா?

அவருக்குத் தெரியும், "கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் உட்காரு" என்று சொன்னால், இலேசாகக் கண்களைத் திறந்து பார்த்து, யார் யார் கண்களைத் திறந்திருக்கிறார்கள்? நாம் மட்டும் திறந்திருக்கிறோமா? பக்கத்தில் இருப்பவர்கள் திறந்திருக்கிறார்களா? இரண்டு கண்களையும் திறந்திருக்கிறார்களா? ஒரு கண்ணைத் திறந்திருக்கிறார்களா? என்றெல்லாம் பார்க்க நமக்குத் தோன்றும் - இது மகாத்மா காந்திக்குத் தெரியும்!

ஒன்றும் வேண்டாம்; "ஒரு நிமிடம் எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்துகொள்ள வேண்டும்" என்று சொன்னால் ஒரு முப்பது வினாடி ஆனவுடனேயே கண்ணை இலேசாகத் திறந்து பக்கத்தில் இருப்பவரைப் பார்ப்போம்! இதை எல்லோருமே செய்வோம் - இது மனித இயல்பு. இதை வெளியில் சொன்னால் தவறு என்று எண்ணிக்கொண்டு சொல்லாமல் இருக்கிறோம். ஆனால் எந்த நாட்டிலும் எந்த உலகத்திலும் இது தான் மனித இயல்பு. மனித இயல்புகளை மாற்றமுடியாது, இயல்புகள் இயல்புகள்தான் என்று ஏற்றுக்கொண்டு, அதற்கு என்ன செய்வது என்று பார்க்கலாமேயொழிய இயற்கைக்கு மாறாக விஷயங்களை நம்மால் மாற்ற முடியாது.

நமது மகரிஷிகள் ஏற்றுக்கொண்டார்கள் - இது இயல்பு என்று! அதனால்தான் காந்தி குரங்கைப் பார்த்து கண்ணை மூடிக்கொள் என்று வெறுமே சொல்லாமல், கையால் கண்ணை மூடிக் கொள் என்றார்!

கண்ணே திறந்தால்கூட கை அதைப் பொத்தியிருக்கும் அல்லவா!

சில சமயங்களில், கை மூடியிருக்கிறது என்பதால் யாருக்கும் தெரியாமல் கண்ணைத் திறந்து இடுக்குகள் வழியே பார்ப்பதும் உண்டு!

இந்தப் புலன்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

(தொடரும்)



விமர்சனம்



வாத்தியார்

இன்னொரு முறை ஜென்டில்மேன் படம் பார்த்த மாதிரி இருக்கு. இந்தக் கதைக்கு எதுக்கு என்னோடது, உன்னோடதுன்னு அடிச்சுக்குறாங்கன்னு தெரியல. வாத்தியாரா வேலை பார்க்கற அர்ஜுனுக்கு சமூகத்து மேல ஏகப் பற்று. எந்த அநியாயத்தையும் கண்டு, கேட்டு, நீதிய நிலைநாட்டுவாரு. அதுவே அவர் வாழ்க்கைக்கு வேட்டு வைக்க, அது வேட்டு இல்ல ஜூட்டுன்னு பொங்கி எழுந்து மக்கள் தாதாவா மாறுறாரு. ஃப்ளாஷ்பேக் காட்சிகள் உணர்ச்சிமயமா சொல்லப்பட்டிருக்கு. கும்பகோணத் தீ விபத்து காட்சிகளைப் பார்க்கும்போது கண்ணுல தண்ணி வந்துடுது. அர்ஜுனுக்கும் சுஜாதாவுக்குமான பாசப் போராட்டத்துல ஜீவன் கலந்திருக்கு. ஆனா அர்ஜுன், மல்லிகா கபூர் ஜோடில காதல் கெமிஸ்ட்ரி ஓர்க் அவுட் ஆகல. பிரகாஷ்ராஜ் செல்ல பாப்பு! புலி பதுங்கறது பாயறதுக்குன்னு நெனச்சா, அணைக்கறதுக்குன்னு முடிச்சிருக்கறது நல்ல திருப்பம். சண்டைக் காட்சிகள்ல புகுந்து விளையாடுறார் அர்ஜுன். ஆதரவற்றோர் இல்லக் காட்சிகள் உருக்கமா இருக்கு.

இமான் இசையில 'நான் முன்னால போறேன்' பாட்டும் ஆட்டமும் ரீமிக்ஸ் ஜிலு ஜிலுன்னா, 'பாட்டு வரப்போகுது டோய்'னு நெனைக்கறதுக்கு முன்னாடியே அர்ஜுனும் மல்லிகாவும் ஆடறது சாரி, சொதப்பலு. திரைக்கதைய விறுவிறுப்பா கொண்டு போகணும்ங்கறதுக்காக லாஜிக்கெல்லாம் பாக்கல நம்ம டைரக்டர் வெங்கடேஷ் அண்ணாச்சி. ஃப்ளாஷ்பேக்ல காட்டின நேர்த்திய, படம் முழுக்கக் காட்டியிருந்தா அர்ஜுனுக்கு இன்னொரு ஜென்டில்மேனா இருந்திருக்கும்.

\- லஜ்ஜாவதி

சோதனை

அதிரடி அமைச்சர்... அனலடி நடவடிக்கை!



• எ.வ.வேலு

தினசரிகளைப் பிரித்தால் அந்தச் செய்தி மட்டும் நம் கண்ணில் படாமல் இருக்காது... 'ரேஷன் அரிசிக் கடத்தல்!' ஆட்சிகள் மாறினாலும் இந்தக் காட்சிகள் மட்டும் மாறுவதாயில்லை. இந்தத் தி.மு.க. ஆட்சியிலாவது இதற்கொரு முடிவு கிடைக்குமா? உணவுத் துறை அமைச்சர் எ.வ.வேலுவைத் தொடர்புகொண்டு பேசினோம். 'ஏன் முடியாது? இப்போதே கிளம்பி வாருங்கள். உங்கள் முன்பே நடவடிக்கையில் ஈடுபடுகிறேன்' என்றவுடன், சும்மாவா இருப்போம்... துவங்கியது கல்கியுடனான அமைச்சரின் பயணம்...



• அதிகாரிகளுடன் ஆலோசனை...



• குறை கேட்கிறார்...

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருக்க, அமைச்சரின் கார் பெங்களூர் சாலையில் வேகமாக விரைந்துகொண்டிருந்தது. நம்மிடம் பேசியபடியே வந்தார் அமைச்சர்.

"ரேஷன் அரிசி கடத்தப்படுவதற்கு முக்கிய காரணமே போலி ரேஷன் கார்டுகள்தான். தமிழ்நாட்டில் 1 கோடியே 85 லட்சம் கார்டுகள் இருக்கின்றன. அதில் கிட்டத்தட்ட 3,70,000 போலி கார்டுகள். ஒரு கார்டுக்கு 20 கிலோ அரிசி என்றால், போலி கார்டுகளுக்கு கொடுக்கப்படும் அரிசி சுமார் 7400 டன். இவற்றில் பெரும்பகுதி கடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் மாதம் மூன்று லட்சம் டன் அரிசி விநியோகத்துக்கு வழங்கப்பட்டது. நாங்கள் போலி கார்டுகளை ஒழிக்க எடுத்த நடவடிக்கை காரணமாக இப்போது இரண்டு லட்சத்து எண்பதாயிரம் டன்தான் வழங்கப்படுகிறது" என்றபடியே, திருத்தணியை



* சோதனையிடுகிறார்...

அடுத்த பள்ளிப்பட்டில், ஆந்திராவை இணைக்கும் சாலையில் வண்டியைப் பார்க் செய்தார் அமைச்சர்.

"கடத்தல் லாரியைப் பிடித்தால் சில சமயம் எஸ்கேப் ஆகிவிடும் டிரைவரோ, கிளீனரோ செல் மூலம் அவர்களின் முதலாளிகளுக்குத் தகவல் கொடுத்து விடுகிறார்கள். லாரிகள் உஷாராக வேறு பாதையில் போய்விடுகின்றன. சில சமயங்களில் குறிப்பிட்ட ரூட்டில் கடத்தல் லாரி போகப் போவதாகத் தகவல் கூறி நம்மைத் திசை திருப்புவர். எனவேதான் என் புலனாய்வு வேலைகளுக்கு நம்பிக்கையான பத்து அதிகாரிகள் கொண்ட டீமை வைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த டீம் லாரியை மடக்கியதும் தகவல் வரும்" என்றார் அமைச்சர். கடைசியில் வேறு ஒரு ரூட்டில் லாரிகள் செல்வதாகத் தகவல் வர, ஆர்.கே.பட்டு சாலைக்கு விரைந்தது அமைச்சரின் கார். அங்கேயும் ஏமாற்றம் தான்! அதிகாலைவரை காத்திருந்து, நான்கு மணி அளவில் வேலூருக்கு வந்து ஓய்வெடுத்தார் அமைச்சர் வேலு.

மறுநாள் காலை விருந்தினர் மாளிகையில் டி.ஐ.ஜி. ரமேஷ் குடவாலா, மாவட்ட ஆட்சியர் தர்மேந்திர பிரஸாத் யாதவ் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி சுகுந்தி ஆகியோருடன் போலி ரேஷன் கார்டுகள் ஒழிப்பது குறித்த ஆலோசனையில் ஈடுபட்டார். அப்போது "போலி ரேஷன் கார்டுகள் வைத்திருப்பவர்கள் தாங்களாகவே முன்வந்து ஒப்படைக்கும் விதமாக பொது இடங்களில் போலி கார்டுகளைப் போட பெட்டிகள் வைக்கலாம். அப்படியும் ஒப்படைக்கப்படாவிட்டால் கடை விற்பனையாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். ஏனென்றால், அவருக்கு எது போலி கார்டு என்று தெரியாமல் இருக்காது" என்றார் அமைச்சர்.

"நாங்கள் கடத்தல் கேஸ் பிடித்தால் உணவுப் பிரிவு போலீஸுக்கு கேஸை மாற்றாமல், நாங்களே தொடர் நடவடிக்கை எடுக்க அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் வழக்குகள் விரைந்து புலனாய்வு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தர முடியும்'' என்றார் டி.ஐ.ஜி. குடவாலா.

கூட்டம் முடிந்ததும் வாலாஜா, பேட் மற்றும் சோளிங்கர் பகுதிகளில் உள்ள கூட்டுறவு ரேஷன் கடைகளுக்கு அதிரடி விசிட் மேற்கொண்டார் அமைச்சர். பின்னர் வள்ளிவேடு மோட்டூர் ரைஸ் மில் ஒன்றில் பன்னிரண்டு மூட்டைகள் ரேஷன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தார். சம்பந்தப்பட்ட நபர்களைக் கைது செய்து வழக்குப் போடுமாறு டி.ஆர்.வோ.வுக்கு உத்தரவிட்டார். அதன்பின் வாலாஜாபேட்டையை ஒட்டியுள்ள கீழ்புதுப்பேட்டை, நீலகண்டராயபுரம் மற்றும் மேல் வெங்கடாபுரம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார். 'பச்சரிசி போட வேண்டும்' என்ற அவர்களின் வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். ஐ.டி கார்டு அணியாத கடை விற்பனையாளர்களை எச்சரித்தார். கீழ்புதுப்பேட்டையில் உள்ள கடை விற்பனையாளர் மீது பொதுமக்கள் ஏகப்பட்ட புகார்களைக் கூறினர். ஸ்டாக்குகளும் குறைவாக இருந்ததால் விற்பனையாளர் உடனே சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

"தமிழ்நாட்டில் 28000 ரேஷன் கடைகள் இருக்கின்றன. எல்லாக் கடைகளிலும் நடக்கும் தவறுகளைக் களைய சற்று காலம் பிடிக்கும்'' என்றார் அமைச்சர். அவரிடமிருந்து நாம் விடை பெற்றோம்.


- ஸ்ரீநி

படங்கள்: ராஜன்

ஸ்டெம் செல்

மருத்துவத் துறையில் மகத்தான புரட்சி!

இன்றைய அலோபதி மருத்துவத் துறையானது, ஒவ்வொரு கால கட்டத்திலும் பல்வேறு புதிய மருத்துவத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. அறுவை சிகிச்சை, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, லேசர் சிகிச்சை... எனத் தொடரும் வரிசையில் புதிதாகச் சேர்ந்திருக்கிறது 'ஸ்டெம் செல்' தொழில்நுட்பம். இதுவரையிலும் நடைமுறையிலுள்ள தொழில்நுட்பத்தில், 'ஸ்டெம் செல் தொழில்நுட்பம்' மிகவும் முன்னேறிய தொழில்நுட்பம் என்றே சொல்லலாம்.



நமது உடலில் ஏதாவது ஓர் இடத்தில் அடியோ, பாதிப்போ ஏற்பட்டால் அந்த இடத்தில் இருக்கும் செல்கள் அழிந்துவிடும். அந்த செல்களை ஈடுகட்ட, உடம்பின் மற்ற பகுதியிலுள்ள செல்கள், பாதிப்படைந்த இடத்துக்குச் சென்று சமன் செய்கின்றன. இந்த செல்கள் ஒன்றோடொன்று தொடர்புகொள்ள நமது உடலில் உள்ள 'சைட்டோகைன்ஸ்' எனும் அமிலம் உதவுகிறது. பாதிப்பு பெரிய அளவில் இருக்கும்போது செல்களில் பற்றாக்குறை ஏற்பட்டு, அந்த உறுப்பின் செயல்பாடே நின்றுவிடுகிறது. நோயாளியின் உடம்பில் பாதிப்படைந்த பகுதியில் ஸ்டெம் செல்களைச் செலுத்துவதன் மூலம், உறுப்பு செயலிழப்பது தவிர்க்கப்படுகிறது.

இத்தகைய ஸ்டெம் செல்களின் சாதக பாதகங்கள் குறித்து நம்மிடம் விளக்கினார், சென்னை செயிண்ட் தாமஸ் மருத்துவமனையின் சிறுநீரகவியல் துறையின் தலைமை மருத்துவர் ரவிச்சந்திரன்.

“ஸ்டெம் செல்கள் என்பது நமது உடலின் எலும்பு மஜ்ஜையில் காணப்படுவது. இவற்றைத் தமிழில் விதைச் செல்கள் என்று கூறலாம். சர்க்கரை நோயாளிகள், இருதய நோயாளிகள், சிறுநீரக நோயாளிகள், விபத்துகள் மற்றும் பல்வேறு தொற்று நோய்களால் உடல் உறுப்புகள் பாதிப்படைந்தவர்கள் இந்த ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி குணம்பெற முடியும். குறிப்பாக, சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை நமது நாட்டில் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. மாறிவரும் வாழ்க்கைச் சூழல், உணவுப் பழக்க வழக்கங்கள் போன்றவை சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக முக்கிய காரணமாகும். இத்தகையோருக்கு 'ஸ்டெம் செல் சிகிச்சை' வரப் பிரசாதமாகும்.

கணையம் பாதிப்படையும்போது இன்சுலின் சுரக்கும் செல்களும் பாதிப்படைந்து, இன்சுலின் சுரப்பது குறை



• டாக்டர் ரவிச்சந்திரன்

கிறது. இந்த நேரங்களில் சர்க்கரை நோயாளிகளின் உடலில் உள்ள ஸ்டெம் செல்லையோ அல்லது நோயாளியின் உடலுக்குப் பொருந்தக்கூடிய மற்றொருவரின் உடலிலிருந்து எடுத்த ஸ்டெம் செல்லையோ கணையத்தில் செலுத்தி இன்சுலினை அதிக அளவு சுரக்கச் செய்ய முடியும்.

குழந்தைகளைப் பாதிக்கும் 'Auto Immuno Diabetics' என்ற வகை சர்க்கரை நோய்க்கு ஸ்டெம் செல் சிகிச்சை சிறந்த முறையில் பயனளிக்கிறது.



இருதய நோயாளிகளுக்கு 'CD133' என்ற வகை ஸ்டெம் செல்லைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கலாம். பிரான்ஸ் நாட்டில் இந்த வகை ஸ்டெம் செல்லைப் பயன்படுத்தி பைபாஸ் இருதய அறுவை சிகிச்சை அதிக அளவில் மேற்கொள்கிறார்கள். இச்சிகிச்சை முறை மிக அதிக பொருட்செலவு கொண்டதால் நம் நாட்டில் அதிகம் பிரபலமாகவில்லை.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையில், சிறுநீரகம் தானமாகப் பெறுபவரிடமிருந்தே ஸ்டெம் செல்களையும் பெற்று தானமாகப் பொருத்துபவருக்குச் செலுத்தினால், தானமாகச் சிறுநீரகம் பெறுபவரின் வாழ்நாளை அதிகரிக்க முடியும். இதைத் தவிர மலேரியா, சிக்குன் குன்யா, மஞ்சள் காமாலை போன்ற நோய்களினால் சிறுநீரகம் பாதிப்படைந்தவர்களையும் ஸ்டெம் செல்லைச் செலுத்தி குணப்படுத்தலாம்.

அண்மையில் ஒருவிதமான தொற்று நோய்க் கிருமிகளால் சிறுநீரகம் பாதிப்படைந்து சிகிச்சைக்கு வந்தவருக்கு, அவருடைய தாயின் உடலிலிருந்தே ஸ்டெம் செல்களை எடுத்து நோயாளிக்குச் செலுத்தி பாதிப்பைக் குணப்படுத்தினோம். விபத்துகளிலிருந்து நிவாரணம் பெறவும் ஸ்டெம் செல்கள் பெருமளவில் உதவுகின்றன.

மேலை நாடுகள் ஸ்டெம் செல்களைப் பயன்படுத்திப் பெரிய புரட்சியையே செய்து வருகின்றன. ஆண், பெண் இணையாமல், பெண்ணின் கர்ப்பப்பை முட்டையில் உள்ள ஒரு ஸ்டெம் செல்லை மட்டுமே பயன்படுத்தி ஒரு கருவை வளர்த்து, ஒரு முழு மனிதனையே உருவாக்க முடியும்.

"மாபெரும் மாற்றத்தை ஸ்டெம் செல்கள் ஏற்படுத்துவது உறுதி!"

ஸ்டெம் செல்களால் பாதிப்பென்றால், சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளில் இவற்றைப் பயன்படுத்தி தமது சொந்த முகத்தையே சிலர் மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். இம்முறையில் பல குற்றவாளிகளும், சமூக விரோதிகளும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

எது எப்படியிருந்தாலும், நவீன மருத்துவத் தொழில்நுட்பத்தை ஆக்கபூர்வமான விஷயங்களுக்கோ அல்லது அழிவுக்கோ பயன்படுத்துவது நமது கையில்தான் உள்ளது.

தொடர்ந்து ஸ்டெம் செல் ஆராய்ச்சிகள் நடந்த வண்ணம் உள்ளன. எதிர்காலத்தில் மருத்துவத் துறையில் மாபெரும் மாற்றத்தை ஸ்டெம் செல்கள் ஏற்படுத்தும் என்பது மட்டும் உறுதி!

- ராகவ்குமார்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

நீங்கள் கேட்டவை



● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? 'ஆட்சிப் பொறுப்புக்கு நடைபெறும் எல்லா தேர்தல் முறைகளும் அப்பழுக்கற்றவையல்ல. ஏதேனும் ஓரிரு குறைகள் எழலாம்; எச்சரிக்கையுடன் கவனித்துத் திருத்திக்கொள்ள வேண்டும்' என்று கருணாநிதி கூறியுள்ளாரே?

! கடைசி மூன்று வார்த்தைகளைத் தவிர, பாக்கியெல்லாம் சரி. 'திருத்திக்கொள்ள இயலும்' என்பதற்குப் பதில் 'சாதகமாக்கிக் கொள்ள முடியும்' என்று கூறியிருந்தால் இன்றைய நடைமுறைக்குப் பொருந்தும்!



● சாதக சாதுர்யம்!

ஸ்டாலின் சொன்னால்தான் செய்வாராமே சென்னை மேயர்?

● ஷோபனாதாசன், நாட்டரசன் கோட்டை

? தமிழகத்தில் அறிவிக்கப்படாத எமெர்ஜன்ஸி நிலை ஏற்பட்டுள்ளதாக வைகோ கூறியுள்ளாரே?

! அந்த எமெர்ஜன்ஸி நிலை வைகோவின் போக்கினால் ஏற்பட்டுள்ள ஒன்று என்பதில் சந்தேகமில்லை!

● எஸ்.காயத்ரி, திருக்குறுங்குடி

? சரத்குமார் ஜெயலலிதாவைப் புகழோ புகழென்று புகழ்ந்து கொண்டிருந்தாரே... இப்படித் திடீரென்று விலகும்படி அதற்குள் என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

! ராதிகாவின் புகழ் கூடியிருக்கும்!

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? 'நான் எதையும் ஸ்டாலின் சொன்னால்தான் செய்வேன். இதில் வெட்கப்படவோ, வருத்தப்படவோ எதுவுமில்லை. இதை நான் பெருமையாகவே கருதுகிறேன்' என்று சென்னை மேயர் சொல்லலாமா?

! ஏதாவது ஆலோசனை தேவைப்பட்டால் உள்ளாட்சித் துறை அமைச்சரை அணுகுவதில் தப்பில்லை. ஆனால், மேயர் பொறுப்பில் சுதந்திரமாகச் செயல்பட வேண்டியவர், ஒவ்வொரு காரியத்துக்கும் ஸ்டாலினின்




● ஐச்வர்ய ஆபத்து!

ஆணைக்காகக் காத்திருப்பதாகக் கூறினால், அந்தப் பதவியை வகிக்கவே அவர் தகுதியற்றவராகிறார்.

● **ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி**

? அடுத்த ஆண்டு முதல் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு கிடையாது என்று அமைச்சர் பொன்முடி அறிவித்துள்ளாரே?

! இதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அது பல தரப்பினரையும் பார்த்துப் பேசித் தயாரித்தளித்த அறிக்கையின் பேரில் நுழைவுத் தேர்வு கைவிடப்படுகிறது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம், மற்ற எல்லாவிதப் படிப்புகளையும்விட டாக்டர் படிப்பும் இன்ஜினீயரிங் படிப்பும் மருந்துகள் தயாரிக்கும் படிப்பும் மிக முக்கியமானவை. இவற்றில் தரம் மட்டுமே அளவுகோலாக இருக்க வேண்டும். இக்கல்லூரிகளிலிருந்து அரைவேக்காடுகளாக வெளிவரும் பட்டதாரிகள் சமுதாயத்துக்குப் பெரும் கேடு விளைவிக்க முடியும். சொல்லிப்புட்டேன்; அப்புறம் கருணாநிதி பாடு, பொன்முடி பாடு!



★ ஸ்டாலினின் சேவகர்!



★ இலட்சிய அபாயம்!

● **ஆரூர் சேகர், சென்னை - 94** ★


? டீ, காபியைப் போல் மது அருந்துவதும் சாதாரணமாகிவிட்ட நிலையில், மதுவுக்கு எதிரான பிரசாரம் எடுபடுமா?

! இதனாலேயே பிரசாரம் முன்னிலும் தீவிரமடைய வேண்டியது அவசியமாகிறது. என்.டி.டீ.வி. நிகழ்ச்சியில் 'அளவறிந்து அருந்துவது அவரவர் பொறுப்பு' என்று ஒரு விவாதத்தை அண்மையில் முடித்திருக்கிறார்கள். இதைப் போன்ற அளவற்ற அபத்தப் பிரசாரங்கள் ஆபத்தானவை. உட்கொள்ளப்படும் ஒவ்வொரு சொட்டு மதுவும் அதற்குரிய தீமையை, உடலில் - முக்கியமாக மூளையில் உருவாக்குகிறது. மது, அடிமை ஆவதே இல்லை. அருந்துபவர்தான் மதுவுக்கு அடிமை!

● **அவ்வை கேசஞ்சீவிபாரதி, கலிங்கியம்**

? 'இந்தியப் பிரதமர் ஆவதே என் இலட்சியம்' என்கிறாரே லல்லு பிரசாத் யாதவ்...

! அவரது இலட்சியம் இந்தியாவின் துர்பாக்கியமாகிவிடக் கூடாது!



★ இடம் மாறிய புகழ்!



★ எமர்ஜென்ஸி காரணம்!

● **அகிலா அன்புமணி, ஈரோடு**

? "படிக்க வசதி இல்லாததால்தான் கூலி வேலை பார்க்கிறோம். எனவே அரசே எங்களை இலவசமாகப் படிக்க வைக்க வேண்டும்" என்று குழந்தைத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு கேட்டுள்ளதைப் பற்றி?

! இந்த வாதம் சரியானதன்று. இன்று பள்ளிக் கல்வியை அரசாங்கம் இலவசமாக்கி, மதிய உணவு போட்டு, பாடப் புத்தகங்களைத் தந்து, பலவித உதவிகளைச் செய்கிறது. உண்மை என்னவெனில், குழந்தைகள் உழைத்துச் சம்பாதித்துக் கொடுக்கும் ஊதியம், குடும்பம் நடத்த பெற்றோருக்குத் தேவையாக உள்ளது. எனவே, மக்களின்

வாழ்க்கைத் தரம் உயர்வதுதான் பிரச்னை தீர வழி. தொழிற்கல்வியும் முக்கியம். உடலால் உழைப்பது தவறில்லை என்பது உணர்த்தப்பட வேண்டும்.

● கே.வி.ராமன், சென்னை - 73

? ஐஸ்வர்யா ராய்க்கு ரூ.13 லட்சம் மதிப்புள்ள யூரோக்கள் பார்ஸலில் அனுப்பப்பட்டதற்காக சுங்கத்துறை விசாரணை நடத்தியிருக்கிறதே?

! விசாரணை முடிந்த பிறகும் மர்மம் நீடிக்கிறது. ஐச்வர்யம் அழகான வழியில் வராமல், ஆபத்தான வழியில் வந்தால் பிரச்னைதான் யாருக்கும்!

● கு.அருணாசலம், தென்காசி ❐

? பெண்களுக்குப் பாதுகாப்பாக 'குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம்' அமலுக்கு வந்துவிட்டதைத் தொடர்ந்து, டி.வி. மெகா சீரியல்களில் பெண்களை அடிப்பது, உதைப்பது, கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதைப் போன்ற காட்சிகள் தடைசெய்யப்படுமா?

! அத்தகைய செயல்களுக்குத் தண்டனை பெறுவதாக கடைசி 'எபிசோடி'ல் காட்டிவிட்டால் தப்பிவிடலாம்! இதற்கும் மேல் தடை விதித்தால் தடைக்குத் தடைவிதிக்கக் கோரி வழக்காடுவார்கள்! சட்டத்தால் மட்டுமே எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது; மனமாற்றம் தேவை.

❐ ரூ.100 பரிசு பெறுபவர்
கு.அருணாசலம்
எம்-109, ஹவுசிங் யூனிட்,
தென்காசி - 627 811

★ ரூ.50 பரிசு பரிசு பெறுபவர் :
ஆரூர் சேகர்
76, பெரியார் பாதை,
சூளைமேடு
சென்னை - 600 094

போட்டிக் கதை

‘ஒரே ஒரு ஸ்கேன் போதும், உங்கள் இதயத்தைப் பாதுகாக்க!’

சபேசன் அந்த விளம்பரத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார். தினமும் ஒரு மாறுதல் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. நாளொரு புதுமை, பொருளாதார முன்னேற்றமென்று.

ஏழைக் குடும்ப வாரிசாக அவர் கிராமத்தில் வளர்ந்தபொழுது உடல் நிலையில் கோளாறு என்றால், பக்கத்து நகரத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு வந்து, நீண்ட வரிசையில் நின்று மருத்துவம் பார்த்துச் செல்வார்கள்.

பிறகு படிப்பு, வேலை, வசதி என்று வளர்ந்து அவரும் ஒரு நடுத்தரக் குடும்பஸ்தனாக மாறிய பிறகு வெளி மருத்துவரிடமோ, சிறப்பு மருத்துவரிடமோ சென்று பார்க்கும் வழக்கம் வந்தது.

இப்பொழுது அவருடைய மகன் சந்துருவுக்கு பாங்கில் வேலை. குடும்பமே சென்னைக்குக் குடி பெயர்ந்தாகி விட்டது.

இங்கே மருத்துவம் என்றாலே சிறப்பு மருத்துவர் அல்லது தனியார் மருத்துவமனையில்தான் என்று வழக்கமாகி விட்டது. மூட்டு வலியும் ஆஸ்துமாவும் நிரந்தர விருந்தாளிகள் என்பதால் பணச் செலவு அதிகம்தான். அவருடைய பென்ஷனைவிட மருத்துவச் செலவு கூடுதலாகத்தான் இருக்கிறது. ஆனால் அதற்காக சந்துரு ஒரு போதும் முணுமுணுப்பதில்லை; தயங்காமல் செலவு செய்கிறான். அந்த வகையில் அவர் அதிர்ஷ்டசாலிதான்! இன்று மாலை ஆஸ்துமா சிகிச்சைக்காக அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கி இருக்கிறார்.

சந்துரு வீடு திரும்பியதும் டாக்டரிடம் அழைத்துப் போவான். மருமகளுக்கு ஆபீஸ், வீடு இரண்டிலுமே வேலை சரியாக இருக்கும். அவளைத் தொந்தரவு செய்ய முடியாது. அதனால்தான் காலையில் புறப்படும்பொழுதே சந்துருவுக்கு நினைவூட்டி விட்டார். அவனும் மாலையில் வீடு திரும்பியதும் புறப்படலாம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.


மதிய உணவுக்குப் பிறகு லேசாகக் கண்களைச் சுழற்றியது. தூங்கிவிடக்



வாழும் மனித ஜாதி!

எஸ்.குமார்





மாலை மருமகள் காபி கலந்து எடுத்து வந்தாள்.

அதைக் குடித்துவிட்டு மகனுடைய வருகைக்காகக் காத்திருந்தார். ஆனால் சந்துரு வரவில்லை. அவசர வேலை இருப்பதாகவும், மனைவி மல்லிகாவைக் கூட்டிக்கொண்டு போகுமாறும் தொலைபேசினான்.

மருமகளைக் கூட்டிச் சென்றால் அவளும் இவரோடு காத்திருக்க நேரிடும். அலுப்பாக உணரலாம். அவர் தனியே புறப்பட்டுத் தெருமுனையில் ஆட்டோ பிடித்தார்.

கொஞ்ச நேரத்திலேயே டாக்டரைப் பார்த்தாகிவிட்டது. நீளமான ப்ரிஸ்க்ரிப்ஷனுடன் அடுத்த மாதத்துக்கான அப்பாய்ண்மெண்ட்டையும் கொடுத்தார் டாக்டர். வெளியே வந்தபோது தெருவிளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. அருகிலிருந்த ஆட்டோ ஸ்டாண்டுக்கு வந்தார். முன்னதாக நிறுத்தியிருந்த டிரைவரிடம் போக வேண்டிய இடத்தைச் சொன்னார்.

''இருபது ரூபா கொடுத்துடுங்க'' என்றான், அந்த இளைஞன். பேரம் பேச பதினைந்துக்குப் படிந்தான்.

ஆட்டோ புறப்பட்டது. ''டாக்டர்கிட்ட வந்து போறீங்களா?'' என்றான் டிரைவர் இளைஞன்.

''ஆமாம், பையன் ஸ்கூட்டர்ல வந்துடுவேன். இன்னிக்கு அவன் இன்னும் ஆபீசிலிருந்து வரலே... உனக்கு இங்கேயே வீடா?''

''இல்லை, ஒட்டேரியில இருக்கு. அங்கே கொஞ்சம் வாடகை கம்மி.''

''கல்யாணமாயிடுச்சா?''

''ஆயிடுச்சிங்க. ரெண்டு குழந்தைங்க இருக்கு''

ஆட்டோ வீட்டின் முன்னால் நின்றது.

அவர் கீழே இறங்கினார்.

பாக்கெட்டைத் துழாவிப் பதினைந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

அடுத்த செக்அப்புக்குப் போக வேண்டிய நாள்.

அன்றும் சந்துருவால் வர முடியாமல் போனது. ஸ்கூட்டர் பழுதாகிவிட்டது.

கூடாது. இப்பொழுது தூங்கிவிட்டால் இரவெல்லாம் தூக்கம் வராது.

மனைவி இருந்தவரை உடனிருந்து பேசவோ, கேட்கவோ ஆளிருந்தது. புண்ணியவதி... அவளும் போய்விட்டாள்.

சந்துரு வருகிறவரை பொழுதைப் போக்க வேண்டும். அவருக்குத் தொலைக்காட்சியைப் பார்க்கப் பிடிக்காது; பேப்பர்தான் ஒரே துணை. ஓர் எழுத்து விடாமல் படிக்கத் துவங்கினார். காலமானவர்கள் பட்டியலைப் பார்க்கும்போதுதான் மனசு கலங்கியது.

மரணம் தவிர்க்க முடியாததுதான்! என்றாலும் அதை ஏற்கும் பக்குவம் வரவில்லை.

அஞ்சலி



கல்கி இதழில் ஏராளமான சிறுகதைகளையும் பல பிரபலமான தொடர்களையும் எழுதியவர். அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் மூலமாகவும் வாசகர்களைச் சென்றடைந்தவர் எழுத்தாளர் பி.வி.ஆர்.

22.11.06 அன்று பி.வி.ஆர் என்னும் பி.வி. ராமகிருஷ்ணன் காலமானது எழுத்துலகில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வலுவான பாத்திரப் படைப்புகள் மட்டுமின்றி நுணுக்கமான கள ஆய்வுகளும் இவருடைய தொடர்கதைகளுக்கு நயம் சேர்த்தன; தனித் தன்மை அளித்தன.

தமிழ் வாசக உலகம் சார்பாக பி.வி.ஆருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

அடுத்த இதழில் அவருடைய படைப்புகளிலிருந்து சில பகுதிகள் இடம் பெறும்.

\- ஆர்.

அதை மெக்கானிக் ஷெட்டில் விட்டு விட்டு அவனே பஸ்ஸில் போக வேண்டியதாகிவிட்டது.

அன்றும் சபேசன் தனியாகவே போய் டாக்டரைப் பார்த்துவிட்டு, ஆட்டோ பிடிக்க ஸ்டாண்டுக்கு வந்தபோது, அதே இளம் டிரைவர்.

"என்ன சார், வீட்டுக்கா?"

"ஆமாம்பா."

"உட்காருங்க."

ஆட்டோ புறப்பட்ட பிறகுதான் அவர் அந்த வாசனையை உணர்ந்தார்.

"என்னப்பா, நீ குடிச்சிருக்கியா?"

"மன்னிச்சிக்குங்க சார். வீட்டுக்குப் புறப்பட்டுக்கிட்டு இருந்தேன். நீங்க வரலேன்னா போய்ட்டிருப்பேன்."

"என்னப்பா இது, வாடகை குறைவா இருக்கற இடத்தில் குடியிருக்கேன், ரெண்டு குழந்தைங்க இருக்காங்கன்னெல்லாம் சொன்னே! குடிக்க மட்டும் காசு செலவு பண்ணுவியா?"

"தப்பா நினைச்சுக்காதீங்க சார். நான் எப்பவும் குடிக்கிறவன் இல்லே. வயித்து வலி வரும்போது மட்டும்தான்! வலியை மறக்கக் கொஞ்சம் குடிப்பேன்."

"நல்ல நியாயம்தான்! வலியைப் போக்க டாக்டரை இல்லே பார்க்கணும்!"

"போனேன், சார். ராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலதான் பார்த்தேன். கொஞ்ச நாள் மருந்து, மாத்திரை கொடுத்தாங்க. ஒண்ணும் பிரயோஜனமில்லே. ஸ்கேனுக்கு எழுதிக் கொடுத்தாங்க. ஆனா மிஷின் ரிப்பேர். அது சரியாகிற வரைக்கும் வலியோட எப்படி வாழறது?"

"ஏன், மருந்து மாத்திரை எடுத்துக்கலாமே!"

"அதை வாங்க அரைநாள் ஆஸ்பத்திரியில நிக்கணும். பொழப்பு கெட்டுப் போயிடும், சார்"

அந்தத் தர்க்கம் முழுமையாக அவருக்குப் புரியவில்லை.

ஒன்று மட்டும் புரிந்தது.

மருத்துவமும் தொழில்நுட்பமும் ஏராளமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆனால்-

அவரவர் வாழ்க்கைத் தரத்துக்கு ஏற்ற மாதிரிதான் அவை மனிதர்களுக்குப் பயன்படும்.

ஆட்டோ நின்றது. அவர் கீழே இறங்கினார். மனதில் பரிதாபம் உந்த அவர் இருபது ரூபாயை எடுத்துக் கொடுத்தார். அவன் ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு, ஆட்டோவைக் கிளப்பினான். ○

குறும்படம்

ஆரார் ஆசைப்பட்டார்!



கர்நாடக இசைக் கலைஞர் சஞ்சய் சுப்பிரமணியனைப் பற்றிய குறும் படம் ஒன்று, சென்ற வாரம் 'த ஹிந்து' நாளிதழ் நடத்திய இசைவிழாவின் ஓர் அங்கமாகத் திரையிடப்பட்டது.

கலை விமர்சகர், கலை சார்ந்த சிந்தனையாளர் என்ற முறையில் மட்டுமே அறியப்பட்ட பிரசன்னா ராமசாமி, திறமையான இயக்குநரும்கூட என்ற பரிமாணம் இந்தப் படத்தில் வெளிப்பட்டிருக்கிறது. இல்லை என்றால், ''அடடா, இந்தப் படத்தை நான் எடுக்காமல் போய்விட்டேனே!'' என்று இயக்குநர் ராஜீவ் மேனனிடமிருந்து ஏக்கம் கலந்த விமர்சனம் வெளிப்பட்டிருக்குமா!

ஜெயகாந்தன், சுஜாதா, சா.கந்தசாமி, மருது என்று இலக்கிய, ஓவிய வட்டார முக்கிய புள்ளிகளுடன், கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசுவையும் அரங்கில் காண முடிந்தது.

''இந்த குறும் படத்தைத் தயாரிக்க வேண்டும் என்று உங்களுக்கு ஏன் தோன்றிற்று?'' என்ற கேள்விக்குப் பதில் சொன்னார் பிரசன்னா :

''எனக்கு சஞ்சயின் இசை மிகவும் பிடிக்கும். அந்த நாளைய பெரிய வித்வான்கள் சுமார் நாற்பது வருடங்களில் பாடியதை, இருபது வருடங்களில் பாடியிருக்கிறார். அவர் இசையை வெளிப்படுத்துகிற பாணி புத்தம் புதிதாக இருக்கிறது. வெகு இயற்கையாகப் பாடுகிறார். திராவிட பாரம்பரிய அழகுணர்ச்சி அவர் இசையில் ஆழப் பதிந்து போயிருக்கிறது!''

நாதசுர மேதை செம்பனார்கோயில் வைத்தியநாதனிடம் சஞ்சய் உரையாடுவதும், பாடல் கற்பதும் வெகு இயற்கையாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

'காலைத் தூக்கி நின்றாடும்' பாடல் காட்சியும் பிச்சாவரம் ஏரியில் சிந்தனையில் மூழ்கிய சஞ்சயின் படகுப் பயணமும், கபாலி கோயில் உற்சவமும், சந்தடி நிறைந்த நகர வாழ்க்கையும், காமிராக்காரர்கள் ஆர்.வி.ரமணி, எம். ஜே.ராதாகிருஷ்ணன் கைகளில் கவிதைகளாக வெளிப்பட்டிருக்கின்றன.

* பிரசன்னா

சஞ்சயுடைய வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளை ஒரு 'கொல்லாஜ்' பதிவாக அமைத்திருப்பது ஒருபுறம்... சஞ்சய் என்ற பாடகரின் இசை இந்தக் கால கட்டத்தில் எப்படி இருந்தது என்று பதிவு செய்திருப்பது இன்னொரு புறம். அதே சமயம், சஞ்சய் என்ற பாடகரின் முழு வீச்சும் 85 நிமிட அவகாசத்தில், திரையில் வெளிப்பட்டிருப்பது படத்துக்கு வெற்றி!

டாகுமெண்டரி முடிகிற தறுவாயில், 'மானாட மழுவாட' விருத்தம் பாடி, கடைசியில் 'ஆரார் ஆசைப்படார்' என்று முடிக்கிறபோது நம் மனசைத் தொட்டுவிடுகிறவர் சஞ்சய் மட்டுமல்ல, பிரசன்னாவும்தான்.

கோயிலுக்குப் போய்வந்த புனித உணர்வையும், நாலைந்து நல்ல கச்சேரிகளுக்குப் போய் வந்த இசையின் பத்தையும் இந்தக் குறும்படம் தந்தது உண்மை!

- சாருகேசி



* வைத்தியநாதனுடன் சஞ்சய்...

துள்ளித் திரிந்த காலம்

1996-ஆம் வருடம், ஏப்ரல் மாதம். திருவான்மியூர் பகுதியிலிலுள்ள ராமர் கோயிலில் ஸ்ரீராமநவமி உற்சவத்தில் என்னைப் பாட அழைத்திருந்தார்கள். மாலை ஆறரை மணிக்குப் போனேன். அங்கே செம்மங்குடி மாமா வரப் போகிறார் என்றார்கள். இன்ப அதிர்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்! மாமா வந்தார். "நான்தாண்டா நிகழ்ச்சியைத் துவக்கி வைக்கிறேன். அரை மணி நேரம் இருப்பேன்'' என்றார். நான் டென்ஷன் ஆகிவிட்டேன். ஒரு பரபரப்புடனேயே துவங்கி அச்சேவையை நிறைவு செய்தேன். முழுக் கச்சேரியையும் கேட்டார் மாமா. பின்னர் கிளம்பிவிட்டார்.

மேடையிலிருந்து கீழே இறங்கியவுடன் என் அப்பா என்னைக் கூப்பிட்டார். "டேய்... மாமா உன்னை அவரிடம் மேலும் கற்றுக் கொள்ள வரச் சொல்லியிருக்கார்'' என்றார். அந்தத் தருணம் இறக்கை இல்லாமலேயே வானத்தை வட்டமடித்தேன். என் வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாத நிமிடங்களில் அதுவும் ஒன்று; என் முதல் குருநாதர் சீதாராம ஷர்மா.

மற்றபடி துள்ளித் திரிந்தது என் பள்ளிப் பருவத்தில்தான். நான்காம் வகுப்பு முதல் +2 வரை கிருஷ்ணமூர்த்தி ஃபவுண்டேஷன் நடத்திவரும் பள்ளியில் படித்தேன். மற்ற பள்ளிகளைப் போலக் கையில் பிரம்பை வைத்துக்கொண்டு சுழற்றும் ஆசிரியை, ஆசிரியர்கள் அங்கே கிடையாது. வாழ்க்கையில் இன்று நான் கடைபிடிக்கும் நல்ல பண்புகள், ஒழுக்கம் ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது அந்தப் பள்ளிதான். அங்கே ஆசிரியைகளை அக்கா என்றும் ஆசிரியர்களை அண்ணா என்றும்தான் அழைப்போம். 'உனக்குள்ளே இருக்கிற திறமையை அறிந்து அதைக் கொண்டு வர நாங்கள் இருக்கிறோம்' என்று நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டிய பள்ளி. எல்லாப் போட்டிகளும் நடக்கும். பரிசுகள் கொடுத்து யாரையும் உயரத்தில் நிற்க வைக்க மாட்டார்கள். 'இன்று நீ முதல் பரிசைத் தட்டிச் சென்றாய்; நாளை மற்றொருவன் முதல் பரிசைத் தட்டிச் செல்ல வருவான்' என்ற எண்ணத்தை உருவாக்கும் நோக்கம்தான் அது. அங்கே எனக்கு வீணா, சித்தார்த், தனலட்சுமி போன்ற பல நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள்.

பள்ளியில் யாருக்கும் பரீட்சை பயம் இருக்கக் கூடாது என்பது எழுதப்படாத சட்டம். ஒன்பதாவது படிக்கும்போது பரீட்சை நெருக்கத்தில் கொடைக்கானலுக்குச் சுற்றுலா போய்விட்டோம். மலையேறுவது, இரவில் நெருப்பு மூட்டி, சுற்றி ஆடல், பாடல் என்று மறக்க முடியாத கொண்டாட்டம் அது! பள்ளியில் நான்தான் ஆஸ்தான வித்வான். எந்த கல்சுரல்ஸிலும் என் பாடல் ஒலிக்கும். கல்சுரல்ஸின் ஆடல், பாடல், நாடகம் ஐடியாக்கள் 75 சதம் மாணவ, மாணவிகளிடமிருந்துதான் வரும். என் பாட்டார்வத்துக்கு முற்றிலும் உதவி, ஊக்கப்படுத்தியது பள்ளி. பாடல் போட்டிகளுக்குச் செல்லும்போது விடுமுறை எடுத்தால் கேட்க மாட்டார்கள். இன்னமும் பளிச்சென்று நினைவில் இருப்

துண்டுச் சீட்டில் துள்ளல் செய்தி!

வாழ்வின் மறக்க முடியாத நாட்களைப் பற்றிப் பிரபலங்கள் பேசும் பகுதி

பாடகர் டி.எம்.கிருஷ்ணா

பது காலநிலையைப் பற்றிப் போட்ட 'ரிது' என்ற நாடகம். இசைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் போடப்பட்ட அந்த நாடகத்தில் பாகவதர் படம்போலத் தொடர்ந்து எனக்குப் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்த ஜெயஸ்ரீயக்கா, இப்போது என் மகளுக்கும் கற்றுத் தருகிறார்.


பாடல் போட்டிகளில் பரிசு வாங்காவிட்டாலும், மனம் தளர மாட்டேன். அதற்குப் பள்ளியில் கற்றுக் கொடுத்த மனப்பாங்கு தான் காரணம்!



* இளவயதில்...

சங்கீதத்துக்கு அடுத்தபடியாக என்னைச் சந்தோஷப்படுத்துவது கிரிக்கெட். ஆறரை மணி கச்சேரிக்கு ஆறு மணி வரை தொலைக்காட்சியில் மேட்சைப் பார்த்துவிட்டுத்தான் போவேன். இதுபோலத்தான் ஒரு வருடத்துக்கு முன்பு இந்தியா - நியூஸிலாந்து மேட்சைப் பார்த்துவிட்டு ஹம்ஸத்வனி ஏற்பாடு செய்த கச்சேரிக்குச் சென்றேன். 'என்ன மேட்சா?' என்று கிண்டல் செய்தார் சபா செயலாளர். கச்சேரி துவங்கியது. இடையில் ஒரு துண்டுச் சீட்டு வந்தது. 'யார் என்ன பாட்டு கேட்டிருக்கிறார்களோ?' என்ற ஆர்வத்தோடு பிரித்துப் படித்தால், 'இந்தியா நியூஸிலாந்தை வென்றது' என்று சீட்டில் இருந்தது. அதன் பிறகு கச்சேரி சதாப்தி வேகத்தில் ஜிலுஜிலுவெனத் தொடர்ந்தது. 'அந்தச் செய்தி உன்னை உற்சாகப் படுத்தும் என்று நான்தான் அனுப்பி வைத்தேன்' என்று பிறகு, நமுட்டுச் சிரிப்புடன் சொன்னார் செயலாளர்.

சந்திப்பு: **ப்ரியன்**



என் மகன் ஒரு பெண்ணைக் காதலித்தான். சில காரணங்களால் அது கைகூடவில்லை. எந்த நேரமும் பித்துப் பிடித்தாற்போல் இருக்கிறான். பல சிகிச்சைகள் அளித்தும் பலனில்லை. இதற்கு மலர் மருத்துவத்தில் ஏதேனும் தீர்வு உண்டா?

- கு. மகேஸ்வரி, சென்னை

டாக்டர் பிரபா (மலர் மருத்துவர்) :

மனநல பாதிப்பின் முந்தைய கட்டம் மனநிலை பாதிப்பு. இதுதான் உங்கள் மகனது பிரச்னைக்குக் காரணம். இதை இப்படியே விட்டுவிட்டால் மனநிலை கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கப் பட்டு மனநல பாதிப்பாகிவிடும். மலர் மருத்துவத்தில் இதற்குத் தீர்வு உள்ளது. இங்கிலாந்தில் மட்டுமே வளரும் ஒரு விதமான மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட சாற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்ட மாத்திரைகளையும், மலர் மருத்துவரின் ஆலோசனையையும் பெற்றுச் செயல் பட்டால் மனநிலை பாதிப்பிலிருந்து நிச்சயம் விடுபடலாம். இச்சிகிச்சை பக்க விளைவு இல்லாதது!

• டாக்டர் துளசிதாஸ்



• டாக்டர் பிரபா



• டாக்டர் சங்கர்



வாசனை

தினமும் சோப்பு, பவுடர், செண்ட் உபயோகிக்கிறேன். ஆனால் வாசனையை நுகர முடியவில்லை. பூவின் மணமும் தெரிவதில்லை. என்ன காரணம்? சிகிச்சையால் இந்தக் குறைபாட்டை நீக்க முடியுமா?

- ஆர். மதுமிதா, சென்னை

டாக்டர் துளசிதாஸ் (காது, மூக்கு, தொண்டை நிபுணர்) :

முதல் காரணம், மூக்கடைப்பு. அதை முதலில் சரிசெய்ய வேண்டும். ஒவ்வாமையால் (அலர்ஜி) அடைப்பு என்றால், மருந்து போடலாம். சதை அடைப்பாக இருந்தால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்.

வாசனைத் திறன் கோளாறு பல வகைப்படும். ஜலதோஷம், சளி, சைனஸ் போன்றவற்றாலும் தொடர்ந்து மூக்குப் பொடி போடுவதாலும் வாசனைத் திறன் குறையும் வாய்ப்புண்டு. இவர்களுக்கு 'ஸ்டீராய்டு நேசல் ஸ்ப்ரே'யை மூக்கில் செலுத்துவதன் மூலம் இழந்த திறனைத் திரும்பப் பெறலாம். சுவாசப் பாதையில் கட்டியோ, தடையோ ஏற்பட்டால் ஆபரேஷன் செய்து வாசனைத் திறனைப் பெற வழி உண்டு.


தொடர் மூக்கடைப்பினால் வாசனைத் திறன் இழப்பு மட்டுமல்ல, மூக்கின் அமைப்பே மாறுபடும்; நுனிப் பாகம் சிறுத்துவிடும். வாயினால் மூச்சு விடுவதால் மேல் முன் பற்கள், முன் பக்கமாக நீட்டிக்கொள்ளும். அதிக நாள் மூக்கடைப்பினால் காது கேளாமை ஏற்படும். தொண்டை உலர்ந்து போவதால் தொண்டைப் புண்ணும் உண்டாகிறது. மூளை சம்பந்தப்பட்ட ஆபரேஷன்களால் சில சமயங்களில் நுண்ணிய நரம்புகள் துண்டிக்கப்பட்டு, அதனாலும் வாசனை உணர்ச்சிகள் இல்லாமல் போகும். இத்தகையவர்கள் ஆயில் வாசனையை அறிய முடியாது.



தெரியாதது ஏன்?

கெமிக்கல் தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் நிக்கல், குரோமியம், அமோனியா போன்ற சக்தி வாய்ந்த கெமிக்கல்ஸை நுகர்ந்து விடுவ தாலும் வாசனை அறியும் சக்தியை இழக் கின்றனர்.

இரத்தக் கொதிப்பு, காசநோய், தைராய்டு, கேன்சர் ஆகியவற்றுக்காக எடுத்துக்கொள்கிற மருந்துகளும் வாசனைத் திறனை இழக்க வைக்கிற காரணங்களில் முக்கிய பங்கு வகிக் கின்றன.



'அக்குபங்சர் டாக்டர்' என்று தகுதியில்லாதவர்களெல்லாம் பெயர்ப் பலகை வைத்துக் கொண்டுள்ளார்களே! உண்மையில் இவ்வைத்திய முறை அறிவுபூர்வமானதுதானா?

- ப. ராஜதுரை, கம்பம்


டாக்டர் சங்கர்
(அக்குபங்சர் நிபுணர்)

ஐயாயிரம் வருடங்களுக்குப் பழைமையான, சித்தர்களால் கையாளப்பட்டு வந்த இந்த மருந்தில்லா மருத்துவக் கலை, தற்போது சிலரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவது மறுக்க முடியாத உண்மையே. ஆனால் இம்மருத்துவ முறையில், மற்ற முறைகளால் தீர்க்க இயலாத பல்வேறு உடலியல், மனோவியல், நரம்பியல் கோளாறுகளைக் குணப் படுத்தலாம். உலக சுகாதார மையம் தமது 25 ஆண்டு கால ஆராய்ச்சிகளுக்குப் பின்பு, சுமார் 115 முக்கிய நோய்களை அக்குபங்சரால் குணப் படுத்த இயலும் என்கிறது.

நோயின் மூலத்தை அறிந்து, அதைக் குணப் படுத்துவதற்கு பதிலாக உபாதைகளைக் கட்டுப் படுத்தும் முறைகளைச் செய்யும் சிலரால்தான் இம்மகத்தான மருத்துவ முறை அவப்பெயர் பெற்று வருகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாக வெற்றிகர மாகக் கையாளப்பட்டு வரும் இந்த அறிவுபூர்வமான மருத்துவமுறையின் தத்துவங்கள், புள்ளிகளில் எவ்வித மாற்றங்களும் கிடையாது. சரியான நிபுணரை நாடினால், இதன் மகத்துவத்தை எளிதாகப் புரிந்துகொண்டு பயன் பெறலாம்.

தொகுப்பு : வினோ
படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்



காதலுக்கு டெஸ்ட் வைத்த பாரதிராஜா!



கோலாகலமாக நடந்து முடிந்திருக்கிறது பாரதிராஜாவின் மகன் மனோஜ் - நடிகை நந்தனா திருமணம். மூத்த அண்ணனைப் போல மிகுந்த ஈடுபாட்டுடன் இளையராஜா, தம்பதி சமேதராக வந்திருந்து, திருமணத்தை முன்னின்று நடத்தியதுதான் கோலிவுட்டின் லேட்டஸ்ட் டாக்! நிச்சயதார்த்தத்தின்போது, பாரதிராஜா குடும்பத்துடன் சேர்ந்து அமர்ந்து, சம்பந்தி வீட்டாருடன் தாம்பூலம் மாற்றிக் கொண்டதுடன், மறுநாள் முகூர்த்தத்தின்போது தாலி எடுத்துக் கொடுத்தவரும் இளையராஜாதான்!

நவம்பர் பத்தொன்பதாம் தேதி திருமணத்துக்கு, பாரதிராஜா குடும்பத்தினர், உறவினர், இதர திரையுலக நண்பர்கள் என்று மொத்தம் நூற்றுமுப்பது பேர் பதினேழாம் தேதி மாலையே மங்களூர் எக்ஸ்பிரஸில் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். கோழிக்கோட்டில் மூன்று பெரிய ஓட்டல்களில் அனைவரும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பதினெட்டாம் தேதி மாலை ஹோட்டல் மலபார் பேலஸில் நிச்சயதார்த்தம்; மறுநாள், ஆசீர்வாத் திருமண மண்டபத்தில் முகூர்த்தம். உள்ளூர்த் தமிழ்ச் சங்கத்தினர் விருந்தினர்களை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும் ஆர்வமுடன் முன்னின்றிருக்கிறார்கள்.

திருமணம் முடிந்த அன்று மாலையே புது மணத் தம்பதி உட்பட அனைவரும் சென்னைக்கு ரயிலேறிவிட்டனர். உணர்ச்சிப்பொங்க, கண் கலங்கி நந்தனாவின் பெற்றோர் வழியனுப்பி வைக்க, பாரதிராஜா, "அவ இனிமே எங்க வீட்டுப் பொண்ணு. நீங்க கவலையேபடாதீங்க" என்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

"உங்கள் படங்களில் நிறைய காதலர்களுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சிருக்கீங்களே! உங்க வீட்ல ஒரு காதல் கல்யாணத்தை நடத்த வேண்டியிருக்கும் என்று நீங்க நினைச்சீங்களா?" என்று ரயில் பயணத்தின்போது ஒரு நண்பர் கேட்க,


"நான் எதிர்பார்க்காவிட்டாலும், இவர்கள் காதலைப் புரிந்துகொள்ள முடிந்தது. இருவரும் ஒருவரையொருவர் எவ்வளவு சீரியஸாகக் காதலிக்கிறார்கள் என்று அறிய ஒரு டெஸ்ட் வைத்தேன்; தேறி விட்டார்கள். திருமணத்துக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டேன்" என்றாராம் பாரதிராஜா!

- மௌலி

படம்: யோகா

மங்கையர் மலரின்

திருமண மலர்



இணைப்பிதழ்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில்
வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. **800/-**

(அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. **15/-**)

வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க **Profile** விளம்பரம் ரூ. **2500/-**

வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.

கட்டணத்தை, நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, "மங்கையர் மலர்" என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032. தொலைபேசி: 2225 1522 / 2225 1324

Fax: 044-2225 1021 email: marketing@kalkiweekly.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.